# கலைமன்றம்

ஆசிரியர்: பால்வண்ணன்

CONNEMARA PUBLIC LIBRARY
AUG 195



784
2.58
MPS

# கலைமன்றம்

ஆசிரியர் : பால்வண்ணன்

7 - AUG 1956



## இதனுள்


| | | |
|---|---|---|
| கார்ட்டூன் | | 2 |
| திருந்துவார்களா! | (தலையங்கம்) | 3 |
| முகப்புச் சித்திரம் | | 6 |
| பிரிவின் துயரம் | (கவிதை) | 8 |
| தயிர்ச் சாதம் | | 10 |
| அவனும் கணவன் | | 15 |
| இன்பக்கண்ணீர் | | 20 |
| காதல் உள்ளம் | | 33 |
| அக்கினிக் கோபம் | | 41 |
| சரியான பரீட்சை | | 49 |
| குறளின்பம் | | 54 |
| அத்தை மகள் | | 59 |
| ஆதிக்க அலை | | 69 |
| திரை அரங்கம் | | 75 |
| கிளைக்கழகத் தேர்தல்கள் | | 76 |
| உலக அரங்கம் | | 78 |
| கேளுங்கள் | | 79 |


மலர் 2 — ஏப்ரல் 9 — இதழ் 15

கதை, கவிதை, நாடகம் கற்பனை.

திராவிடர் முற்போக்கு வார இதழ்




ராமாயணக் காட்சி — பாரதக் காட்சி

7-AUG 1958


# கலை மன்றம்

ஆசிரியர் : பால்வண்ணன்

சென்னை | 9—4—55 | சனி


# திருந்துவார்களா!

ஆரிய மார்க்கமும், அதுபோதிக்கும் ஆகாத போதனைகளும், ஆரியரல்லாத மக்களுக்கு இன்றுவரை எந்தவிதமான நன்மையும் செய்ததில்லை! அந்தமார்க்கமும் அதன் கொள்கைகளும் ஆரியருக்கே நன்மைகள் புரிந்துவந்தன—வருகின்றன—வரும் என்பதில் எவரும் ஐயம் கொள்வதற்கில்லை.

எங்கும்—எப்போதும் ஆரியர் வாங்கும் பழக்கம் வைத்துக் கொண்டிருக்கின்றனரேஒழிய கொடுக்கும் பழக்கம் அவர்களுக்கு இல்லை- இப்படிக்கூறுகிறது அவர்கள் சாஸ்திரம்.

கல்யாணம், கருமாதி முதலிய இன்பதுன்ப நிகழ்ச்சிகளில் தலைமைவகித்து வருவாய் உண்டுபண்ணிக்கொள்ளும் சுயநலப் பழக்கம்தான் அவர்களுக்கு இருந்து வருகிறதேயொழிய கொடுக்கும் புத்தி—இரக்கம் காட்டும் சித்தம் இருந்ததைச், சாஸ்திரங்களும்—சடங்குகளும் நமக்குக் காட்டிதில்லை.

இந்த உண்மையை நன்கு எடுத்துவிளக்க வடநாட்டில் ஒரு விசித்திரமான நிகழ்ச்சி ஒன்று நடைப்பெற்றது சமீபத்தில்.

நேபாள மன்னர் திரிபுவனரது பதினோராம் நாள் ஈமச்சடங்கு நடந்தது. அந்தச் சமயத்தில் ஸ்ரீ கிருஷ்ணபட்டர் என்னும் ஓர் ஏழைப் பார்ப்பான் மன்னருடைய பெரும் பொருளைப் பெற்றுக் கொண்டானாம்.

எப்படி பெற்றுக்கொண்டான் அன்பளிப்பாகவா? அல்ல! ஆ[illegible]

பின்னர் மன்னர்மீது இருந்த பாசத்தால் மன்னர் அவனுக்கு எழுதிவைத்த சொத்து என்ற முறையிலா? இல்லை!

பின்னர்!

அந்தப் பிராமணன் மன்னரின் பேயுருவத்தைதாங்கிக்கொள்வதாக சம்மதித்தும்—மறுபடியும் நேபாளத்திற்கு வராமல் நாடு கடத்துவதை ஏற்றுக்கொண்டும் மன்னரின் பெரும்பொருளை பெற்றுக் கொண்டானும்.

அவன் ஊரைவிட்டு போகையில் அந்த ஊர்ப்பழக்கப்படி அவனை கற்களால் அடித்தும் கேலிகள்செய்தும் அனுப்பினராம். ஆனல் அந்த ஏழைப்பார்ப்பான் இதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல், மன்னரின் பொருள்களை ஏற்றிக்கொண்டு மன்னரின் சிகரெட் பிடிக்கும் கருவியை வாயில்வைத்து எந்தக் கவலையும் இல்லாமல் புகையை விட்டுக்கொண்டேசென்றானும்.

அவனுக்கு பாக்மதி ஆற்றங்கரையில் நிர்மாணிக்கப் பட்டிருந்த பந்தல்ஒன்றில் 'ராஜபோக' விருந்தொன்றும் தரப்பட்டதாம்

சுமார் இரண்டுலட்சம் ரூபாய் பொறுமான சொத்துக்களும், 10,000 ரூபாய் ரொக்கப் பணமும் பெற்றுக் கொண்டதுடன், இரண்டு யானைகள், ஒரு குதிரை, மன்னர் உறங்கிய உயர்தரக் கட்டில், சமையல் பாத்திரங்கள் இன்னும் பல பொருள்களும் அந்த ஏழைப் பார்ப்பனருக்குக் கிடைத்தனவாம்.

தனக்குத் தந்த பொருள்களெல்லாம் சரியாக இருக்கின்றனவா என்று சரிபார்த்துக் கொண்டபிறகுதான் யானையின்மீது ஏறி அந்த ஊரைவிட்டுச் சென்றானும். இந்தக் காட்சியைக்காண ஆயிரக் கணக்கான மக்களும், பல உயர்தர அதிகாரிகளும் வந்திருந்தனராம். இனிமேல் அவன் நேபாள எல்லைக்குள் வரக்கூடாதவாறு இராணுவத்தினரும் போலீஸ்காரரும் பார்த்துக்கொள்வார்களாம்.

இந்த இருபதாம் நூற்றுண்டில்நடைபெறும் நிகழ்ச்சி எப்படி இருக்கிறது பாருங்கள்! சாஸ்திரம்—சமயமதங்கள்—குருட்டுக்கோட்பாடுகள், மக்கள் முன்னேறமுடியாதவண்ணம் எப்படித் தடுத்திருக்கின்றன என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

இலட்சக்கணக்கான பணத்தை ஒரு ஏழை பார்ப்பனருக்குத் தருகிறது பழையமார்க்கம், அந்தப் பணத்தைக்கொண்டு நேபாள மன்னர் பெயரால் கல்விநிலையங்களை எழுப்புவது—ஏழ்மையை ஒழிப்பது போன்ற நன்மைகளை செய்யவேண்டும் என்கிறது புதியமார்க்கம். இதில் எது தேவை என்று நீங்களே முடிவுசெய்யுங்கள். சமயமதக் கொள்கைகள் மக்களை வாழ்விக்காது, "அறிவியக்கம் ஒன்றுதான் மக்களுக்கு வழிகாட்டும்" என்று இனியாகிலும் வைதீகர்கள் உணர்ந்து திருந்துவார்களாக!

# பகுத்தறிவு நூல்கள்

## அறிஞர் அண்ணாதுரை

| | ரூ. | அ. |
|---|---|---|
| வெற்றி முரசு ... | 1 | 0 |
| மகாகவி பாரதியார் ... | 0 | 8 |
| தீ பரவட்டும் ... | 1 | 0 |
| தேன் துளிகள் ... | 1 | 0 |
| புராண மதங்கள் ... | 1 | 0 |
| மறு மலர்ச்சி ... | 1 | 0 |
| இதன் விலை 3000 ... | 0 | 12 |
| தேவ லீலைகள் ... | 0 | 8 |
| நமது முழக்கம் ... | 0 | 8 |
| அண்ணாவின் உவமைகள் ... | 0 | 8 |

## ஊடுருவி

| | | |
|---|---|---|
| நான்ஏன் நாத்திகன்? (இங்கர்சால்) | 1 | 0 |
| வால்டையர் " ... | 1 | 0 |
| சீர்திருத்தம் " ... | 1 | 0 |
| மதங்கள் " ... | 1 | 0 |
| மூட நம்பிக்கை " ... | 1 | 0 |
| அறியாமை " ... | 1 | 0 |
| கடவுள் " ... | 1 | 0 |
| மக்கள் உரிமை " ... | 1 | 0 |
| தொழிலாளர் (மாஜினி) ... | 1 | 0 |
| நெப்போலியன் ... | 1 | 0 |
| ஒளி விளக்குகள் ... | 1 | 0 |
| மாஜி கடவுள்கள் ... | 1 | 0 |
| சீனத்துச் சிங்கம் ... | 1 | 0 |
| ரஸ்புடீன ... | 0 | 8 |
| நானா (எமிலிஜோலா) ... | 1 | 0 |
| திரும்பிப் போ! ... | 0 | 8 |
| சிறையில் திராவிடத் தலைவர்கள் | 0 | 8 |
| ஆகஸ்டு ஆறு ... | 0 | 8 |

## விருதை ந. இராமசாமி

| | | |
|---|---|---|
| இன்ப நிலா ... | 1 | 0 |
| வழுக்கி விழுந்தவள் ... | 1 | 0 |
| தளபதி ... | 1 | 0 |
| தாமஸ் மசாரிக் ... | 1 | 0 |
| கருமுகில் ... | 1 | 0 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| இலட்சியப் பெண் ... | 1 | 0 |
| என் மகள் ... | 0 | 8 |

## கவிஞர் சுப்பு ஆறுமுகம்

| | | |
|---|---|---|
| நல்ல பெண்மணி | 2 | 4 |
| வீரபாண்டியன் கட்டபொம்மன் | 1 | 0 |

## கோவி. மணிசேகரன்

| | | |
|---|---|---|
| புரட்சிப் புலவன் அம்பிகாபதி | 1 | 0 |
| ஜூலியஸ் ஸீஸர் ... | 1 | 0 |

## ஏ. வி. பி. ஆசைத்தம்பி

| | | |
|---|---|---|
| கசந்த கரும்பு ... | 1 | 8 |
| தனி அரசு ஏன்? ... | 1 | 0 |
| வாழ்க்கை வாழ்வதற்கே ... | 0 | 12 |
| இருண்ட வாழ்வு ... | 0 | 12 |
| கொலைகாரி ... | 0 | 12 |
| அவள் வாழ்வு ... | 0 | 8 |
| காதலும் கண்ணீரும் (அச்சில்) | 1 | 0 |
| மனைவி (அச்சில்) ... | 0 | 12 |
| முள் (அச்சில்) ... | 1 | 0 |

## மு. கருணாநிதி

| | | |
|---|---|---|
| தூக்கு மேடை ... | 1 | 8 |
| களத்தில் கருணாநிதி ... | 1 | 0 |
| பெருமூச்சு ... | 1 | 0 |
| சிந்தனை ஆழி ... | 1 | 0 |
| இரத்தச் சுவடு ... | 1 | 0 |
| புராண போதை ... | 1 | 0 |
| பலிபீடம் நோக்கி ... | 1 | 0 |
| இன முழக்கம் ... | 1 | 0 |
| நச்சுக் கோப்பை ... | 0 | 12 |
| வாழ முடியாதவர்கள் ... | [illegible] | 12 |
| கொலைக்களம் ... | 0 | 8 |
| பெரிய இடத்துப் பெண் ... | 0 | 8 |
| உணர்ச்சி மாலை ... | [illegible] | 8 |
| கருணாநிதியின் கருத்துரைகள் | [illegible] | [illegible] |
| தப்பிவிட்டார்கள் ... | [illegible] | [illegible] |

**ஸ்ரீ மகள் கம்பெனி**

சென்னை — கோவை — மதுரை

முகப்புச் சித்திர வரலாறு

## இயக்கவீரர்

# எம்.எஸ்.இராமசாமி

இராமநாதபுரம் மாவட்டத்தில் அருப்புக் கோட்டை ஒரு முனிசிபல நகரம். நெசவுத் தொழிலாளர் மிகுந்த இடம். 21—5—1914—ம் நாள் எம். எஸ். இராமசாமி அங்கு பிறந்தார். தாயார் மீனாட்சியம்மாள், தந்தை எம். சங்கரலிங்கம், ஏழ்மை மிக்க நெசவாளர் குடும்பம்: எனவே, மகனை அதிகம் படிக்க வைக்க முடியவில்லை. 13 வயது வரைப் படித்தார். பின்னர் தறி நெசவு செய்யப் பழக்கினார்கள். நான்கைந்து ஆண்டுகளில் இராமசாமி நெசவுத் தொழிலில் நல்ல தேர்ச்சி அடைந்தார். ஆயினும், அந்தத் தொழில், இராமசாமிக்கு இன்பம் ஊட்டுவதாக இல்லை. பிறகு, தச்சுவேலையும், கொல்வேலையும் பயின்றார், அதைத் தொடர்ந்து சைக்கிள், தையல் மிஷின், கடிகாரம் முதலியன ரிப்பேர் செய்யும் தொழில் செய்தார். அப்போது அவருக்குஓய்வு அதிகம் எனவே, ஏராளமான தமிழ் நூல்களைப் படித்தறிந்தார். தமிழில் மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது. அக்காலத்தில், அருப்புக் கோட்டையில் கந்தசாமி அடிகள் என்னும் பெரியார் ஒருவர் இருந்தார். அவர் சைவ சித்தாந்த நூல்களில் வல்லவராயும் தமிழில் பெரும் புலமைச் சான்றவராயும், அடக்கமே உருவானவராயும் இருந்தார். அவரை அணுகி, நமது இராமசாமி எழுத்து, சொல், பொருள் யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களையும் முறைப்படி கற்றார். அதே காலத்தில் அருப்புக் கோட்டையின் சுயமரியாதைத் தூண் போல் விளங்கிய சிவ. சண்முக சுந்தரம் அவர்களுக்கும் நமது இராமசாமிக்கும் நட்பு வலுப் பெற்றது. சண்முக சுந்தரம் நடுத்தர குடும்பத்தில் பிறந்தவர். இராமசாமியோ பரம ஏழை. ஆயினும், அவர்களுடைய நட்புமட்டும் கோப்பெருஞ் சோழனுக்கும், பிசிராந்தைக்கும் போல வளர்ந்தது. அதே சமயத்தில் அருப்புக் கோட்டைப் பாம்பலம்மன் கோவிலில் கந்தசாமி அடிகள் என்று மற்றோர் துறவி இருந்தார். அவர், தமிழ் வைத்தியத்தில் மகா மேதை. அவரிடம் நமது இராமசாமி வைத்தியம் கற்றார். சவுடார்பட்டி நடராச பிள்ளை என்பவரிடம் சோதிடம் கற்றார். இப்போது நமது இராமசாமிக்கு தச்சு, கொல் வேலையும் இன்பம் தருவதாக இல்லை. எனவே, பெரும் சோம்பேறியானார். புத்தகம் படிப்பதும், புராண இதிகாசப் பக்தர்களிடம் போய் கேலி செய்வதும் அரட்டை அடிப்பதுமே தொழிலாக இருந்தார். 1937—ம் ஆண்டில் அருப்புக் கோட்டையில் நெசவாளர் சங்

கத்தை நிறுவி நெசவாளரின் குறைகளைப் பற்றித் தீவிரப் பிரசாரம் செய்தார். அதைத் தொடர்ந்து 1938—ம் ஆண்டில் அருப்புக்கோட்டை தியாகராய வாலிபர் சங்கத்தில் சேர்ந்து இயக்கப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தார். இன்று தி. மு. க. பிரசாரர்களில் ஒருவராக இருக்கிறார். 13 வயதிலிருந்து கவிதை எழுதும் திறம் உள்ளவர். சோதிடப் பயிற்சி அதிகம் பெற்றவர் ஆகையால் சோதிடத்தைப் பொய் யென்று ஆணித்தரமாக விவாதிப்பார். தமிழ் வைத்தியம் தற்காலத் தொழிலாகவும், நல்ல பயிற்சியும் இருப்பதால், சித்தர்களின் மதக் கொள்கையை நன்கறிந்தவர். தமிழ் நாட்டின் ஆதி காலத்து விஞ்ஞானிகள் சித்தர்கள் என்பது இராமசாமியின் ஆராய்ச்சி முடிவு. இராமசாமியின் 17—வது வயதில் தெய்வானை என்கிற பெண்ணைத் திருமணம் செய்தார்கள். பின்பு அவருடைய 25—வது வயதில் தெய்வானை காலமாகி விடவே பார்வதி என்கிற இன்னொரு பெண்ணை இரண்டாவதாகத் திருமணம் செய்தார். இப்போது நமது இராமசாமிக்கு கலாநிதி என்கிற 15 வயதுப் பெண்ணும் புகழேந்தி என்கிற 2½ வயது பிள்ளையும் உள்ளனர்.

திராவிட இயக்கத்துக்காகப் பெரிதும் பாடுபட்டு வரும் தோழர் அவர்கள், நலம் பல பெற்று வாழ்வதோடு நல்ல செயல்களை நாட்டிற்குப் புரிவாராக!

## விளையாடுகிறார்கள்



# பிரிவின் துயரம்!

"புதுமதியன்"

1. அந்தியிலே மலர்மல்லிகையும்—அரு(கு)
ஆணை அழைத்திடும் பேடைச் சிட்டும்
சிந்திடுந் தேன்மொழி பேசுமுனை—எந்தன்
சிந்தையிலே விட்டுச் சென்றதடி!
சந்திக்க வேணு மென் ருசையினல்—உனைச்
சாரும் வழியெலாம் நோக்குகிறேன்
வந்திடு வாய் இந்த வேளையிலே—உன்றல்
வாடு முளத்தினை மாற்றிடுவாய்!

2. மேலைத்திசையினிற் செம்பருதி—சென்று
மேவிடநின்றிடும் மாலையிலே
பாலைப் பழித்திடும் வெள்ளைக் கொக்குப்—பல
காதல் துணையுடன் சென்றதடி!
பாலையளித்திடும் வெம்மையினும்—மனம்
பாய்ந்து தவிக்கிறதுன் நினைவால்
மாலை மயங்கிடும் வேளையிலே—வந்து
மன்னிடு வாய் என துள்ளத்திலே!

3. குயில் கூவி யழைத்திடும் போதினிலே—எங்கும்
கூடஒலிப்பது உன்றெலியே
மயிலாடிக் களித்திடுந் தோற்றமதில்—கண்டேன்
மெல்லியலாள் உந்தன் சாயலினை
துயிலாட நடந்திடு மென்னரசி—உன்றல்
துன்பமினிக் கணம் நான்சகியேன்
வெயில் இட்டகயலெனத் துள்ளுகிறேன்—உள்ள
வேதனை வந்து நீ போக்கிடுவாய்!

4. வெண்ணிறத் தண்கதிர் பாயவிட்டு—வரும்
வெண்ணிலவு முந்தன் வட்டமுகம்
எண்ணிடச் செய்கிறதென்ன செய்வேன்—இனும்
என்னை வதைத்திட வேணுமோடி!
கண்ணில் தெரிந்திடு மெப்பொருளும்—நீயாய்க்
கண்டு நகைக்கிற தெந்தனையே
மண்ணில் நீயன்றியே வேறெவரும்—எந்தன்
மாள்துயர் நீக்கிடார் வந்திடுவாய்!

5. புன்னை மரமுள தோப்பினிலே—பூக்கள்
வேண்டி நீ வந்து பொறுக்கையிலே
உன்னை நான் அன்றுதான் கண்டனடி—உடன்
உள்ளத்திலே அன்பு கொண்டேனடி
தென்னை மரத்தடித் தோட்டத்திலே—முல்லை
தோன்ற நகைத்தது ஏதுக்கடி?
என்னைப் புரிந்தன்றோ நீ சிரித்தாய்—வாரா(து)
ஏனங்கு நீ யின்னும் வாழுகிறாய்!

6. ஊருமுலகுஞ் சிரிக்குமென்று—இன்னும்
ஓடிவராதுள்ளாய் நாணப் பெண்ணே!
யாருடைக் காதலாய் ஆயிடினும்—இந்த
ஊருமுலகதை யேற்பதில்லை
வேறினி யென்ன உன்காதலுக்கு—நான்
வேண்டித் தவித்திங்கு வாடுகையில்
சேருந் துயர்தனை ஓட்டிடவே—நீ
சேர்ந்து மகிழ்விக்க வந்திடுவாய்!
அன்பு விழிதனைக் கண்டிடவும்—உன(து)
ஆசை முகத்தினை நோக்கிடவும்
என்பு கரைந்திங்கு ஓடிடவே—உள்ளம்
ஏங்கித் தவித்தெதிர் நோக்குகிறேன்
துன்பத்தினல் உயிர் போகுமுன்னே—இந்தத்
தோட்டமரத்தடி ஓடி வந்து
இன்பமளித் தெனக்குன் பிரிவின்—பெருந்
துன்பந் துடைத்திட வாராயோ!

# தயிர்ச்சாதம்

கே.கே.சாமி



[நடுப்பகல் 12 மணி. அலுவலகத்திலிருந்து அனல் பறக்கும் கண்களுடன் அவசர அவசரமாக வீட்டுக்கு வந்து சேருகிறுர், குமாஸ்தா **குப்பையா.** வீட்டு வாயிற்படியில் அவர் வருகையை எதிர்பார்த்து தயாராக அணி வகுத்து நின்ற அவரது 'அரை டஜன்' புத்திர பாக்கியங்களும் அவரை 'அப்பா, அப்பா' என்று அழைத்தபடி சூழ்ந்துகொள்கின்றனர்; மேலே விழுகின்றன—அன்பால்.]

குப்பையா: சீச்சி......கழுதைகளா, ஏமேலே விழாதீங்க...சுடுகாட்டுச் சாம்பல்லே புரண்ட மாதிரியிருக்கிற உங்க உடம்புகளைக் கொண்டு என் சுத்தமான துணிகளைச் சமயலறைச் சட்டி பிடித்த துணி மாதிரி ஆக்கிடாதீங்க...உம் ஓடுங்க...நாய்களா...

[குழந்தைகள் பயந்து ஓடிவிடுகின்றனர்.]

குப்: (தனக்குள்) வருஷா வருஷம் சம்பளம் கூடாட்டாலும் நம்ம பிள்ளைகள் எண்ணிக்கை மட்டும் கூடாம இருப்பதில்லே.........அடி சந்தானலக்ஷ்மி,...பேரே சந்தான லக்ஷ்மி! அதான் புத்திர சந்தானத்துக்கு குறைச்சலேயில்லே......... ஆனச் சோத்துக்குத்தான் 'தந்தான'ப் போடுது...

சங்: (சமையலறையிலிருந்தபடி) ஏன் வந்ததும், வராததுமா ஆல் இந்தியா ரேடியோ மாதிரி அலர்றீங்க? இதோ வர்றேன்......

[என்றபடி வருகிருள்]

குப்: ஆமா, நீ மட்டும் சாயாக் கடை கிராம்போன் மாதிரி கீச்சுக் குரல் பேசறதா நினைப்பாக்கும்... உன் சத்தம்தான் மறைந்த மாபெரும் வாகனம், 'டிராமை' எப்பவும நினைவு படுத்திக்கிட்டேயிருக்குதே!...அது சரிடி......சீக்கிரம் சாதம் போடுடி...

சங்: அஞ்சு நிமிஷம் பொறுங்க ...கொழம்பு கொதிக்க வேண்டியதுதான் பாக்கி.....

குப்: அம்மாடி! அஞ்சு நிமிஷமா? உன கொழம்பு கொதிக்கிறதுக்கு முந்தி என் வயிறு கொதிக்க ஆரம்பிச்சுடுமே!...

சங்: இந்தாங்க, ஒரேயடியாக் குதிக்காதீங்க...போயி குழந்தைகளோட விளையாடிக்கிட்டிருங்க..... அதுக்குள்ளே சமையலே முடிச்சிட்டுக் கூப்பிடறேன்...

குப்: ஆமா. உன் குழந்தைகளோட விளையாடிட்டா? அவ்வளவுதான்! நான் ஆபீசுக்குப் போகும் போது நிலக்கரிச் சுரங்கத்திலேயிருந்து வெளிவந்தவன் மாதிரி காட்சியளிப்பேன்!... உம்... குரங்குகளாப் பொறக்க வேண்டியது குழந்தைகளாப் பிறந்துடுத்து...

சங்: சரி சரி......யாருக்குமே தான் செஞ்சக் 'தப்பு'களைப் பார்க்கவே பிடிக்காதே?......நீங்க ஒண்ணும் குழந்தைகளோட விளையாட வேண்டாம்...பேசாம உங்க அறையிலே உக்காந்திருங்க, மலட்டு மனுசர் மாதிரி......

[என்று கூறிவிட்டுச் சமையலறைக்குள் சென்று மறைகிறாள்.]

குப்: உம்...மலட்டு மனுசனாயிருந்தாப் பரவாயில்லையே! அரை டசனைப் பெத்துட்டு அரை உயிராப் போனேனே!...நம்ம உதிரத்தை உறிஞ்சி உயிர் வாழ்ற மூட்டைப் பூச்சிமாதிரி நம்ம உழைப்பை உறிஞ்சியில்லே வாழுதுகள், நம்ம புத்திர பாக்யங்கள்?...எந்த நாட்டிலேயோ அதிகம் பிள்ளை உற்பத்திப் பெருக்கம் செய்வோருக்கு நிறைய சன்மானம் வருது எல்லாம் அளிக்கிறுங்களாமே......அந்த நாட்டிலே நான் பிறந்திருக்கக் கூடாதா...போயும் போயும் இந்தக் 'கர்ப்பத் தடை' நாட்டிலேயா பிறக்கணும்?

[எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணியபடி தன் அறையில் போய் அமர்ந்திருக்கிறார். சந்தானலக்ஷ்மி சொன்னபடி ஐந்து நிமிஷம் கழிந்துவிட்டது, ஐந்த்தாண்டுத் திட்டம் போல்! பத்து நிமிஷமும் ஆகிவிட்டது! கால் மணி நேரத்திற்குப் பிறகு சமையல் முடிந்தது. இலை போட்டாள், சந்தானலக்ஷ்மி]

சங்: இந்தாங்க, இலைபோட்டாச்சு...சாப்பிட வாலாம்...

குப்: (வந்தபடி) ஏண்டி, இலையையா சாப்பிடக் கூப்பிடறே?

சங்: தமாஷ் பண்ணினது போதும். சீக்கிரமாக் கால் முகம் கழுவிட்டுச் சாப்பிட உக்காருங்க...

குப்: (குஷியாக) என்ன கால் முகம் கழுவவா? ஏன் முழு முகத்தையும் கழுவக் கூடாதோ?

சங்: உம்...சோத்தைக் கண்டதும் ஐயாவுக்கு ஷோக்கு பிறக்குது!

[சிரித்தபடி சென்று கைகால் முகம் கழுவிவிட்டு வந்து சாப்பிட அமர்கிறார் குப்பையா. சந்தானலக்ஷ்மி பரிமாறுகிறாள்.]

குப்: (வியப்புடன்) ஏண்டி, ஏது ஒரு குரங்குக் குட்டி கூட இந்தப் பக்கம் வரக்காணோம்?... சோத்தைக் கண்டாப் போதும்? சோறே பாத்திருக்காத பிறவிகள் மாதிரி அடித்து விழுந்து வந்து மண்டுங்களே, அந்த மண்டுகள்!

சங்: நீங்கதான் வந்ததும் வராததுமா வள்ளுனு விழுந்தீங்களே! பிறகு எப்படி உங்களை அண்டும்? குமாஸ்தாக்களே, தங்கள் மீது மேலதிகாரிகள் உதிர்க்கும் வசவு முத்துக்களை அப்படியே கொண்டு வந்து கொட்டி வைக்கும் களஞ்சியங்களாகத் தானே தங்கள் பிள்ளைகளை உபயோகப் படுத்துறுங்க!

குப்: (நகைப்புடன்) அடடே! ஏதேது பெரிய அறிஞர் மகள் மாதிரி அளக்கிறே?

சங்: எங்கப்பா ஒண்ணும் உங்கப்பா மாதிரி குமாஸ்தா 'எந்திர'மில்லே! 'எழுத்தறிவித்தவன்

இறைவனாகும்'னு போற்றப்படும் குருவாக்கும்!

குப்: சரிசரி......உன் பிறந்த வீட்டுப் பெருமைப் புராணத்தை நிறுத்துடி!...சாம்பாரு வேம்பாறு ஓடாதபடி பாத்து ஊத்துடி, சோத்திலே!

[சந்தானலக்ஷ்மி சாம்பாரை ஊற்றுகிறாள். முதல் கரண்டிச் சாம்பாரை ஊற்றிவிட்டு அடுத்த கரண்டியை ஊற்றுகிறாள். சாம்பாருடன் ஒரு செத்த கருவண்டும் விழுகிறது. அது கண்டு அலறிப் புடைக்கிறார், குப்பையா.]

குப்:— (படபடப்புடன்) சாம்பாறிலே என்னடி பிணம்?

சந்: (கவனியாமல்) என்ன மணம்?...மஞ்சப் பொடி கொஞ்சம் அதிகமாச் சேந்துடுச்சு போல! மஞ்சள் மணம்...

குப்: (குறுக்கிட்டு) மணம் இல்லேடி......செத்தப் பிணம்டி...... கடைப்பிணமே!

சந்: (திடுக்கிட்டு) என்ன பிணமா!

குப்: (கருவண்டைக் காட்டி)... இந்தா பாருடி ஒரு கருவண்டு உன் சாம்பாறிலே விழுந்து தற்கொலை செய்திருக்கு!...உம் இந்த வண்டும் என்னைப போல பெரிய குடும்பி போல! பெண்டாட்டி புள்ளைக தொந்தரவு தாங்க முடியாம தற்கொலை பண்ணிக்கிட்டது போல!...

சந்: (வண்டை எடுத்துவிட்டு) ...இந்த வண்டுக்குத்தானு இப்படி ஆர்ப்பாட்டம் பண்றீங்க, ஏதோ மனுஷப் பிணமே கிடக்கிற மாதிரி?...சரிசரி...வண்டை எடுத்திட்டேன் சாப்பிடுங்க......

குப்: (கோபத்துடன் எழுந்து) என்ன? இந்தச் சோத்தையா சாப்பிடச் சொல்றே? இடியட்...

[என்றபடி 'படார்' என்று சந்தானலக்ஷ்மியை அறைகிறார்.)

குப்: பிச்சக்கார நாயே, வண்டு விழும்படியா அவ்வளவு அஜாக்ரதையா கொழம்பு ஆக்கியிருக்கே?.........வரவர ரொம்பத் திமிர் ஏறுதுடி உனக்கு...அட்ட தரித்திரமே! எவ்வளவு தைரியமா செத்த வண்டை எடுத்துப் போட்டுட்டு அந்தச் சோத்தை திங்கச் சொல்றே?...

சந்: ஆமா...ஓட்டல் சாம்பாறிலே பாச்சை, பல்லி கிடந்தாக் கூட சாப்பிடுவீங்க.........வீட்டிலேன்னு இப்படித்தான் ஆர்ப்பாட்டம் செய்வீங்க!...இந்த சாப்பாட்டை நீங்கள் சாப்பிடவேண்டாம்...வேற சாதம் தயிர் போட்டுக் கொண்டு வர்றேன்......சாம்பிடுங்க.

குப்: (கையை உதறியபடி) மூதேவி, நீ தயிர்ச் சாதமும் தர வேண்டாம்...பால் சாதமும் தர வேண்டாம்!...எனக்கு ஆபீசுக்கு நாழியாச்சுடி, நாயே! (என்றபடி 'மளமள' வென்று சென்று கையைக் கழுவிவிட்டு வீட்டைவிட்டு வெளியேறுகிறார்)

## காட்சி 2

[அஞ்சநேயா பவான் ஹோட்டல உள்ளே குப்பையா நுழைகிறார் ஹோட்டல் முதலாளி ஆஞ்சநேயலுவிடம் எட்டணவை 'சாப்பாடு டிக்கட்டுக்குப் 'பண்டமாறுதல்' செய்து சாப்பாடு டிக்கட்டுடன் சாபபிடும் பகுதிக்குச் செல்லுகிறார். அங்கே ஒரே கும்பல். அரை மணி நேரததுக்குப் பின் சாப்பிடும் பகுதி காலியாகிறது. குப்பையா இடம் பிடித்து அமர்கிறார். இச் சமயம்




முன் பந்தியில் சாப்பிட்டுவிட்டு கையலம்பிவிட்டு வந்த குப்பையா அலுவலக குமாஸ்தா பிரம்மசாரி சுப்பையா அவரருகில் வந்து அமர் கிறார்)

சுப்பையா: (கேலிப் புன்முறுவலுடன்) ஏது சார், திடீர்னு உங்களுக்கு இந்த கதி?

குப்பையா: எல்லாம் என் சதி (மனைவி), செய்த சதியால்தான் சார்!

சுப்: ஓஹோ! சமையற் கட்டு ராணியாரின் சத்யாக்ரகத்தால் நீங்கள் இந்த அஜீர்ணபவானில் சாப்பிடும் அபாக்ய நிலை ஏற்பட்டு விட்டதாக்கும்!......இந்த ஆஞ்சநேய பவானில் ஆஞ்சநேயர்கள் தான் சாப்பிட முடியும். நம்ம மாதிரி மனுசர்களாலே முடியாது!

குப்: உம்...இந்தக் 'கல்யாணம்'ங்கிற தவறைச் செய்ததாலேயே இப்படி ஆயுசு பூரா அவஸ்தைப் படுறேன்—...எந்தத் தவறுக்கும் இப்படிப்பட்ட கொடூரத் தண்டனை கிடையாது...கல்யாணங்கிற தவறைச் செஞ்சவங்களுக்குத் தான் இந்த ஆயுள் தண்டனை!

சுப்: என்னங்க சார், ஓரே வெறுப்பா பேசறீங்க?

குப்: உம்...நீங்க இன்னும் அந்தத் தவறைச் செய்யலே; தண்டனையும் அடையலே. நீங்களும் அனுபவப்பட்டால் எல்லாம் அறிஞ்சுக்குவீங்க...... அனுபவம் தானே ஆசான்!...

[என்றபடி இலையில் படைக்கப் பட்ட சாதத்தை கிளறியபடி சாம்

பாரை எதிர் நோக்கித் 'தவம்' செய்கிருர்]

குப்: ஏது, சோறு கறியெல் லாம் படச்சுட்டு ஒரேயடியா 'அண்டர் கிரவுண்ட்'லே மறைஞ் சிட்டானே, சர்வர்!... இப்பதான் சாம்பாரே தயார் பண்ண ஆரம் பிச்சிருக்காரே?

சுப்: (சிரிப்புடன்) ஹோட்டல் காரர்களும் திருப்பதி நாவிதர்கள் வழியில் செல்ல ஆரம்பித்துவிட் டார்கள்...

குப்: உம்... உங்களை மாதிரி யுள்ள ஓட்டல் வாசிகள் 'பொறு மைப் புத்திரர்களா'க மாறு வதற்கு இந்த ஹோட்டல் 'பரி மாறும் முறை'தான் காரணங் கிறதை இப்போத்தான் நான் கண்டு பிடிச்சேன்...

(பரிசாரகன் வருகிருன். சாம் பாரை ஊற்றுகிருன். சாம்பார் காய்கறித் துண்டங்களுடன் ஒரு பல்லியில் சடலமும் வந்து விழு கிறது. பல்லியைக் கண்டு துள்ளி எழுகிருர், குப்பையா)

குப்: (ஆத்திரமாக) எப்பா இதென்ன பருப்பு சாம்பாரா? பல்லி சாம்பாரா?

சுப்: (திடுக்கிட்டு) ஐயோ! இந் தச் சாம்பாரைத்தானு நான் சாப் பிட்டேன்.........அட கடவுளே!

> பாக்கியசாலி எனபவன் யார்? மண் குடிசையில் இருந்துகொண்டு மாளிகையைக் கண்டு இலயித்து நிற் பவனே. மாளிகையில் வாழ்ந்தும் அதைக் கண்டு இலயித்து நிற்கக் கொடுத்து வைக்காதவன் அபாக்கிய சாலி. —ரஸ்கின்

ஐயோ! தலைசுத்துதே! இதோ இப்பவே ஓடறேன், டாக் டர்ட்டே......... (என்றபடி தலை தெறிக்க ஓடுகிருர், சுப்பையா)

(ஒரே ரகளையாவது கண்டு முத லாளி ஆஞ்சநேயலு ஓடி வரு கிருர்)

ஆஞ்: (குப்பையாவிடம்) என்ன சார் கலாட்டா?

குப்: ஓய், எவன் ஓய் கலாட் டாப் பண்ருன்? இங்கே பாரும் ஓய்சாம்பாரிலே பல்லி கிடப்பதை!

ஆஞ்: (பல்லியைப் பார்த்து திடுக்கிட்டு, பரிசாரகனை) டேய், ஏண்டா உள்ளேயே சாம்பாரைக் கவனிச்சிருக்கக் கூடாதா?

குப்: அதாவது சமையற் கட் டிலேயே சாம்பாரைக் கவனித்து பல்லியை ஏன் எடுத்துட்டுச் சாம் பாரைக் கொண்டு வரலைங்கிறீர்? அப்படித்தானே ஓய்?

ஆஞ்: [பணிவாக] சார்...... தயவு செய்து கோபப் படாதீங்க... உங்க வீட்டு சாம்பாரிலே இப்படி ஏதாவது கிடந்தா இவ்வளவு ஆர்ப்பாட்டம் பண்ணுவேளா?... தப்பு எங்கும் சகஜம்...மன்னிச்சு அருளறது.தான் மனுசதத்தன்மை...

[குப்பையாவுக்குச் சற்று முன் வீட்டில் நிகழ்ந்த நிகழ்ச்சி மனக் கண்முன் தோன்றுகிறது. வெட் கித் தலைகுனிகிருர்]

ஆஞ்: (பரிசாரகனை) டேய், சாருக்கு வேற இலைபோட்டு சாதம் வைத்து ஸ்பெஷல் தயிர்லே ஜோரா ரெண்டு கப் விடுடா...

பரி: சரி சார்......

[குப்பையா 'கள்ள வோட்' போடப்போய் அகப்பட்ட போலி வாக்காளர்' மாதிரி திருதிருவென விழித்தபடி **தயிர்ச்சாதம்** சாப்பிடத் தயாராகப் போய் அமருகிருர்!]



# அவனும் கணவன்

'கோவி'

மனைவிக்குப் பயந்த கணவன்மார்கள் இந்த மாநிலத்தில் ஏராளம்! அந்த ஏராளமான அப்பாவி கணவன்மார்களில் ஒருவன்தான் சிவஞானமென்றால், சிரிப்பு வராமலிருக்க முடியவில்லை.

சிவஞானத்தின் பெற்றோர், இயற்கையிலே பொருளாசைப் பிடித்த காரணத்தால், அவன் மனநிலையை அறிந்து கொளளாமல், **'கன்னிகாதானம்'** முறையில் பெண் தேடினார்கள். அதுவும் வெறும் கன்னிகாதானமல்ல, நல்ல சொத்துடைய குடும்பத்தில், ஒரே பெண்ணாக இருப்பவளை மணம் செய்விக்க. அப்படித் தேடியலைந்து, குணத்தை அலசிப் பார்க்காமல் கொண்டு வந்து கட்டிய மனைவிதான் குணவதி.

'குணவதி' யென்று பெயரளவில்தான் இருந்தாளே யொழிய, செயலில், "அடி, ஆத்தே, ஆத்தே! இவளைக் கொண்டு வந்து என் தலையில் கட்டினார்களே" என்று அடிக்கடி சிவஞானம் கூறுமளவிற்கு அமையப் பெற்றவள்.

தாண்டவராயன் என்று பெயருடையவர் எத்தனையோ பேர் முடவர்களாக இருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரிந்ததே. அங்கயற்கண்ணிகள் எத்தனைப் பேர் அணிந்திருக்கிறார்கள், மூக்குக் கண்ணாடிகளை! அதுவும் பரவாயில்லை யென்றால், ஆந்தைக்குப் போட்டி போடவும் ஆயத்தமாகிறார்கள். கேசவன்கள் எத்தனைப் பேர் வழுக்கைத் தலையுடையவர்களாக வாழ்கிறார்கள். தருமன்கள் பலர், வடிக்கட்டின கஞ்சத் தனத்தைக் கைப்பற்றியிருக்கிறார்கள்; இப்படி அடுக்கிக் கொண்டே போகும் பட்டியலில் குணவதி மட்டும் இடம் பெறுவதில் என்ன ஆச்சரியம்?

நம் நாட்டுப் பரிதாபங்களுள் இது ஒன்றும் புதுமையில்லையே? அப்படிப் புதுமை யெனறால், ஒன்றும் தெரியாதவர்களை "ஓஹோ" என்று எப்படிப் புகழ்ந்திருக்க முடியும்?

சிவஞானத்திற்கும், குணவதிக்கும் திருமணமான மூன்றாமாண்டு சிவஞானம் பெற்றோர்களை மண்ணுக்குப் பரிசாக வழங்கிவிட்டான். அதன் பிறகு இருவரும் தனிக் குடித்தனத்தில் திதிங்கிணதோம் போட ஆரம்பித்தார்கள்.

பெற்றோர்களின் பேராசைக்குப் பலியான காரணத்தால், சிவஞானம், வாழ்க்கையில் சித்ரவதைப்பட நேர்ந்தது. மனைவியின் மூர்க்கக் குணத்தைத் திருத்த பல வழியில் முயற்சித்தான். ஆனால் ஒருவழி கூட, அவனுக்கு வாழையிலை போட்டு வரவேற்புதர விரும்ப வில்லை.

அவன் ஒரு அப்பாவி. வேலை வெட்டியில்லாமல், மாமனார் சொத்தில் பஜனை செய்து செய்து வந்தான். பஜனை என்றாலே, காலத்தை செலவிடத் தெரியாதவர்களின் ஏற்பாடு என்றால், வாலிபத்தைப் பற்றியும், வாழ்வைப் பற்றியும் சிந்திக்காத சிவஞானம்....

எப்படியோ, வேளா, வேளைக்கு உணவு; உடலை மறைக்க நல்ல துணி; உற்சாக மளிக்க மனை...... ஐயய்யோ, அதுதான் கிடையாதே! அதன் வாசற் கதவுகள் திறந்திருந்தால் தான் எப்போதோ, அவன் சுயமரியாதைக் கண்களும் திறந்திருக்குமே!

இப்போது அவன் ஒரு சுமை தாங்கி! அதாவது, நிரப்பப்பட்ட வயிற்றையும், அதை நிரப்புவதற்குள் அர்ச்சிக்கப்படும் வசவுகளையும் அனயாசமாக சுமக்கக் கூடிய சொரணைக் கெட்ட சுமைதாங்கி!

சுமைதாங்கிகளாகவும், சோற்றுத் துருத்திகளாகவும் பல வெட்கங்கெட்ட ஆணுருவங்கள் நடமாடத்தான் செய்கின்றன. அவர்கள் உடலில் ஓடுவது ரத்தம்தான் என்பது அவர்களுக்கே 'தெரியாது' என்றும் சொல்லிவிட முடியாது. ஏனென்றால், தெரியாதவர்களைப் பிறர் சொல்லித் திருத்திவிடலாம். ஆனால் 'சந்தேகம்' என்று சொன்னால் பொருத்தம். 'சந்தேகம்' தீராத வியாதிகள் தீப தூபம் காட்டி வணங்கும் பெரிய நோயல்லவா?

எப்படியோ, இழுத்துப் பறித்து, ஒரு குழந்தைக்கு சொந்தமாகவோ, ஜாமீனாகவோ தந்தை ஸ்தானத்தைப் பெற்றுவிட்டான் சிவஞானம். அப்போதும் அவர்களிடையே நடந்துவரும் அன்றாட நடப்புகள் மாறினபாடில்லை.

குணவதி கூச்சல் போட்டால், சிவஞானம், குட்டிக்கரணம் போடும் நிலைமை, வைணமாக சாப்பாடு போடும் வீட்டில் வந்த சொரணை கெட்ட விருந்தாளியைப் போல் போகமன மில்லாமலே தங்கி—நீடித்து வந்தது.

நிலைமையும், விருந்தாளியும், நீடிக்க முடியுமா? சிவஞானத்தின் சொரணைக் கெட்டத் தனமும் ஒரு தினத்தில் சீர்பட்டுப் போகவேண்டியதுதான்.

அன்று அசந்தர்ப்ப வசமாக சென்னையிலிருந்து சிவஞானத்தின் நண்பன் அண்ணாமலை வந்துவிட்டான்.

'தன் நண்பன் சிவஞானம்பெரிய இடத்தில் பெண் கட்டி, போக போக்யத்தில் புரளுகிறானே, போய் தான் ஒரு வாரம் கழித்து விட்டு வரலாமே' என்ற எண்ணத்தில் புறப்பட்டு வந்து சேர்ந்தான்.

நண்பனைக் கண்ட சிவஞானத்திற்கு நாடி நரம்புகள் தளர்ந்து விட்டன. அவன் வந்த முடிவைக் கேட்கும் போது இதயமே நின்று விடுவதாகத் தென்பட்டது. இந்த பயங்கரமான சூழ்நிலையைச் சமாளிப்பதெப்படி என்று பலமுறை ஆலோசித்தான். ஆலோசனை அப்பம் சுட்டு காக்கையைக் கவால்




வைத்த கதையாய்த் தான் முடிந்தது.

மனைவி குணவதியிடமும் பல வாறு எடுத்துக் கூறிப் பார்த்தான். அண்ணாமலை தயவால் தான், தான் படிக்கும்போது பல வழிகளில் சந்தோஷமடைய முடிந்த தென்றும் சொல்லிப் பார்த்தான். ஏன், பள்ளிப் பாடங்களிலும், பரீட்சைகளிலும் வெற்றியடைய காப்பியடிக்க உதவிய கர்த்தனென்றும் காலைப் பிடித்துக் கதறிப் பார்த்தான். மேலும், அவன் ஒரு நல்ல குடும்பத்தில் பிறந்த நாணயஸ்தன்.

நாம் கவனித்து அனுப்பா விட்டால் எங்களூர் சென்று என்னையும், உன்னையும் ஏசிப் பேசுவான். அந்தக் கேவலம் என்னால் பொறுக்க முடியாதென்று அழாத குறையாக எடுத்துரைத்தும் பார்த்தான். நாருரிக்க மரத்தை நாடாமல், சுவரில் முயற்சித்தால் சுண்ணாம்புப் படைதானே மிச்சப் படும்? சிவஞானம் முயற்சியும், அந்தக் கதியை அடையத்தான் 'க்யு' வரிசையில் நின்று தோல்வியடைந்தது.

விருந்தினனாக வந்த நண்பன் அண்ணாமலை, ஊரைச் சுற்றிப் பார்வையிட்டு வர சென்றிருந்தான். அவன் வருவதற்குள் ஏதாவதொரு முடிவுக்கு வர எத்தனித்தான் சிவஞானம்.

வீட்டின் வராந்தாவில் இங்கு மங்குமாக உலவிக் கொண்டு மூளையைத் தடவிக் கொடுத்தவனாயிருந்த சிவஞானத்திற்கு திடீரென்று ஒரு யோசனை பிறக்கவே, அடுக்களையி லிருந்த அற்புத மனைவி குணவதியைக் காண ஓடினான்.

குணவதியிடம் குழைந்தவராய் காதில் ஏதோ ரகசியம் கூறி, அதற்கு ஒப்புக் கொள்ளுமாறு, கணவன் என்று பெயரளவிலாவது ஞாபகப் படுத்தத் தொங்கிக் கொண்டிருந்த தாலியைக் காட்டி சத்தியம் செய்தான்.

அடேயப்பா! எப்படித்தான் அந்தப் பரம ரகசியத்திற்கு குணவதி படிந்தாளோ, அவனுக்கே ஆச்சரியமாய் விட்டது. அவன் நினைப்பு, தாலிக்கு அவள் மதிப்புக் கொடுப்பதாக. உண்மையில் அவள் அப்படி தாலிக்கு மதிப்புக் கொடுப்பவளாயிருந்தால், இந்தத் ததிங்கிணதோம் பிழைப்புக்கே இடமில்லையே!

பகல் மணி பனிரெண்டும் அடித்துவிட்டது. வெளியே சுற்றிப் பார்க்கச் சென்ற நண்பன் அண்ணாமலையும் வீடு சேர்ந்தான்.

சிவஞானம் உள்ளம் 'திக் திக்' கென்று அடித்துக் கொண்டது. நாம் போட்ட 'பிளான்' 'ஆபாலிஷ்' ஆய்விடுமோ என்ற அதிர்ச்சி மேலும் அவனை உலுக்கியது. மீண்டும் அடுக்களைக்குச் சென்று, "இரண்டாம் சோற்றை எனக்கு முந்திப்போட மறந்துவிடப் போகிறாய் குணவதி!" என்று நினைவூட்டினான். அவளும் தலை யசைத்தவளாய் பரிமாறத் தொடங்கினாள். அவள் மனம் மட்டும், "இந்த ஒருவேளைத் தண்ட சோறு போடுவதே, என் உடம்புக்கு ஒத்துக் கொள்ளவில்லை." என்று எண்ணிக் கொண்டது.

வாழை இலையை இருவருக்குமே மிகப் பெரியதாகப் போடப்பட்டது. வந்த விருந்தாளி நண்பன், 'சாப்பாடு மிகவும் மிடுக்குபோலும்' என்று எண்ணி மகிழ்ந்தான்.

பதார்த்தங்களை சிறுகச் சிறுகப் பரிமாறிய பிறகு, சோறு கொண்டு வந்தாள் குணவதி. சிவஞானம் மீண்டும் ஒருமுறை அந்த ரகசியத்தைத் தன் கண்களால் அவளுக்குச் சொன்னான். அவள் வெறுப்புக் கண்களோடு ஒருமுறை பார்த்துவிட்டு, விருந்தாளிக்கு முதலில் சோறு போட்டாள்.

அரை ஆழாக்கு எடையுள்ள அந்தச் சோறு, அண்ணாமலையைத் திகைக்க வைத்தது. அவன் திகைத்த அந்தச் சமயத்தில், சிவஞானமும் அவனைப் பார்க்காமலில்லை.

சிவஞானம் இலையில் சோறு வைக்கப்பட்டது. கால் ஆழாக்கு எடையுள்ள அந்தச் சோற்றைப் பார்த்த அண்ணாமலை, மறுகணமே, "இங்கு ஒருவாரம் தங்கினால், உடம்பு, கைத்தறி நெசவாளர்களை விட கேவலமாகப் போய்விடும்." என்று மனத்துள் எண்ணிக் கொண்டான். அவனை நோக்கிய சிவஞானம், "என்னடா நண்பன் இம்முட்டுச சோறு திங்கிறானே என்று எண்ணுகிறாயா அண்ணாமலை! நாங்கள் சாப்பிடுவதே இம்முட்டுதான்!" என்று முதல் பிடிகையை ஆரம்பித்தான்.

இருவருமே உண்ணத் தொடங்கினார்கள். சிவஞானம் அவசர அவசரமாய், இரண்டு வாயாக இலையில் இருந்த சோற்றை காலி செய்து

விட்டான். மருகனும் தன் மனைவியை நோக்கினான். அந்த நோக்கலில் தான் எத்தனை அவசரம்? அடா அடா அடா......

கணவன் அவசரத்தைப் புரிந்து கொண்ட குணவதி, சிரிப்பை யடக்கிக் கொண்டு, சோறு ஏனத்தைக் கொண்டு வந்து "இரண்டாம் சோறு போட்டுக் கொள்ளாமல் எழுந்திருக்க முனைகிறீர்களே!" என்றாள், தன் தண்டசோறு கணவனை நோக்கி. அவள் கேட்டது தான் தாமதம், **"அடிபோடி! இந்தச் சோத்துக்கு மேலே எந்தக் கழுதையடி தின்பான்?"** என்று மிடுக்காக கூறிவிட்டு எழுந்து சென்று கையலம்பிக் கொண்டான்.

அண்ணாமலை சாப்பிட்டு முடிந்ததும், அதே கேள்வியுடன் அருகே வந்தாள், குணவதி. சிவஞானம் போட்ட சூடு அண்ணாமலைக்கு இன்னும் ஆறாமல் தானிருந்தது. "போதுமம்மா! இதற்குமேல் நான் சாப்பிடுவது கிடையாது" என்று எழுந்து கொண்டான். சிவஞானமும், "பரவாயில்லை அண்ணாமலை நீ தாராளமாகச் சாப்பிடலாம்" என்று ஒப்புக்குக் கூறினார். ஆஹா! குணவதி ஒரு முறைப்பு முறைத்தாள். அவ்வளவுதான் மறு கணம், "உபசாரமு சேஸே வாடுண்ணாரனி மறவகுரா" என்ற பாடலைப் பாடிக்கொண்டே வெளியே சென்று விட்டான் சிவஞானம்.

அண்ணாமலை கையலம்பிக் கொண்டு, இனியும் இங்குத் தங்குவது வெட்கக் கேடுதான் என்று எண்ணிக் கொண்டு, விடை பெற்றான். ஆனால் அவன் மனம் மட்டும், "இவளும் மனைவி, அவனும் கணவன். 'பத்தாவுக்கேற்ற பதிவிரதை' —என்ற பழமொழிக்குத்தலைகீழாக நடப்பவன் சிவஞானம் போலும்" என்று எண்ணிக் கொண்டது. இருந்தாலும், 'என்றைக்காவது ஒருநாள் இப்படிப்பட்ட சம்பவங்களில் அடிப்பட்டு தன்னால் திருந்திக் கொள்வான்' என்றுமட்டும் அண்ணாமலை நிச்சயமாக எண்ணிக் கொண்டான்.





## வாழ்க்கை வாழ்வதற்கே

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

சமூக சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்ட நாடக நூல். 'வாழ்வை நம்பு' எனும் சிறந்த தத்துவத்தைச் சித்தரிக்கும் சீரிய ஏடு.

விலை **12** அணா

13 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெறுக.

கலைமன்றம், சென்னை-1




"நல்லமுத்து! நமக்கு உதவவில்லை என்பதற்காகவா...?"

"ஆமாம், அதற்காகத்தான்! நமக்கு உதவவில்லை என்பதற்காகத்தானே, அந்தக் கடவுளையே பிடித்து ஆட்டி, அசைத்துப் பிடிங்கிக்கொண்டிருக்கிறோம்-நாம்!"

## 12

**கலாநிதி...**

நல்லமுத்து சம்பந்தப்பட்ட காரியங்கள் ஒன்றாவது உருப்படுவதில்லை; அப்படியிருந்தும் கூட, என்ன இழவோ, எனக்கு அவனிடம் ஒருவித அலாதிப் பாசம் இன்னும் இருந்துதான் வருகிறது!

"போய், போட்டோ எடுத்து வா சந்திராவை" என்று அனுப்பினேன். போனவன் மறுநாள்தான் வந்தான். படுக்கையில் நோயாகக் கிடந்த நான் டாக்டரின் சொல்லையும் தட்டிவிட்டு, அவன் எடுத்து வந்திருந்த சந்திராவின் போட்டாவை 'ப்ரின்ட்' போட்டு பார்ப்பதற்காக ஆசையுடன் அவனையும் காரில் ஸ்டூடியோவுக்கு கூட்டிக்கொண்டு போனால்...ஐயோ... ஐயோ தலையில்தான் அடித்துக் கொள்ள வேண்டும்!

போகும்போதே பெரிய விபத்து, நல்லவேளையாகத் தப்பினாள். பாவம், அடிபட்டவள் சந்திரா என்பது அந்த இடத்தில் வைத்தே எனக்குத் தெரிந்திருக்குமானால் அப்போதே என் காரிலேயே, நானே தூக்கிக்கொண்டு போட்டு, ஆஸ்பத்திரியில் ஸ்பெஷல் வார்டில் ஏற்பாடு செய்திருப்பேன். அது சந்திரா என்பது இப்போதுதானே தெரியவருகிறது—யாரோ ஒரு பெண், யாரோ ஒரு பெண் என்றே எல்லாரும் சொல்லி விட்டார்களே! நானும் அவர்கள் சொல்லியதைக் கேட்டு அலட்சியமாகவும், சற்று பயத்துடனும் டிரைவரை நோக்கி "போடா போடா" என்று விரட்டினேன். அவனும் வேகமாகத்தான் போனான். போகும்போதே இந்த நல்லமுத்து சும்மாயிருக்கக் கூடாதா? "பின்னாலே பாருங்களேன்" என்றான், என்னை. பார்த்தேன். போலீஸ் 'வேன்' வருவதுபோலிருந்தது, "விரட்டடா" என்று சப்

தம் போட்டேன், டிரைவரை! டிரைவர் 100—மைல் வேகத்தில் காரை ஓட்ட ஆரம்பித்தான். மூவருமே பதறினோம். என் கால் பக்கத்திலிருந்து புகை வந்து கொண்டிருந்தது, என்ன புகை என்று பார்த்தால் என் கையிலிருந்த—எரிந்து கொண்டிருந்த—சிகரட் உள்ளே கீழே விழுந்து, என் வேஷ்டி முனையில் பட்டு, வேஷ்டி கருகிக் கொண்டிருந்தது—விஷயம் அவ்வளவுதான்; அப்புறம் காலால் மிதித்தே அதை அணைத்தேன்.

டிரைவர் ஒரு சந்துக்குள் கொண்டுபோய், மறைவாக காரை நிறுத்தினான். எங்களைத்தொடர்ந்து வந்த 'வேன்' அந்த நேர் பாதையாகவே போய்விட்டது! வேனை இப்போதுதான் நன்றாகப் பார்க்க முடிந்தது — பார்த்தோம்— விழுந்து விழுந்து சிரித்தோம்; காரணம் வேறு ஒன்றுமில்லை, அந்த வேன் நாங்கள் கருதி, பயந்ததுபோல் ஒரு போலீஸ் வேன் அல்ல, அந்த ஊருக்குப் பால் சப்ளை பண்ணும் "மில்க் வேன்" தான்!

சரி! கூத்து அத்தோடாவது முடிந்ததா? இல்லை!

'டிரைவர் போடா'' என்றேன். இப்போது மெதுவாகவே போனான்.

ஸ்டுடியோவுக்குப் போகிற பாதையில் சுடுகாடு ஒன்றிருக்கிறது. அங்கே பார்த்தால்... பிசாசு மாதிரி தனியாக சப்-இன்ஸ்பெக்டர் சந்தானம் ஐயர் அந்தச் சாயங்கால நேரத்தில் வந்து கொண்டிருந்தார். பல்லைப் பல்லைக் காட்டிப பேசினார். அவர் தயவும் சில வேளைகளில் தேவைப்படும் என்று கருதி, தனியாக அகதி போல் நின்று கொண்டிருக்கும் அவரை, காரில் ஏற்றி, வந்த பாதை வழியாகத் திரும்பி, அவரது வீட்டில் கொண்டு போய் விட்டு, பிறகே ஸ்டுடியோவுக்குப் போனோம்.

மறுநாள்தான் படம் கிடைக்கும் என்றான், லேபரேட்டரியில்! சரி என்று மறுநாள் போனோம். லேபரேட்டரிக்கு வெளியே நாங்கள் இருவரும் காரில் இருந்து கொண்டு, டிரைவரை உள்ளே அனுப்பி படம் வாங்கி வரச்சொன்னோம். அவன் போனான், போனான், ஒரே போக்காகப் போய்விட்டான். கால் மணி நேரத்திற்கு மேலாயிற்று—வரக்காணோம்.

நாங்கள் டிரைவரின் மந்த புத்தியைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம்.

பின்னும் 10 நிமிடங்கள் ஆயின. வரவில்லை.

என் மனம், சந்திராவின் போட்டோவைப் பார்க்கவேண்டுமென்று ஒரே துடியாகத் துடித்துக் கொண்டிருந்தது.

அப்போது...?

---

**தி. மு. க.வின் பொறுப்பு**

"அதன் இலட்சியமான 'திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்' என்பதை எப்படி யெல்லாம் செயல்படுத்தி, மக்கள் நமக்குத் தந்திருக்கிற புதுப் பொறுப்புகளைச் செவ்வனே ஏற்று நடத்து வதுஎன்பதற் கானவழி வகைகளைக் காண்பதில், தி. மு. கழகம் இப்போது தன் கருத்தைச் செலவிட்டு வருகிறது.

—ஈ. வி. கே. சம்பத்

---

"நல்லமுத்து! நீங்களே போய்ப் படத்தை வாங்கி வாருங்கள்; என் மனம் பார்க்க வேண்டுமென்று துடிக்கிறது!"

"கொஞ்சம் பொறுங்க, கலாநிதி! வெறும் போட்டோவுக்காகவா இவ்வளவு துடிப்பு? இன்னும் கொஞ்ச நாள பொறுத்தால் நிஜமான சந்திராவே உங்களோட கைக்கிளியாகப் போகிறாள்?"

"வாஸ்தவம்தான் நல்லமுத்து! இனிமேல் அதற்கும் நாளை நாளை என்று நான், நாட்களைத் தள்ளிப் போட்டுக்கொண்டேயிருக்க விரும்பவில்லை—எப்படியாவது வசியம் பண்ணி, காரியத்தை வெல்ல வேண்டியதுதான்."

"கலாநிதி! அன்றைக்கு அவளிடம் அண்ணன் போன்று நடித்ததாகக் கூறினீர்களே—அதுவரை 'ஸக்ஸஸ்' தானா?"

"இப்படிக் கேட்டிட்டீங்களே, என்ன நல்லமுத்து! நான் ஒரு காரியத்திலே இறங்குகிறதாவது, தோல்வி வருவதாவது? என் பேரில் அவளுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. இந்த நிமிஷமே, அந்தக் குடிசையில் போய் நான் அவளைச் சந்தித்தாலும் சரி, "அண்ணா வாருங்கள்" என்று என் இரு பாதங்களிலும் மலர் இட்டுத் தொட்டு கண்களில் வைத்துக் கொள்வாள்"—என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே, டிரைவர் 'ப்ரின்ட்' போட்ட போட்டோவை என் கைகளில் கொண்டு வந்து தந்தான்.

பார்த்தேன்.

ஒரு விநாடி.

ஒரே ஒரு விநாடிதான்!

கோபம் தாங்க முடியவில்லை!

"ஓ" என்று சீறியவாறே நல்லமுத்துவின் முகத்தில் எறிந்தேன்—படம் காருக்கு வெளியே போய் விழுந்தது.

"என்னுங்க கலாநிதி திடீர் கோபம்" என்று கேட்டுக் கொண்டே, காரை விட்டு இறங்கிக் கொண்டிருந்தான், படத்தை எடுத்துப் பார்க்க!

"என்னவா! படத்தைப் பார்த்திட்டு அப்புறம் பேசு" என்று மேலும் சீறினேன்.

இறங்கி கீழே விழுந்து கிடந்த படத்தை எடுத்துப் பார்த்தான்.

"அடடடா!" என்று சொல்லிக் கொண்டே தன் தலையில் வருத்தத்துடன் ஐந்தாறு முறை அடித்துக் கொண்டேன்.

"என்னடா இது! பிரியப்பட்டு போட்டோ எடுத்துவர நம்மை அனுப்பினா—அவள் துடைப்பக் கட்டையைக் கொண்டு வாசலைப் பெருக்கிக் கொண்டிருக்கும்போது நிமிர்ந்து ஒரு கணம் நின்ற "போஸி"லே எடுத்து வந்துவிட்டோமே! அவசரத்தில், அவள் கையில் இருந்த துடைப்பக் கட்டையைக்கூட கவனியாமலே நாம் 'ஸ்டில்' எடுத்து வந்து விட்டோமே—அதுவும், அவள் தன் பாதத்துக்கு மலர் இட்டு தொட்டு அவளது கண்களில் வைத்துக் கொள்வாள் என்று பெருமையுடன் இவர் சொல்லிக் கொண்டிருக்கும் நேரத்தில், அந்தப் பாவி டிரைவர் வந்து, "துடைப்பக் கட்டை ஸ்டில்"லை காட்ட வேண்டும்?—என்பதை நினைத்து அவனாகவே வருந்துவதிலிருந்து, அவன் இதை வேண்டுமென்றே செய்யவில்லை என்பதை யூகிக்க முடிந்தது.

"சரி! படத்தைக் கிழித்துப் போட்டு விட்டு, காரில் ஏறுங்கள் நல்லமுத்து" என்றேன்—கிழித் தெறிந்து விட்டுக் காரில் ஏறினர்.

போய்விட்டோம்.

அதற்கும் மறுநாள்தான்...? அவளது பாலு வந்தான்—வலை வீசினேன்—கலை பேசினேன்—வசமாக மாட்டிக் கொண்டான்; பாவம், அவன் தன்னை என் பத்திரிகையின் உதவியாசிரியர் என்றே நினைத்துக்கொண்டிருக்கிருன்! என் திட்டம், அவனுக்கென்ன சில வற்றை, அந்த நல்லமுத்துவிடம் கூட சொல்வதில்லையே, நான்!

இவ்வளவுக்கும் மத்தியில் அன்று நல்லமுத்து செய்த "ஸ்டன்ட்" அப்பப்பா! தீராத நகைச்சுவை!

நிஜமாகவே போலீஸ்காரர்கள் பாலுவைப் பிடிக்க வருவதுபோல் சொல்லி நடித்துவிட்டான்—பாலு, பைத்தியக்காரன், கண்டானு, உண்மையை? நல்லமுத்துவின் நடிப்பை நம்பி பயந்தே போய்விட்டான். பாலு பயப்படுவதற்கு ஏதுவாக பூட்ஸ் சப்தம் வேறு, அந்த நேரத்தில் என் அறைப் பக்கமாகக் கேட்டுக்கொண்டிருந்தது. வந்தவர்கள் எங்களை விரட்ட வரும் போலீஸ்காரர்கள் அல்ல, நாங்கள் விரட்டி வரும் பத்திரிகை நிருபர்கள்!

சரி! மரத்தைப் பற்றிய அக்கரை நமக்கேன்—கனியைப் பற்றி யோசிக்கலாம் என்ற எண்ணத்தில் நல்லமுத்துவைக் கூப்பிட்டு வருமாறு காரை அனுப்பினேன்.

நல்லமுத்து கொஞ்ச நேரத்தில் வந்தார். பேசிக்கொண்டிருந் தோம்.

பாலுவும் அந்தக் கிழவனும் இல்லாத நேரத்தில் மீண்டும் ஒரு நாள் சந்திராவிடம் போய் அண்

## உங்களுக்குத் தெரியுமா?

1. இந்தியாவில், வியாபார நிமித்தமாக வேலைசெய்து வரும் தறிகளின் மொத்த எண்ணிக்கை என்ன?

(அ) 12 லட்சம்
(ஆ) 14 லட்சம்
(இ) 16 லட்சம்

2. இந்திய சர்க்கார், தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ், 1954 செப்டம்பர் மாதம்வரை செலவழித்துள்ள தொகை மொத்தம் எவ்வளவு?

(அ) 1 கோடி ரூபாய்
(ஆ) 1. 24 கோடி ரூபாய்
(இ) 2 கோடி ரூபாய்

3. இந்தியசர்க்கார், 1954-55-ம் ஆண்டில், ஷெட்யூல்ட் வகுப்புகள், ஷெட்யூல்ட் குடிகள், இதர பிற்பட்ட வகுப்புகள் ஆகியோருக்கான உபகாரச் சம்பளங்கள் திட்டத்தின்கீழ் உபகாரச் சம்பளங்களுக்காக வழங்கியுள்ள தொகை மொத்தம் எவ்வளவு?

(அ) 50 லட்ச ரூபாய்
(ஆ) 75 லட்ச ரூபாய்
(இ) 1 கோடி ரூபாய்

4. 1955 ஏப்ரல் 1-ந் தேதியிலிருந்து, சமுதாய அபிவிருத்தித் திட்டப் பிராந்தியங்களாக மாற்றப்படவிருக்கும், தேசீய விஸ்தரிப்பு சர்வீஸ் பிராந்தியங்களின் மொத்த எண்ணிக்கை என்ன?

(அ) 100
(ஆ) 132
(இ) 147

5. இந்தியாவில், இரும்புக் கனி சுரங்கங்களின், 1955 ஜனவரி மாத உற்பத்தி அளவு என்ன?

(அ) சுமார் 3,12,500 டன்
(ஆ) ,, 3,47,000 டன்
(இ) ,, 3,74,000 டன்

விடைகள்:—1-(அ); 2-(ஆ); 3-(இ); 4-(ஆ); 5-(இ).

ணன் போன்றே நடித்தேன்—அப் பாவும் என் அன்பை அவள் எச்ச ரிக்கையுடன் நம்புகிறுளே தவிர, பரிபூரணமாக நம்பாதிருக்கிருள் என்பதைப் புரிந்தேன்! என் கோபம் வலுத்தது.

திட்டமிட்டேன்.

ஒன்று அவள் நமக்கீாக வேண் டும்—அல்லது நாம், அவளுக்கு நமளுக வேண்டும்!

இந்த விஷயத்தைப பற்றி நல்ல முத்துவிடம் கலந்தேன்.

வெகு நேரமாக யோசித்தார்—இறுதியில் அவர் முகத்தில் வெற் றிக் களை படர்ந்தது! கண்டுபிடித்த யோசனையை என் காதுக்குள் சொன்னுர், சுருக்கமாக!

"யோசனை தவறுகயிருக்குமோ என்று பயப்படுகிறேன், நல்ல முத்து!"

"கலாநிதி! உங்கள் கணக்குப்படி பார்த்தால், காந்தியாரின் அந்த உப்புச் சத்யாக்ரஹமே தப்பு என் பேன்!"

"எப்படி?"

"கொள்கையின் வெற்றியை நினைத்தாரே தவிர, அந்தக் காந்தி, குடும்பங்கள் எத்தனையோ அந்தப் போராட்டத்தால் தெருவில் நிற் குமே என்பதை நினைத்தாரா?"

"அது நல்ல காரியம் நல்ல முத்து!"

"அப்போ, இதுவும் நல்ல காரி யம்தான்!"

"என்ன சொல்கிறீர்கள்?"

"அது காந்திக்கு வேண்டுமா னல் நல்ல காரியமாக இருக்கலாம்-அந்த வெள்ளைக்காரனுக்கு...?... அதுபோல நான் தரும் யோசனை நமக்கு நல்லதாக இருக்கும்போது, பிறரைப் பற்றி ஏன் யோசிக்க வேண்டும்?"

"நல்லமுத்து! ஒருவகையில் சரி தான்! நல்லது கெட்டது என்றே உலகில் தனித் தனியாக ஒன்று கிடையாது—இவையிரண்டும் உல கில் பிரிக்கக் கூடாத—பிரிக்க முடியாத—ஒன்று என்று நான் தான் எங்கோ படித்திருக்கிறேன்."

"பின் ஏன் யோசிக்கிறீர்கள் கலாநிதி!"

"யோசனை ஒன்றுமில்லை... கொலை என்பது அவ்வளவு நல் லதா என்றுதான்."

"நீங்கள் ரெம்ப மோசம்! ஏன் இப்படி அகிம்சை பேசி, தற் கொலை பண்ணிக்கிறீங்க, கலாநிதி! தினந்தோறும் புதுப் புதுப் புரு வாகப் பிடித்துவரச் சொல்லி, கறி சமைத்துச் சாப்பிடுகிறீர்களே, அதுகூட, இப்போது நீங்கள் பேசு கிற கணக்குப்படிப் பார்த்தால் தவறுதான் கலாநிதி!—பாவமே என்று பார்க்கிறீங்களே?"

"இல்லை நல்லமுத்து! வெளி யாகிவிட்டால்..."

"உங்கள் புகழில் ஏமாந்து கிடக்கும் மக்கள் உங்களைத் தூக்கு மேடையிலிருந்தும் காப்பாற்றி விடுவார்கள்—பயப்படாதீர்கள் கலாநிதி! நான் மிகவும் வருந்து கிறேன், வர வர கலாநிதியின் செய்கைகளில் சீர்திருத்த வாசனை குறைபடுகிறதே என்று."

"நல்லமுத்து! என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்—சொல் லுங்கள் செய்கிறேன்—நான் ஒன் றும் கோழையல்ல."

"அப்படிக் கேளுங்கள்?"

"விளக்கிச் சொல்லுங்கள் சீக்கி ரம் நல்லமுத்து!"

"சமீபத்தில், இப்போதுதான், அரும்பு மீசை வைத்திருக்கிறீர் கள்—ஆயினும் அது சரித்திரப்

பிரசித்தி பெறவேண்டும் என்கிறேன்."

"புரியவில்லையே நல்லமுத்து."

"வீரம் தேவை என்கிறேன்."

"இப்போது இல்லையா?"

"இருக்கிறது, கருமியின் கைப் பணமாக! போர் துவக்குங்கள்."

"எப்போது, யாரிடம் நல்லமுத்து!"

"இன்றே, நமக்கு ஆகாதவர்களிடம்! தயார்தானா கலாநிதி?"

"தயாராகியே விட்டேன்."

"வழி சொல்லட்டுமா?"

"சொல்லுங்கள் நல்லமுத்து!"

"கேளுங்கள், கலாநிதி! ஒரு நாள் இரவு இந்தப் பாலுப் பயலை இங்கே நமது காரியாலயத்தில் தங்க வைக்க வேண்டும்!"

"சரி தங்க வைத்து விடலாம்—பொங்கல் மலர் அழகாக வெளியிடவேண்டும் என்று புகழ்ந்தால் போதும், பயல் தங்கிவிடுவான்... அப்புறம்?"

"அன்றிரவு நாம் 12-மணிக்கு மேல் சூட்டிங் எனறு சொல்லி குடிசையை நோக்கிக் காரில் ரகசியமாகப் போகவேண்டும்."

"போய்......?"

உடனே என் காதில் நல்லமுத்து அந்த ரகசியத் திட்டத்தைச் சொன்னார்—ரசித்தேன்—ஒப்புக் கொண்டேன்!

பாலுவை மறுநாள் இரவே "எதிரொலி" காரியாலயத்தில் தங்க வைத்துவிட்டோம். அன்றிரவு, பாலுவுடன், அவனது இலக்கியங்களை அளவுக்கு மீறி புகழ்ந்து பேசினோம்—அவன் மகிழ்ந்து கிடந்தான்.

நல்லமுத்து சற்று வெளியே போய் வந்து "கலாநிதி சார், போன் வந்திருக்கிறது, சூட்டிங்


**ஏ. வி. பி. ஆசைத்தம்பி எழுதியவை**

| | | | | |
|---|---|---|---|---|
| கசந்த கரும்பு | ரூ. | 1 | 8 | 0 |
| சிலந்திக் கூடு | | 1 | 0 | 0 |
| மனைவி | | 0 | 12 | 0 |
| கொலைகாரி | | 0 | 12 | 0 |
| அவள் வாழ்வு | | 0 | 8 | 0 |

**கலைமன்றம்—சென்னை-1**


காம், உடனே அந்தப் புதுக் கம்பெனிக்காரர்கள் வரச் சொன்னார்கள்" என்றார்.

"பாலு! வேலையைக் கவனித்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி விட்டு புறப்பட்டோம்.

டிரைவர் காரை எடுக்க வந்தான். "வேண்டாமடா பக்கத்தில் தான், நானே எடுத்துப் போய் வருகிறேன்" என்று சொல்லி காரில் ஏறி 'ஸ்டார்ட்' செய்தேன்-நல்லமுத்து என் பக்கத்தில் அமர்ந்தார்.

காரை மெதுவாகவே ஓட்டிச் சென்றேன்.

குடிசைப் பக்கம் போனதும் காரின் வெளிச்சத்தைச் சற்று குறைத்து விடுமாறு நல்லமுத்து சொன்னார்—குறைத்து விட்டேன்.

காரை குடிசைக்குச் சுமார் நாற்பது அடி தூரத்திலேயே நிறுத்திக் கொண்டோம்.

"வாருங்கள்" என்று நல்லமுத்து என்னை குடிசையின் சன்னல் பக்கமாக, என் கையைப் பிடித்தே கூட்டிச் சென்றார்—போனேன்—பேட்டரி லைட்டை அடித்து "உள்ளே பாருங்கள்" என்றார்—பார்த்தேன்.

அங்கே......?

அடுக்களைப் பக்கமாகச் சந்திரா கொடிபோல், சற்று வளைந்த வண்ணமாகத் துவண்டு தனித்துப் படுத்துக் கிடந்தாள்.

இங்கே......?

வீட்டுக்குள்ளேயே கதவின் தாழ்ப்பாள் பக்கத்தில் தாத்தா படுத்துக் கிடந்தார்.

இருவருக்கும் நல்ல தூக்கம்.

உடனே நாங்கள் இருவரும் பேட்டரி லைட்டை அணைத்து விட்டு, குடிசையின் வாசல் பக்கமாகவே வந்தோம்.

"எடுங்கள் கலாநிதி!"

நான் சிகரட்டை எடுத்து வாயில் ஸ்டெயிலாக வைத்து, நெருப்புப் பெட்டியை எடுத்து, பற்ற வைத்து விட்டு, அந்த நெருப்புப் பெட்டியை நல்லமுத்துவின் கைகளில் கொடுத்தேன். என் கைகள் இலேசாகப் பதறின.

"நல்லமுத்து! நமக்கு உதவவில்லை என்பதற்காகவா......?"

"ஆமாம், அதற்காகத்தான்! நமக்கு உதவவில்லை என்பதற்காகத் தானே, அந்தக் கடவுளையே பிடித்து ஆட்டி அசைத்துப் பிடுங்கிக் கொண்டிருக்கிறோம், நாம்!"

"அது சரி! விஷயம் வெளியாகி விட்டால்?"

"கலாநிதி! குறள் பேசுகிறேன்-கூர்மையாகக் கவனியுங்கள்"—"துணிந்த பின் எண்ணுவம் என்பது இழுக்கு!"

"சரி! துவக்குங்கள்!"

குச்சியைக் கீச்சினன்—குடிசையில் வைத்துவிட்டான்! இலேசான காற்று! தீ, குடிசையில் நன்றாகப் பற்றி, பரவி, எரிய ஆரம்பித்தது!

---

# 13

என் அத்தான் எப்பவுமே இப்படித்தான்; சந்தோஷம் வந்துவிட்டால் போதும்; நேரம், காலம், நிலைமை இதுகள் ஒன்றுமே தெரியாது !

---

## சந்திரா...

முதலில் கனவுதானே என்று சந்தேகப்பட்டேன். என் உடலை தொட்டுத் தொட்டுப் பார்த்தேன்-நிலத்தை மிதித்துப் பார்த்தேன்—என்னை நானே என் கைகளால் அடித்துப் பார்த்தேன்—இல்லை, இல்லை, கனவு இல்லை, நனவே தான் என்பதைப் புரிந்துகொண்டு தாத்தாவின் அருகில் நெருங்கினேன்.

நெருங்கவே முடியவில்லை. தீ தாத்தா படுத்திருக்கும் வாசல் கதவு பக்கத்திலிருந்துதான் பற்றியிருக்கிறது. குடிசையில் வேய்ந்துள்ள மூங்கில்கள், 'பட், பட்' என்று வெடித்துக் கொண்டிருந்தன; சில தெறித்து, அதன் துண்டுக் கனல்கள் என் தாத்தாவின் மேல் விழுந்தன-அப்போது தான், தாத்தாவின் அயர்ந்த தூக்கம் கலைந்தது. "தாத்தா" என்று கூவியவாறே அவரை அப்படியே

என் பலங்கொண்ட மட்டும் தூக்கி அடுக்களைப் புறமாக வெளியே கொண்டு வந்து, கீழே கிடத்தினேன்.

இந்த உலகில் மனிதனைத் தவிர, எல்லாம் அது அதுகளின் கடமைகளைச் சரிவரச் செய்து கொண்டுதானிருக்கும் என்பதை நெருப்பும் அப்போது நிரூபித்துக் கொண்டிருந்தது.

ஒரே மணி நேரம்தான்.

குடிசை சாம்பலாகியது.

தாத்தா இன்னும் மயக்கம் தெளிந்து எழவில்லை. "தாத்தா... தாத்தா" என்று கூப்பிட்டுக் கூப்பிட்டுப் பார்த்தேன். அவரது மார்பிலே கைகளிலே கைவைத்துப் பார்த்தேன்—நாடித் துடிப்பும் இருந்து கொண்டுதானிருந்தது.

என்ன செய்வதென்றே புரியவில்லை.

தாத்தாவின் முகத்தைக் காண இதுவரையும் ஒளி தந்து உதவிய நெருப்பும் அணைந்து போய்விட்டது.

அருகில் சிறு நீர்த் தேக்கம் இருப்பதும் இப்போதுதான் நினைவுக்கு வந்தது. எழுந்தோடினேன். என் சேலைத் தலைப்பை நீரில் நன்முக நனைத்து, அதை அப்படியே கொண்டு வந்து என் தாத்தாவின் முகத்தில் ஊற்றி ஊற்றிப் பார்த்தேன்—அப்பவும் தாத்தா விடமிருந்து, ஏதோ பொருளுணர முடியாத புலப்பம்தான் வந்து கொண்டிருந்ததேயன்றி, தெளிவான ஓரே ஒரு வார்த்தையைக்கூடக்காணோம்.

"அம்மா" என்று கூப்பாடு போட்டு நான், பயத்தால் அழுதது, எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகு, அன்றைக்குத்தான். மேலும் ஒருமுறை நாடித் துடிப்புகளைத் தொட்டுத் தொட்டுப் பார்த்தேன்—முன்பு அடித்தபடியே தான் அடித்துக்கொண்டிருந்தது—அதன்மூலம் கொஞ்சமாவது பயம் தணிந்தேன்.

இந்த நேரத்தில் தவளைகளின் இரைச்சல் சப்தம் கேட்டுக்கொண்டிருந்தது. பயந்தேன். வானை சாந்திக்காக நோக்கினேன், ஐயோ அங்கிருந்து நட்சத்திரம் ஒன்று உருகி கீழே பாய்ந்து கொண்டிருந்தது. அதைக் காணவும் பயந்தேன். இதைக் காண்பதைவிட, அந்தத் தவளைகளின் சப்தத்தையாவது கேட்டுக்கொண்டிருக்கலாம் என்று நினைத்தேன்—ஆனால், அந்த நேரத்தில், பழைய, தவளைகளிடமிருந்து முன்பு வந்த சப்தத்தைக் காணோம்; ஏதோ அதுகளிடமிருந்து பாம்புகளிடம் அகப்பட்டுத் தப்புவதற்காகத் துடித்து, செத்துக் கொண்டிருக்கும் அவலக் குரலைத்தான் கேட்க முடிந்தது. பயம், நிமிடத்துக்கு நிமிடம் என்னுள் வளர்ந்து கொண்டிருந்தது.

ஆனால்......?

எந்தச் சப்தம், மற்றைய இரவு நேரங்களில், பெரும்பாலும் பயம் தருவதாக இருக்குமோ, அந்தச் சப்தம் ஒன்றை அப்போது கேட்டு மகிழ்ந்தேன்; அதுதான், இரவு காவலுக்காக ரோந்து சுற்றிக் கொண்டிருந்த போலீஸ்காரர்களின் விசில் சப்தம்!

சுற்றிலும் இருள்: திசையைக் கூட சரியாகக் கண்டுபிடிக்க முடியவில்லை. இரண்டு பக்கங்களிலிருந்து வந்து கொண்டிருந்த அந்தச் சப்தங்கள், நேரமாக ஆக, என் பக்கம் நெருங்கிக் கொண்டிருக்கின்றன என்பதைப் புரிந்தேன்; அந்தச் சப்

த்தையும் சரியாகக் கேட்க விடாமல் காற்று பலமாக அடித்துக் கொண்டிருந்தது—ஆயினும், அந்தக் காற்றின் அட்டகாசங்களிலும், இடையிடையே, எப்படியோ அந்த விசில் சப்தங்களைக் கவனித்துக் கொண்டிருந்தேன் - போலீஸ்காரர்கள் என் அருகில் வந்துவிட்டதையும் உணர்ந்து எழுந்து நின்றேன்.

என்ன சங்கதி என்று கேட்டார்கள்.

விளக்கமாகச் சொன்னேன்.

ஆச்சரியம்! "சுச்சுச்சு" என்றார்கள்—அதில் இரக்கம் பொதிந்திருந்தது.

ஒருவர் என்னருகிலிருந்து கொண்டு இன்னொருவரை அனுப்பி வண்டியமர்த்தி வரச் சொன்னார்.

கொஞ்ச நேரம்.

இங்கே நிற்கும் போலீஸ்காரர் என் பக்கம் உலவிக்கொண்டிருந்தார். கீழே கிடந்த தாத்தாவை ஒரு தட்டுத் தட்டிப் பார்த்தார். "கிழவன் தீர்ந்துவிட்டான் போலிருக்கிறதே" என்ற பொல்லாத வார்த்தையை சர்வசாதாரணமாகச் சொல்லி விட்டு எழுந்தார். புனைந்திருக்கும் உடைகளால்தான் போலீஸ்காரர்கள் பொல்லாதவர்களாகக் காணப்படுகிறார்களே, தவிர, உண்மையில் அவர்களிடமும் இரக்கம் இருக்கத்தான் செய்கிறது என்பதை உணர்ந்தேன். "புதுப் பெண்ணின் மனதைத் தொட்டுப் போனவரே...உங்க... எண்ணத்தைச் சொல்லிவிட்டுப் போங்க" என்ற சினிமாப் பாடலை சீட்டியாலேயே பாடினார். பாவம், இதைவிட அதிகமான அளவுக்கு நான் அவரிடம் இரக்கத்தை, ஆதரவை, பெருந்தன்மையை, உபசாரத்தை எதிர்பார்ப்பதும் தவறுதான். தனது சட்டைப் பையைத் துளாவினார். தீப்பெட்டியை எடுத்துக் குலுக்கினார். பீடி குடிக்கப் போகிறார் என்பதை அறிந்தேன். குடித்தால் குடித்துவிட்டுப்போகட்டும்; தூய வாழ்வைப் பற்றி உலகிற்குச் சொல்லித்தர வேண்டிய எழுத்தாளன் கையில் வசதி வந்துவிட்டால் கோடைக்கானல், பெங்களூர், குற்றாலம் போய் இலக்கியம் சிருஷ்டிக்கிறான்; கையில் வசதி வருமுன்பு, ஒவ்வொரு நாளையும் அந்த எழுத்தாளனே, வெறும் ஐந்தாறு காப்பிகளால் தள்ளியிருக்கிறான்; நன்றாக எண்ணத் தெரிந்த இந்த எழுத்தாள இனத்திடமே இந்தனை பிழை மல்கிக் கிடக்கும்போது பாவம், குறைந்த சம்பளத்தோடு வாழும் போலீஸ்காரர்கள் குளிர் நேரத்தில் ஒரு பீடியைப் பற்றவைத்துப் பிடித்து மகிழ்ச்சி பெறுவது தவறில்லைதான்.

அன்பு செப்பும் சீர்திருத்தவாதிகளாக இருந்து கொண்டு, மறைவில் தாங்கவொண்ணு அட்டகாசம் செய்கிறார்கள்; அந்தக் காட்சியைவிட, வெறும் சிவப்புத் தொப்பியை அணிந்து கொண்டு, ஒரு பீடியைக் குடித்து தூர எறிந்துவிடும் காட்சி, எனக்கு மிக மிகத் தூய்மையானதாகத்தான் படுகிறது!

இப்படியெல்லாம் எண்ணிக் கொண்டிருக்கும்போதே அந்தப் போலீஸ்காரர் தாம் தமது சட்டைப் பையிலிருந்து எடுத்த நெருப்புப் பெட்டியை, மறுபடியும் சட்டைக்குள்ளேயே போட்டார். ஆச்சரியமாகப் போய்விட்டது, எனக்கு. இவர் என்ன மனோதத்வம் பயின்றவரா, நாம் இவர் பீடி குடிப்பதைப் பற்றி நினைத்ததும்,

ஏதோ நினைத்துக்கொண்டு நெருப்புப் பெட்டியை மீண்டும் சட்டைப் பைக்குள் போடுகிறாரே என்று எண்ணினேன்... ஆனால், என் எண்ணம் தவறாகி விட்டது!

நெருப்புப் பெட்டியைச் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டதும் அவர் என் முன் நிற்கவில்லை; நடந்தார்; எறிந்து முடிந்த கனல்களின் பக்கம் குனிந்தார்; புரியவில்லை......பிறகுதான் புரிந்தது! ஒரு குச்சியை நெருப்புப பெட்டியிலிருந்து வீணாக்க மனம் இல்லாமல், பீடியைக் குடிசைத் தீயிலிருந்து பற்றவைத்துக் கொண்டார். நல்ல சிக்கனக்காரர் என்று நினைத்துக் கொண்டிருக்கும் போதே, ஒரு குச்சிக்காக எப்போதோ இவர் கிடைக்காமல் கஷ்டப்பட்டிருக்க வேண்டும், அப்போதுதான் இவர் இந்தச் சிக்கனக் கல்வியைக் கற்றிருக்கக் கூடும் என்றெல்லாம் மேலும் நினைத்தேன். ஏழைப் போலீஸ்காரர்கள் ஒரு தீக்குச்சியைச் செலவிட இவ்வளவு சிந்திக்கிறார்கள்; நம் நாட்டு கவர்னர்கள் எத்தனையோ லட்சங்களைச் சிந்தனையின்றிச் செலவழிக்கிறார்கள்; அரசியல் நிர்ணய சபைகள், பாவம், இது பற்றி விவாதித்துக் கொண்டேயிருக்கின்றன என்பதுவரையிலும் எண்ணத் தலைப் பட்டேன்.

வண்டிச் சப்தம், இப்போது தான் கேட்டது.

தாத்தாவை நான் ஒருத்தியே தூக்கி, வண்டிக்குள் வைத்தேன்.

வண்டி நகர்ந்தது.

"நீயும் வண்டிக்குள் ஏறி உட்காந்துக்கோ, பாவம்" என்றார் ஒரு போலீஸ்!

"வேண்டாம் நான் நடந்தே வருகிறேன்" என்று நடந்தே வந்து கொண்டிருந்தேன்.

தாத்தாவைக் கொண்டு ஆஸ்பத்திரியில் சேர்த்தோம். அவரது உடலிலே எங்கும் தீக் காயங்கள். அவ்வளவும் மருந்திட்டுப் பஞ்சிட்டுக் கட்டப்பட்டன. விடிந்தது.

தாத்தாவுக்கு இப்போதுதான் சுய உணர்வே வந்தது.

"சந்திரா" என்று அழைத்தார்.

"தாத்தா."

டாண்...டாண்...டாண்!

---





# இருண்ட வாழ்வு

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

புதுமை மணம் கமழும் கற்பனைக் களஞ்சியமாகிய இருண்ட வாழ்வு, செல்லாத நோட்டு, மதுரை மீனாட்சி, லைலா-மஜ்னு, நல்லதங்காள், சிற்பி ஆகிய கருத்து நிறைந்த கதைகள்.

விலை 12 அணா

13 அணா ஸ்டாம்புகள் அனுப்பிப் பெறுக.

கலைமன்றம், சென்னை-1

"வெளியே போம்மா, வெளியே போ, நேரமாகி விட்டது" என்று என்னை நர்சுகள் விரட்டினார்கள்.

அதிகாரத்திற்கே முழு ஏஜண்டு களாக நியமிக்கப்பட்டிருக்கும் போலீஸ்காரர்களின் பேச்சில் காணப்படும் அன்பைக்கூட, அன்புக்கு முழு ஏஜன்டுகளாக நியமிக்கப்பட்டிருக்கும் நர்சுகளிடம் காணமுடியவில்லை.

முதலில் சொல்லிப் பார்த்தார்கள்—பிறகு, என்னை வெளியே தள்ளியே பார்த்துவிட்டார்கள்.

பரவாயில்லை; என்னைப் பிடித்து வெளியே தள்ளியதால் சுவரில் மோதி தலையில் சிறு காயம்; நான் எப்படிப் போனால் என்ன? என் தாத்தாவையாவது அன்புடன் பாதுகாத்து என்னிடம் தருவார்களா? என்ற எண்ணத்துடனேயே "எதிரொலி" பதிப்பகத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தேன்.

"கேஸ் சீரியஸ் தான்... ஆள் பிழைக்கிறது ஆபூர்வம்தான்" என்று என்னமோ டாக்டர்கள் அவர்களுக்குள் புன்னகை பூத்தவாறே பேசிக்கொண்டிருந்தார்களே; ஐயோ, அப்படியானால் என் தாத்தாவை நான் இனிமேல் ஒரு வேளை பார்க்க முடியாமற் போனாலும் போய்விடுமோ?

"எதிரொலி" பதிப்பகம் என்ற போர்டு என்னை நிறுத்தியது.

நின்றேன்.

வெளியே ஒரு பெஞ்சில் உட்கார்ந்து கொண்டிருந்த பையனிடம் சேதியைச் சொல்லி அனுப்பினேன்.

பையன் உள்ளே போனான்.

அவன் வர ஓரிரு நிமிடங்கள் ஆயின. அந்த நேரத்தில் ஒரு பிளஷ்ஷர் கார் வந்து நின்றது, வாசலில்.

பார்த்தேன்.

கலாநிதியும், அவரோடு அன்று குடிசைப் பக்கம் வந்து காருக்காகத் தண்ணீர் கேட்ட அவரது நண்பரும் காருக்குள்ளிருந்து இறங்கினார்கள்.

கலாநிதி 'கூலிங்-கிளாஸ்' கண்களை என்மேல் அலட்சியமாகத் திருப்பிக் கொண்டே பதிப்பகத்திற்குள் போனார்; அவரது நண்பர் சில விநாடிகள் நின்று என்னை ஒரு பார்வை பார்த்துவிட்டு உள்ளே போனார்.

இன்னும் சில விநாடிகள்.

என் தெய்வம் உள்ளிருந்து வந்து "சந்திரா நீ ஏன்ம்மா இங்கே வந்தே" என்று பதறிக் கொண்டே கேட்டது.

எல்லாம் சொன்னேன்.

காதுகள் கேட்டன; கண்கள் கண்ணீரைப் பெய்தன.

இரு என்று உள்ளே சென்றார்.

என் பக்கத்திலிருந்த ஆபீஸ் பையன் சிகரட் பற்ற வைத்துப் பிடித்தான்.

நாற்பது வயது வந்த போலீஸ்காரர்கள் இன்னும் தங்களால் பீடிக்குத்தான் சம்பாதிக்க முடிகிறது; இதோ, பதினாறு வயது கூட இருக்காது, இந்தப் பத்திரிகை ஆபீஸ் பையன் மதிப்புள்ள சிகரட் பிடிக்கச் சம்பாதிக்கிறான்! ஆகா! பையன் புகைக்கும் புகையிலிருந்து நம் நாட்டின் வருங்காலப் புகைகளை உணர்ந்து கொண்டேன்.

அதற்குள் என் அத்தான் உள்ளிருந்து வந்து விட்டார்.

காரில் ஏறு என்றார்.

ஏறினேன்.

டிரைவரிடம் ஒரு விலாசத்தைக் கூறினர்.

காரில் இருந்தவாறே கலாநிதியின் பெருந்தன்மையைப் பற்றி பேசினர். ஒப்புக்கொண்டேன். குடிசைத் தீப் பிடித்த விஷயத்தைச் சொன்னதும் கலாநிதி அப்படியே கவலையில ஆழ்ந்து விட்டதையும், ஊரிலிருந்து வரவிருந்த தம் அக்காள்—அத்தான் அவர்களுக்காகப் பார்த்து வைத்திருந்த வாடகை வீட்டுச் சாவியைத தம்மிடமே கொடுத்து விட்டதைப் பற்றியும் அத்தான் பிரமாதமாகப் பேசிக்கொண்டு வந்தார்.

கார் நின்றது.

இறங்கினேம்.

என்னை வீட்டிற்குள் கொண்டு விட்டு விட்டு, அத்தான் அந்தக் காரிலேயே கடைச்சாமான் வாங்கி வருவதாகச் சொல்லிக் கிளம்பினர்.

"அத்தான்..."

"வீடு வசதிதான சந்திரா?"

மிகவும் பெரிதாயிருக்கிறதே!"

"இருந்தாலென்ன; இந்த மாதத்திலிருந்து என் உழைப்பு அதிகம், சம்பளமும் அதிகம் வருகிறது சந்திரா."

"அந்த அதிகப்படும் தொகையை நாம் நினைத்தால் உழைக்கவே முடியாத ஏழைத்தோழர்களுக்காக உதவலாம் அல்லவா?"

"சந்திரா! இன்னும் நாலே தினங்களில் பார்! நம்மைபோன்ற—நமக்கு ஜோடி சேரத் தகுந்த—நாலு ஏழைக் குடும்பங்களைக் கூப்பிட்டு, நமது இந்த வீட்டுக்குள் 'போர்டின்' பிரித்துக் கொடுத்து நம்முடன் வாழ வைத்து விடுகிறேன் பார்" என்று சந்தோஷத்துடன் சொல்லியவாறே என் கன்னத்தில் செல்லமாகத் தட்டினர்.

**என் அத்தான் எப்பவுமே இப்படித்தான்; சந்தோஷம் வந்து விட்டால் போதும்; நேரம் காலம், நிலைமை இதுகள் ஒன்றுமே தெரியாது;** இவர் என் கன்னத்தில் செல்லமாகத் தட்டும் போது, பக்கத்தில் நின்று கொண்டிருந்த டிரைவர்தான் வெட்கப் பட்டுத் தலைகுனிய வேண்டியதிருக்கிறது!

அவர்கள் போனதும்...?

நடையில் நின்றேன். என் பார்வை எதிர் வீட்டில் சென்றது! எதிர் வீட்டு நடையில் அந்த சப்-இன்ஸ்பெக்டர் நின்றவாறே சிகரட் பிடித்துக் கொண்டிருந்தார்; வாசலில் போர்டைப் பார்த்து, அது அவர் வீடுதான் என்பதையும் புரிந்து கொண்டு, பயத்துடன் என் வீட்டுக்குப் போனேன்.

(தொடரும்)

## தாசிகள்

"தாசிகள் பற்றிய கதைகளை நீங்கள் நிரம்பப் படித்திருக்கலாம்—தாசி, ஒருவனிடத்தில் பணம் இருக்கும் வரையில்தான், 'என்னைத் தழுவிக்கொண்டே இருங்கள்; நீங்கள் இல்லாவிட்டால் நான் ஏது? நான் இல்லாவிட்டால் நீங்கள் ஏது?' என்று 'ஈருடலும் ஒருயிரும்' என்பது போலப் பேசுவாள்; ஆனல், அவனிடமிருந்த பணம் பூராவும் பறிபோன பிறகு, 'அவன் இனி நம் வீட்டிலிருந்தால் சோற்றுக்குக் கேடு,' என்ற நிலைக்கு வரும்போது, அவனைக் கழுத்தைப் பிடித்து நெட்டித் தள்ளி விடுவாள்; அதைப் போலவே தான் ஏகாதிபத்தியங்களும்!

—ஈ. வி. கே. சம்பத்

# இளம் எழுத்தாளர்கட்கு ஓர் அரிய வாய்ப்பு!

## மேதினச் சிறுகதைப் போட்டி

# 100-ரூபாய் பரிசு

### முதற் பரிசு: ரூ. 75 — இரண்டாம் பரிசு: ரூ. 25

**நிபந்தனைகள்:**

இப்போட்டியில் 18-வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம்.

கதையைத் தாளின் ஒரே பக்கத்தில் தெளிவாக எழுதியனுப்ப வேண்டும்.

'கலைமன்றம்' இதழில் 8-பக்கங்களுக்குக் குறையாமலும், 16-பக்கங்களுக்கு மேற்படாமலும் எழுதியனுப்ப வேண்டும். (அதாவது, புல்ஸ்கேப் பேப்பரில் 10-பக்கங்களுக்குக் குறையாமலும், 18–பக்கங்களுக்கு மேற்படாமலும் எழுதினல் போதுமானது.

நல்ல மையினுல், அடிக்காமல், இலக்கணப் பிழையின்றி அனுப்பப்படும் கதைகளையே பரிசீலனைக்கு ஏற்கப்படும்.

கதையில் முழுக்க முழுக்கப் புதுமை இருக்க வேண்டும். விபசாரம், ஆபாசங்கள் போன்ற புளித்துப் போன பழைய பாதைகளையே திருத்தி யமைத்து எழுதுவதும் கூடாது. சமூக சீர்திருத்தக் கதையாக இருக்க வேண்டும்.

அனுப்பப்படும் கதைகள் எந்தப் பத்திரிகைகளிலும் வெளிவராததாக இருத்தல் வேண்டும். மொழி பெயர்ப்பையோ, தழுவலையோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானுலும் அனுப்பலாம். அனுப்பப்படும் கதைகள் திருப்பியனுப்பப்பட மாட்டாது. தங்களிடமும் ஒரு நகலை வைத்துக் கொள்வது அவசியமாகும். இதற்கான கடிதப் போக்குவரத்துக் கூடாது.

கதையின் தலைப்பிற்கு மேல், 'போட்டிச் சிறுகதை' என்று குறித்து, அதன் கீழ் முகவரி விளக்கமாக எழுதி, **15—4—'55** தேதிக்குள் அனுப்பி வைக்க வேண்டும். அதற்குமேல் வரப்படும் கதைகள் கவனிக்கப்பட மாட்டாது.

ஒவ்வொரு கதையினுடே எழுத்தாளர்கள், தங்களின் சொந்தக் கற்பனையென்றும் எதிலும் கையாண்டது கிடையாதென்றும் உறுதிப் பத்திரம் எழுதியனுப்புதல் முக்கியம். அல்லாதவைகள் ஒதுக்கப்படும்.

ஐவர் கூடிய குழுவின் தீர்ப்பே முடிவானது. ஐவரின் பெயர்களையும், போட்டி முடிவு நாளன்று தெரிவிக்கப்படும். முடிவு நாள் **1—5—55**. பரிசு பெருத கதைகளுள், ஓரளவு நல்லகதைகளாக இருந்தால், கலைமன்றத்தில் பிரசுரிக்க ஏற்றுக் கொள்ளப்படும்.

சிறு கதைப் போட்டி ஆசிரியர்:

**கலைமன்றம்**

த. பெ. எண். 275 — சென்னை-1.




## காட்சி 6

தீஸ்ப் - ஒமோதேய்

ரொதோல்போவின் பெயர் ரமோனு - சுற்றித் திரிபவன் - சிறறரசன். முண்டம் ஒரு அறிவாளி! தூங்குகிற மனிதன் - கண்ணை மூடிக் காதைத் திறந்திருக்கும் பூனை.

தீஸ்ப்:- என்ன சொல்லுகிறுன்?

ஒமோ:- (தன் இசைக் கருவியைக் காட்டி) இந்த இசைக் கருவியின் நரப்புகள் விரும்புகின்ற ஒலியைக் கொடுக்கும்- ஆணின் இதயம் - பெண்ணின் இதயத்திலும் நரம்புகள் இருக்கின்றன. இசை மீட்டலாம்.

தீஸ்ப்:- என்ன சொல்லுகிறுய்- புரியவில்லையே!

ஒமோ:- அதுவா- இப்பொழுது உன்னை விட்டுச் செல்கிறுனே வாலிபன்-அவன் இன்றைய இரவு எங்குச் செல்கிருன் என்பதை நீ தெரிந்து கொள்ளலாம் என்பதுதான்.

தீஸ்ப்:- ஒரு பெண்வீட்டிற்கா?

ஒமோ:- அழகிலே சிறந்த அணங்கு வீட்டிற்கு!

தீஸ்ப்:- என்ன எனன சொல்கிருய் - நீ யார்?

ஒமோ:- எனக்கொன்றும் தெரியாது.

தீஸ்ப்:- யார் நீ - யாரப்பா நீ- நான் இதுவரை நினைத்துக் கொண்டிருந்த இசை மீட்டுவோனல்லவோ நீ. சர்வாதிகாரி அப்

பொழுதே சந்தேகப் பட்டார். சரியாகத்தான் இருக்கிறது. ரொதோல்போ ஒரு பெண்ணிடத்திலா - அதுவும் இன்றைய இரவு - அதுதானே நீ சொன்னாய் - நீ சொன்னது அதுதானே.

ஓமோ:- எனக்கொன்றும் தெரியாது.

தீஸ்ப:- கொடியவன். பொய் சொல்லுகிறான். நீ பொய் சொல்லுகிறாய். என்னிடம் இப்படிக் கோள் மூட்டச் சொல்லி யாரோ பணம் கொடுத்திருக்கிறார்கள் உனக்கு. ரொதோல்போ என்னைக் காதலிக்கிறான். என் பகைவர்கள்- ஆம் பகைவர்கள் செய்த சூழ்ச்சி- இப்படிப் பொய்ச் சொல்லி என்னைத் துன்பப் படுத்த முடியாது. போ - போ - உன் பேச்சில் எனக்கு நம்பிக்கையில்லை. போ- உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ.

ஓமோ:- சர்வாதிகாரி ஆன்ஜெல்லோ, கழுத்தில் தங்கச் சங்கிலி போட்டுக் கொண்டிருக்கிறாரே அதில் அழகிய வேலைப்பாடமைந்த பொருள் ஒன்று தொங்குகிறதே அது என்ன என்று உனக்குத் தெரியுமா? அது ஒரு சாவி. அந்தப் பொருள் மேல் உனக்கு ஆசையிருப்பதாக நடித்து அதை கேள். அதைக் கொண்டு நாம் என்ன செய்யப் போகிறோம் என்பதை வெளிக்குக் காட்டிவிடாதே நினைவிருக்கட்டும்.

தீஸ்ப:- அது சாவி என்று சொல்லுகிறாய்? ஊகும் நான் கேட்க மாட்டேன். எதையும் கேட்க மாட்டேன். நான் ரொதோல்போவைச் சந்தேகிக்க வேண்டுமென்பது உன் நோக்கமோ. எனக்கு அந்தச் சாவி வேண்டாம். போ - உன் பேச்சை நான் கேட்க மாட்டேன்.

ஓமோ:- அதே அவரும் வருகிறார். அந்தச் சாவி உன்னிடத்தில் கிடைத்தபிறகு யாவும் விளக்கமாகச் சொல்லுகிறேன். அந்தச் சாவிதான் இரவு உனக்குப் பயன் படப் போகிறது. அதை எப்படியாவது வாங்கிக்கொள். இன்னும் கால் மணி நேரத்தில் நான் திரும்பி வந்து உன்னைப் பார்க்கிறேன்.

தீஸ்ப:- அறிவற்றவன்! நான் சொல்லுவது உனக்குக் கேட்கவில்லையா - மீண்டும் கூறுகிறேன்- எனக்கு அந்தச் சாவி வேண்டாம். ரொதோல்போ மீது எனக்கு நம்பிக்கை உண்டு. அந்தச் சாவி எனக்கு வேண்டாம். உன் மேல் எனக்கு நம்பிக்கையில்லை நீ திரும்பி வர வேண்டும் - பயனற்றது - போ.

ஓமோ:- இன்னும் கால் மணி நேரத்தில்.

(போகிறான். ஆன்ஜெல்லோ வருகிறான்)

## காட்சி 7

தீஸ்ப—ஆன்ஜெல்லோ.

தீஸ்ப:- ஆ-நீங்களா-பிரபுவே-! யாரைத் தேடுகிறீர்கள்?

ஆன்:- ஆம்—விர்ஜிலோ தஸ்காவைத் தேடுகிறேன். அவனிடம் ஒரு செய்தி கூற வேண்டும்.

தீஸ்ப:- இன்னும் என்மீது ஐயமும் பொறாமையுந்தானா?

ஆன்:- ஆம்......

தீஸ்ப:-நீங்கள் ஒரு பைத்தியம் எதற்காகப் பொறாமைப்பட வேண்டும். அதனால் என்ன நன்மை. நான் ஒரு மனிதரைக் காதலிக்கி

றேன்—ஒருகாலமும் நான் அவர் மேல் பொறுமைப்பட மாட்டேன்.

ஆன்:- அப்படியென்றால் நீ யாரையும் மனமாரக் காதலிக்க வில்லையென்பதுதான் பொருள்.

தீஸ்ப்:- ஆம்-நான் ஒருவரை உண்மையாகக் காதலிக்கிறேன்.

ஆன்:-யார் அது?

தீஸ்ப:- நீங்கள்தான்.

ஆன்:- உண்மையாகவா நீ என்னைக் காதலிக்கிறாய்?—நிச்சயமாகவா? நீஎன்னிடம் விளையாடாதே-என்ன சொன்னாய்—எதோ மறுமுறை சொல் கேட்போம்.

தீஸ்ப்:- நான் உங்களைக் காதலிக்கிறேன் — (மகிழ்ச்சியோடு அவள் அருகில் ஆன்ழெல்லோ நெருங்குகிறான்—அவள் அவன் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை எடுத்து) அட இது என்ன நகை—நன்றாக இருக்கிறதே—நான் இவ்வளவு நாட்களாக இதைப் பார்த்ததில்லையே—நல்ல வேலைப்பாடு. அழகாக இருக்கிறது. இது என்ன இது. பெண்களுக்கேற்ற நகை போலல்லவா இருக்கிறது இது.

ஆன்:- தீஸ்ப்—என் கண்ணே—இன்னும் ஒருமுறை அந்த வார்த்தையைச் சொல்—"நான் உங்களைக் காதலிக்கிறேன்" என் உடலெல்லாம் பூரிக்கிறது. இந்தச் சொல்லைக் கேட்டு—

தீஸ்ப்:- சரி—இது என்ன நகை சொல்லுங்களேன்.

ஆன்:- அதுவா—அது ஒரு சாவி.

தீஸ்ப்:- சாவியா—நான் அப்பொழுதே ஐயப்பட்டேன் இதனாலேயா திறக்க முடியும்.

ஆன்:- ஆம் என் கண்ணே.

தீஸ்ப்:- அது சாவியாக இருப்பதால் எனக்கு வேண்டாம்.


**கவிஞர் சுப்பு ஆறுமுகம் எழுதியவை**

பெண்ணின் பெருமை, கற்பின் உயர்வு அத்தனையும் சித்தரிக்கும் ஓர் அற்புத நாவல்.

**நல்ல பெண்மணி**

விலை ரூ. 2-4-0

வீரத்தின் பிறப்பிடம், தாய்நாட்டின் பெருமையைப் பாருக்குரைத்த பண்பாளன் வரலாறு.

**வீரபாண்டியன் கட்டபொம்மன்**

விலை ரூ 1-0-0

விபரங்களுக்கு:

கலைமன்றம்—சென்னை 1.


ஆன்:- சற்று முன்பு ஆசைப்பட்டாயே?

தீஸ்ப்:- ஏதோ நகையென்று நினைத்தேன்.

ஆன்:- எடுத்துக் கொள்.

(தங்கச் சங்கிலியிலிருந்து அந்தச் சாவியைக் கழற்றுகிறான்)

தீஸ்ப்:- வேண்டாம்—வேண்டாம். அது சாவியென்று தெரிந்து இருந்தால் நான் அதைப் பற்றியே கேட்டிருக்க மாட்டேன். அது எனக்கு வேண்டாம்—உங்களுக்குத் தேவையாக இருக்கும்.

ஆன்:- எப்பொழுதோ தேவை. அடிக்கடியல்ல—என்னிடத்தில் இதே சாவி வேறொன்றிருக்கிறது. நீ எடுத்துக் கொள்.

தீஸ்ப்:- வேண்டாம். எனக்கெதற்குச் சாவி. மிகச் சிறியதாக

இருக்கிறதே, இதைக் கொண்டா கதவுகளைத் திறக்க இயலும்.

ஆன்:- இந்தச் சாவி இரகசியப் பூட்டுகளுக்காகச் செய்யப்பட்டது. ஒரு படுக்கை அறையைக்கூடத் திறக்கலாம். பரவாயில்லை. நீ இதை எடுத்துக் கொள்.

தீஸ்ப:- நீங்கள் கட்டாயப்படுத்துவதால் எடுத்துக் கொள்கிறேன். பெண்களுக்கேற்ற நகையாகத்தான் இது இருக்கிறது.

(சாவியை வாங்கிக் கொள்கிருள்)

ஆன்:- நற்காலம் எனக்கு! ஏதோ ஒன்று என்னிடத்திலிருந்து பெற்றுக் கொண்டாயே—அதுவே போதும்—மகிழ்ச்சி!

தீஸ்ப:- வேனிஸிலிருந்து வந்த தூதுவரைச் சற்று முன் தேடினீர்களல்லவா? மறந்தே போனேன். அதோ-விர்ஜிலியோதொஸ்கா—வேனீஸ் குடியரசுத் தூதுவர். உங்களுக்காகத்தான் அங்கே காத்துக் கொண்டிருக்கிருர்—நல்ல மனிதர்—போங்கள்—நேரமாகிறது. போங்கள். பிறகு பேசுவோம்.

ஆன்:- உண்மையாகவா?

தீஸ்ப:- நீங்கள் அவரிடம் ஏதோ செய்தி பேச வேண்டுமென்று சற்று முன் தேடவில்லையா—போங்கள்.

ஆன்:- என்னை விட்டுப் போவதற்காகவா இந்தப் பொய்.

தீஸ்ப:- அதோ. அதோ. அங்கே இருக்கிருர்.

ஆன்:- (அவள் கையைப்பிடித்து முத்தமிட்டு) தீஸ்ப் நீ என்னைக் காதலிக்கிருய் அல்லவா?

• தீஸ்ப:- அதோ. அதோ. தெஸ்கா உங்களுக்காகக் காத்துக்கொண்டிருக்கிருர்.

(ஆன்ழெல்லோ போகிருன்—ஓமோதேய் அரங்கிற்கு வருகிருன். தீஸ்ப் அவனிடத்திற்கு ஓடுகிருள்.)

## காட்சி 8

தீஸ்ப்—ஓமோதேய்—

தீஸ்ப்: இதோ நீ சொன்ன, சாவி வாங்கி வந்து விட்டேன்.

ஓமோ: காட்டு—(வாங்கித் திருப்பித் திருப்பிப் பார்க்கிருன்) ஆம். இதுவேதான். சர்வாதிகாரியின் அரண்மனையின் கீழ்ப்பாகத்தில் ஒரு பகுதி மொலிஞே பாலத்தைப் பார்த்தாப் போல் இருக்கிறது. இன்று மாலை-அங்கே-ஒரு மரச்சாமானுக்குப்பின் புறமாகிலும் - திரைச்சீலைக்குப் பின் புறமாகிலும் நல்ல இடமாகப் பார்த்து மறைந்திரு. சாமத்திற்குப் பின், இரண்டு மணிக்கு வந்து நான் உன்னை அழைத்துப் போகிறேன்.

தீஸ்ப்: (பணப் பையை அவனுக்குக் கொடுத்து) இன்னும் அதிகமாகத் தருகிறேன். அச்சாரமாக இதைப் பெற்றுக் கொள்.

ஓமோ: உங்கள் விருப்பப்படி நடக்கட்டும். நான் சொல்வதைக் கேளுங்கள். சாமத்திற்குப் பின் இரண்டு மணிக்கு - நான் உங்களை வந்து பார்க்கிறேன். நீங்கள் போக வேண்டிய வழியைக் காட்டுவேன். முதல் கதவை இதோ நீங்கள் வைத்திருக்கிற சாவியால் திறக்கலாம். பிறகு உங்களை விட்டுவிட்டுச் சென்று விடுவேன். மற்றவை நீங்களே பார்த்துக் கொள்ளலாம். நேராக அந்த வழியே போக வேண்டியது தான்.

தீஸ்ப்: முதல் கதவைத் தாண்டிய பிறகு என்ன இருக்கும்?

ஓ[illegible] இரண்டாவது கதவு அ[illegible] இந்தச் சாவியாலேயே திறக்கல[illegible].

நீஸ்ப்: இரண்டாவதற்குப் பிறகு.

ஓமோ: மூன்றுவது கதவு. அதையும் இச் சாவியே திறக்கும்.

மூன்றுவதற்குப் பிறகு?

ஓமோ: நீங்களே பார்ப்பீர்கள்.

* *

## களம் 2

### இரண்டாம் நாள்

[ஆடம்பரமாக அலங்கரிக்கப்பட்ட ஒரு அறை. எங்கும் பொன் சரிகை இழைத்த சிவப்புப் பட்டுச் சீலைகள் தொங்குகின்றன. இடப்பக்கம் மூலையில் அழகிய தந்தக் கட்டில்—கட்டிலின் நான்கு கால்களின் மீதும் வெற்றிக் கம்பங்கள் வேலைப்பாடோடு அமைந்து நீண்டு உயர்ந்து நிற்கின்றன. கால்களில் அழகிய சால்வைகள் கட்டிலை மறைத்துத் தொங்குகின்றன. வேண்டும் போது விலகிக் கட்டிலை மூடிக் கொள்ள ஏற்றவாறு பட்டுக் கயிறுகள் பொருத்தப்பட்டுள்ளன. வலப்புறம் திறந்த சன்னல்—பட்டுத் திரையால் மூடிய கதவுக்கருகில் பித்தளைச் சிலுவை ஒன்று—அறையினுள்—இரண்டு கதவுகளையுடைய பெரிய வாயற்படி—மற்றொரு சிறிய கதவு அழகாக அலங்கரிக்கப்பட்டுள்ளது. சிறிய மேஜை. மேஜையின் மீது கடவுள்சிலை. விளக்கு—சாளரவழி வெளியில் நிலா முற்றம். பூச்செடித் தொட்டிகள். மணிக்கூண்டு.]

### காட்சி 1

தப்ன்—ரெழினெல்லா—பிறகு ஒமோதேய்.

---

## வடநாடும், தென்னுடும்

ரூபாய்க்கு 14 அணு திட்டம் வடநாட்டில்! 2 அணு திட்டம் தென்னுட்டில்! 'ஏன் இந்த நிலை,' என ஆராய்ந்தால், வெள்ளைக்காரன் வெளியேறுவதற்கு முன்னர் டாட்டா, பிர்லா போன்றவர்கள் கூடி வகுத்த 'பம்பாய் திட்டமும்,' அகில இந்தியக் காங்கிரஸ் வகுத்திருந்த பொருளாதாரத் திட்டமும் அப்படியே சிறு மாற்றங்களுடன், இப்பொழுது, இந்திய சர்க்காரின் ஐந்தாண்டுத் திட்டம் என்று கூறி, அதற்கு 2,069 கோடி ரூபாயை வரியாகவும், கடனுகவும், மற்ற நாட்டு உதவியுடனும் பெற்று செய்கின்முர்கள்; இந்தியாவில் உள்ள மொத்தம் 36 கோடி மக்களில் மூன்றில் ஒரு பகுதிக்கு அதிகமாக உள்ள 12 கோடி மக்களுக்கு பட்டை நாமம் போடுகின்ற திட்டத்தை வகுத்துள்ளார்கள்; 2,069 கோடி ரூபாய் 2120 ஆக, 2,300 ஆக, 2,600 கோடியாக வளரும் என்று யூகம் சொல்கின்முர்கள்; இதில் பெரும் பகுதியை வடநாட்டில் செலவழிக்கின்முர்கள்; 12 கோடி மக்கள் வாழும் தென்னுட்டுக்கு செலவழிப்பது 100 கோடி ரூபாய் கூட இல்லை.

—ஈ. வி. கே. சம்பத்

ரெழி: தப்ன் — கேட்டாயா? இராக்காவற்காரன் என்னிடம் கூறினன். உண்மைதானும்-சிறிது நாட்களுக்கு முன்பு தான் நடந்ததாம்—ராணி—முன்பு வெளியூருக்குப் போய் வந்தார்களே—அப்போதுதானும்—ஒரு துப்பறிபவன்—நன்றி கெட்ட துப்பறிபவ்ன்—ராணி அம்மா மீது காதல் கொண்டானும்—துணிந்து கடிதம் கூட எழுதினனும். அவர்களைப் பார்க்க வேண்டுமென்று — அது நடக்கக் கூடியதா? ராணி அவனை அடித்துத் துர்த்தச் செய்தார்களாம். நல்ல வேலை செய்தார்கள்.

தப்ன்: (கடவுளை வணங்குகின்ற இருக்கையின் அருகில் இருந்த கதவைத் திறந்து. கொண்டே) சரி—ரெழினெல்லா-ராணி அம்மா படிக்கிற நேரம் இது—சீக்கிரம் வேலையை முடி.

ரெழி: (மேஜையின் மீது புத்தகங்களை அடுக்கிக்கொண்டே) மற்ருெரு செய்தி — அடேயப்பா—அது மிகக் கொடுமை யானது அது எனக்கு நன்ருகத் தெயுரிம். நம் தலைவனிடத்தில் சொல்லுவதற்காகப் போனன் அந்த அரண்மனை வேலைக்காரன். அவ்வளவு தான். அன்று மாலையே திடீரென்று அவன் இறந்துவிட்டான். என்ன தெரியுமா அது—நஞ்சு—நான் உனக்கு முன் கூட்டியே சொல்கிறேன். விழிப்பாக வாயை மூடிக் கொண்டிரு. இந்தக் கோட்டைச் சுவர்கள் ஒவ்வொன்றிலும் **C. D. X.** ஒவ்வொன்று கேட்டுக் கொண்டே இருக்கும் தெரிகிறதா?

தப்ன்: ஊம். விரைவாக வேலையை முடி. இன்னொரு சமயம் பேசுவோம். அம்[illegible]ந்துக் கொண்டிருக்கிருர்கள்.

ரெழி: (நூல்களை [illegible]க்கிக் கொண்டே மேஜையின் மேல் எதையோ பார்த்துக்கொண்டே) உனக்கு அவசரமாக இருந்தால் நீ போ இதோ உன் பின்னே வந்து கொண்டேஇருக்கிறேன்.

(ரெழினெல்லா பார்ப்பதற்கு முன் கதவை மூடிக்கொண்டு அறையை விட்டுப் போகிருள் தப்ன்)

தப்ன்! இந்தப் பாழாய்ப் போன கோட்டையைப் பற்றி இன்னும் உனக்குச் சொல்லுகிறேன் கேள். இந்த ஒரு இடத்தில் தான் சற்றுப் பயமில்லாமல் பேசலாம். நிச்சயமாக இதை யாரும் கேட்க முடியாது. எது வேண்டுமானுலும் பேசலாம். இந்தக் கோட்டையில் இங்கு தான் எது பேசினுலும் வெளிக்குக் கேட்காது. யாரும் மறைந்து கேட்க முடியாதாம்.

(இந்தக் கடைசி வாக்கியத்தை அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதுதான்- அறையிலிருந்த பாத்திரங்கள் வைக்கும் சிறிய அலமாரி தன்னில் தானே சுழன்று ஒமோதேய்க்கு வழிவிட்டுத் திரும்பவும் மூடிக் கொள்கிறது. அது அவளுக்குத் தெரியாது)

ஒமோ: இந்த ஒரு இடத்தில் தான் சற்றுப் பயமில்லாமல் பேசலாம். நிச்சயமாக இதை யாரும் கேட்க முடியாது.

ரெழி: (திரும்பிப் பார்க்கிருள்) ஆ... ...கடவுளே!

ஒமோ: சத்தம் வரப்போகிறது! (தன் மேலாடையில் மறைத்திருந்த வேனீஸ்பதின்மர் குழு

வின் ஒற்றன் என்ற C. D. X. என்ற அடையாளத்தைக் காட்டு கிருன். ரெழினெல்லா அந்த அடையாளத்தையும், ஆளையும் பயத்தோடே பார்க்கிருள்) எங்களில் யாரையாவது ஒருவனைப் பார்த்த செய்தியை யாராக இருந்தாலும், யாருக்காகிலும் சிறு சைகை மூலங் கூடத் தெரிவித்தால் போதும் - விடிந்தால் அவர்கள் உயிர் இருக்காது. இது உனக்குத் தெரியுமல்லவா? நினைவிருக்கட்டும்.

ரெழி: சேசுவே! எந்த வழியால் இவன் வந்தான்.

ஒமோ: எந்த வழியாலுமல்ல.

ரெழி: சேசுவே!

ஒமோ: நான் கேட்பதற்கெல்லாம் விடை கூற வேண்டும். என்னை ஏமாற்றக் கூடாது. உன் உயிர்மேல் நினைவிருக்கட்டும்— (உள்ளே இருக்கிற பெரிய கதவைக் காட்டி) இந்த வழி எங்குச் செல்கிறது.

ரெழி: சர்வாதிகாரியின் படுக்கை அறைக்கு.

ஒமோ: (சிறிய கதவைக் காட்டி) இது?

ரெழி: இது இரகசிய வழி. கோட்டையின் கீழ்ப்பக்கம் செல்கிறது. இதன் சாவி சர்வாதிகாரி ஒருவர் இடத்தில் தான் உண்டு.

ஒமோ: (கடவுளைத் தொழும் இருக்கையின் அருகில் உள்ள கதவைக் காட்டி) இது?

ரெழி: அரசியின் வழிபாட்டறை.

ஒ[illegible]ா: அந்த அறையில் ஏதா[illegible]து வழி இருக்கிறதா?

ரெ[illegible] இல்லை. இரும்புக் கம்பிகள் [illegible]தித்த ஒரே ஒரு சன்னல் [illegible]ன் உண்டு.

## வாழ முடியும்

"எனவேதான், நாம் சற்று புத்திசாலித்தனமாக, நம்மிடம் கொஞ்ச நஞ்சம் இருக்கும் செல்வமும் சுரண்டப்படுமுன் புத்திசாலித்தனமாகவட நாட்டு ஏகாதிபத்திய அணைப்பினின்றும் விலகிக் கொள்ள வேண்டும் என்று தி. மு. கழகம் கூறுகிறது; அப்போதுதான் இந்த நாட்டு விவசாய, தொழிலாள, பாட்டாளிவர்க்க மக்கள் நலம் பெற்று, நல்ல பல திட்டங்கள் தீட்டி, தொழில் வளர்த்து, செல்வம் பெருக்கி, சுதந்திரத்துடன் வாழ முடியும்.

—ஈ. வி. கே. சம்பத்

ஒமோ: (சன்னலருகில் போகிருன்) இந்த உயரமேதான் இருக்கிறது அந்தச் சன்னலும். இருக்கட்டும்—எண்பது அடி உயரமான சுவர். கீழே பெரிய ஆறு. ஊம்- இது என்ன சிறிய படிக்கட்டு- இது எங்கே ஏறுகிறது?

ரெழி: என் அறைக்கும் தப்ன் அறைக்கும் போகிறது.

ஒமோ: அந்த அறையில் ஏதாவது வழி யிருக்கிறதா?

ரெழி: இல்லை. இரும்புக் கம்பியிட்ட ஒரே சன்னல் தான் உண்டு. வேறு கிடையாது.

ஒமோ: உன் ராணி இங்கு வந்தவுடன் நீ உன் அறைக்குச் சென்று விட வேண்டும். எதை யும் கவனிக்காது- எதையும் சொல்லாது நீ இருக்க வேண்டும். தெரிகிறதா?

ரெழி: அப்படியே நடக்கிறேன்.

ஒமோ: உன் ராணி எங்கே?

ரெழி: வழிபாட்டு அறையில் கடவுளைத் தொழுகிறார்கள்.

ஒமோ: அரை மணி நேரத்திற்கு முன் வரமாட்டார்களே?

ரெழி: இல்லை, வரமாட்டார்கள்.

ஒமோ: சரி - போ. வாயைத் திறக்கப் போகிறாய் - இங்கு என்ன நடந்தாலும் அதைப்பற்றி நீ கவனிக்கக் கூடாது. வாயைத் திறக்கக் கூடாது. நடக்கிறபடி விடவேண்டும். பூனை எலியோடு விளையாடுகிறது. அதைப் பற்றி உனக்கென்ன? என்னைப் பார்த்தாய் அல்லவா. நான் இங்கு இருப்பது உனக்குத் தெரியும்— தப்பித் தவறி ஒரு வார்த்தை— ஒரு கண் அசைவு—சாடை, சீண்டுதல் எது செய்தாலும் எனக்குத் தெரியும் போ!

ரெழி: கடவுளே—இங்கு யார் சாகப் போகிறார்களோ?

ஒமோ: வாயைத் திறந்தாயோ நீதான் - நீயேதான் சாவாய். (ஒமோதேய் அவளுக்குச் சைகை காட்டுகிறான். அவள் தன் அறைக்குப் போய் விடுகிறாள். ஒமோதேய் அந்தப் பாத்திரங்கள் வைக்கும் சிறிய அலமாரியின் அருகில் போகிறான்—அது சுழன்று வழி விடுகிறது)

ரொதோல்போ— இப்பொழுது வரலாம்— ஒன்பது படிகளே இருக்கின்றன. ஏறுங்கள் மேலே.

(படியில் ஏறும் சப்தம் கேட்கிறது-ரொதோல்போ வருகிறான்)

—தொடரும்

# சோற்றுப் பிரச்சினை

"இது வெறும் மானத்தைப் பற்றிய பிரச்சினை மட்டு மல்ல; கம்யூனிஸ்டு தோழர்கள் அடிக்கடி ஆசையோடு பேசும் சோற்றுப் பிரச்சினையும் இதில்தான் அடங்கியுள்ளது; எனவே, இராணுவ பலத்தை வைத்துக்கொண்டு வடநாடு, தென்னாட்டை ஆட்சி செய்கின்றது! காங்கிரஸ் சர்க்காரின்—டெல்லி சர்க்காரின் சாகசம், இனியும் தென்னாட்டு மக்களை ஏமாற்ற முடியாது.

"அகில இந்தியக் காங்கிரஸ் மாநாட்டை ஆவடியிலே கூட்டிக் காட்டினாலும் 30 இலட்சம் செலவு செய்து காட்சி ஜோடனைகளைக் காட்டினாலும், 'சோஷலிசம் மாதிரி' என்று தீர்மானம் போட்டாலும், தென்னாட்டு மக்கள் ஏமாறமாட்டார்கள்.

"எனவே, சென்னை சட்டசபையிலே டெல்லி சர்க்காரின் ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டித்து, தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்; இதைச் செய்யுமா, காமராசர் சர்க்கார்? டெல்லி சர்க்காரின் ஓரவஞ்சனையை எதி[illegible]து, அது போராடுமா?

ஈ. வி. கி. சம்[illegible]




பன்னிரண்டாம் அத்தியாயம்

# "நல்ல துணைவன்"

தங்கச் சிலைரூபி தரங்கிணியின் அழகை, மறைவாக நின்று கவனித்துகொண்டிருந்தஒருஉருவம், அவளைக் கடத்திக் கொண்டு போகவேண்டுமென்ற எண்ணத்தில் எதிர்பார்க்கவே, சூர்யகாந்தனும், சாரங்கனும் சென்றதும் தன் முயற்சியைக்கொஞ்சம்வேகமாகத் தட்ட முயன்றது! அந்த முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கத்தானே என்னமோ அந்த உருவத்தைத் தொடர்ந்து மற்றொரு உருவம் மறைந்திருந்தது.

பயங்கரமான அந்த உருவத்திற்குப் பாத்திரமான தரங்கிணி, அதன் முரட்டுக் கரங்களுக்கு ஆளாகவே, பெரிதும் பயந்து பேரிரைச்சலிட்டாள், சோலையே எதிரொலிக்கு மளவிற்கு! அந்த எதிரொலியின் காரணமாகத் தான், நெடுந்தூரம் சென்று கொண்டிருந்த சூரியகாந்தன் திரும்பிப் பார்த்து, உருவிய வாளுடன் ஓடிவந்தான்.

மறைந்து கவனித்துவந்த உருவத்தின் திடீர் தாக்குதலால், அந்த முரட்டு உருவம் வாளை யுருவியது.

இரண்டு உருவங்களும் பயங்கரப் போர்புரிந்தன. புள்ளினத்தின் ஆரவாரம் ஒலித்துக் கொண்டிருந்த பூங்காவில், போரின் காரணமாக வாள் சத்தம் எழும்பி பயங்கரப் படுத்தத் தொடங்கியது. இரண்டு உருவங்களும் ஒரே பாசறையில் பயின்ற சிங்கங்களோஎன்று எண்ணுமளவிலிருந்தது, வாள் வீச்சின் சாயலின் காரணமாக.

இருவரும் ஒருவர்க்கொருவர் இளைத்தவராகத் தெரியவில்லை.

பிடிகள் அத்தனையுமே, இருவரிடமும் ஒரே பாணியில் இருப்பதைக் காணும்போது. முதலில் தரங்கிணியைத் தூக்கிச்செல்ல முயற்சித்த உருவத்தைக் கொஞ்சம் உற்று கவனித்தால் வங்கி யுவராஜன் கேசவசேனனாகத் தான் தெரிகிறது. ஆம். தலைப்பாகை கழன்று விழுந்து விட்டது. நிச்சயமாக நாம் கேசவசேனன் என்று திட்டவட்டமாகத் தீர்மானித்தாலும், மறைந்து வந்துத் தாக்கிய உருவம்மட்டும் முன்னமே தெரிந்து கொண்டது.

கேசவசேனன் இங்கு எப்படி வந்தான்; எதற்காக வந்தான்; என்ற ஐயம் ஏற்பட வேண்டியதில்லை; ஏனென்றால், முன்னமே சோழன் இராஜராஜன் பாண்டியனைப்பழிவாங்க, வாமதேயர், உருத்திரப்பட்டர் மூலமாக சேனனை துணைக்கழைத் திருக்கிறான்என்பது தெரிந்த விஷயமே.

சோணாட்டை யடைந்த வங்கத்தின் எதிர்கால மன்னன் கேசவசேனன், பாண்டிய நாட்டு வளத்தைப் பற்றிக் கேள்விப்படவே, மாறுவேடத்தில் அதன் வடிவழகைத் தரிசிக்க வந்திருந்தான். வந்த இடத்தில் திங்கள் முகம் கொண்ட பெண்கள்வாழும்நாடாகத் தெரிவதைக் கண்டு, மனத்திலே குடிக்கொள்ளக் கூடாத எண்ணங்களைக் குத்தகை எடுத்துக்கொண்டான். அப்படிச் சுற்றிப்பார்த்து வரும்போது. கண்களில்பட்டவள்தான் தரங்கிணி. தரங்கிணியைஎப்படியும் கடத்திச் சென்றுவிட வேண்டுமென்று கருதினான் கேசவசேனன், நடமாடும் அழகுருவமாக அமைந்திருந்ததால்!

அவன் முயற்சி, சோலையிலே சுயரூப மெடுக்க முனைந்தது. ஆனால் சொப்பனம்தான் காண முடிந்ததென்பதை. மறைந்து வந்து தாக்கிய உருவத்திற்கப்புறம் எண்ணிக் கொண்டான்.

இருவர்க்குமிடையே நடந்த பயங்கரப்போரைப் பயந்த வண்ணமாக நின்று பார்த்துக் கொண்டிருந்த பாவை தரங்கிணி, முடிவென்னருமோ என்று மூச்சுகளின்மூலம் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள். அந்த நேரம் இளவரசன் குலசேகரன் வரக்கூடாதா என்றுகூடஎண்ணி அக்கம்பக்கத்தைக் கவனித்தாள். என்றாலும், காக்கவந்த அந்த உருவத்தின் கம்பீரமான வாட் சண்டையைக் கண்டு, 'எப்படியும் மீள்வோம்' என்ற ஒரு அசட்டுத் தைரியம் அவளுக்கு இருக்கத்தான் செய்தது.

மனத்தைப் பிசைந்துகொண்டு முடிவை எதிர்நோக்கி இருந்த தரங்கிணி 'ஆ' என்றலறினாள். காக்கவந்த அந்த உருவம் கவனக் குறைவின் காரணமாக வாளைச் செலுத்தவே, கேசவசேனன் குறுக்கே பாய்ந்தான். அந்தப் பாய்ச்சலுக்குப் பலியாகாமல் தப்பிக்கப் பதுங்க எண்ணியபோது, அந்த உருவம் தரையிலே சாய்ந்தது. அதன் காரணம்தான் தரங்கிணியை அலறவைத்தது. அந்த மரணப்பிடியில் தப்பிக்க மாட்டோம் என்று திட்டவட்டமாக எண்ணி விட்டது அந்த உருவம். ஆனால் மறுகணம், வாளை உருவிக் கொண்டு ஓடிவந்த சூர்யகாந்தன் இடத்தை அடைந்திடவே, கேசவசேனனின் வாளைத்தடுத்து

விழுந்த உருவத்தின் உயிரைக் காப்பாற்றியது. அதுமட்டுமல்ல, கீழே விழுந்த வேகத்தில், அந்த உருவத்தின் மாறுவேடம் கலைந்துவிடவே, "ஆ...நீயா!" என்றும் அலறிவிட்டான் கேசவசேனன்.

இரண்டுபேர்களிடையே இனி உயிர்தப்புவது எளிதான காரியமல்ல என்று நினைத்த கேசவசேனன், சந்தர்ப்பம் கிடைத்ததும், ஓடி பக்கத்திலிருந்த குதிரையின்மீதுப் பாய்ந்து வேகமாகச் செலுத்தி மறைந்து விட்டான்.

சூர்யகாந்தன், தரங்கிணியின் உயிரைக் காக்கவந்த உருவத்தை உற்று நோக்கினன். அந்த உருவத்தின் முகத்தில் வீரம் குடிகொண்டிருந்தாலும், அதைவிட ஒழுக்கத்தின் உயர்ந்த சாயல் படிந்திருந்தது. அதற்குள் சாரங்கனும் அங்கு வந்துவிடவே, மனக்குழப்பம் தாளாத தரங்கிணி, மறுகணம் 'கோ'வென்று கதறியவண்ணம் அவனைச் சேர்த்துக் கட்டிக்கொண்டாள்.



கோவி.மணிசேகரன்

சாரங்கனுக்கு நடந்ததென்னவென்றே புரியாமல் திகைத்தான். அவன் நெஞ்சு படபடத்துக் கொண்டிருந்தது.

சூர்யகாந்தன், அந்த உருவத்தையே நோக்கிக் கொண்டிருந்தான். அந்த உருவம் கம்பீரமாக சூர்யகாந்தனை நோக்கினலும், சாரங்கனை நோக்கியதும், ஏனே, ஒரு உணர்ச்சிக்குக் கட்டுப் பட்டதுபோல் காணப்பட்டது.

சாரங்கன்
உற்றுக் கவ
காகத்தான்
அவன் கண்க
திக்கில் செலு
நாழிகை எடு
னவோ?

இத்தனைக்கு
னவாயிருக்கும்
உருவம் சாரங்கனை நோக்கியதும் ஆச்சரியத்தில் மூழ்கியது? சாரங்கன் கூட சிறிது நேரம் தன் கண்களைத் திகைக்க வைக்குமளவிற்கு அந்த உருவத்திடம் என்ன கண்டான்? ஆம். அந்த உருவம் வேறுயாருமில்லை; சேனநாட்டுச் சிறை விழுங்கியதும், சந்தர்ப்ப வசத்தால் சதிக்கு ஆளான சாருதத்தனல் மீட்கப்பட்ட ருத்ரசேனன் என்பதை நீங்கள் தெரிந்து கொண்டாலும், மாற்றுருவில் நடமாட எண்ணிய சூர்யகாந்தன் எப்படி அறிவான். அப்படியென்றல் மாற்றுருவம் தரித்த சூர்யகாந்தன்......?

"நண்பா! இந்த உருவம்தான் தரங்கிணியின் உயிரைக்குடிக்க எத்தனித்ததா?"—சாரங்கன் இதைக்கேட்கும்போது, அவன் வார்த்தைகளில் வெறுப்புத் தொனி இருக்கத்தான் செய்தது.

சூர்யகாந்தன் பதிலளிக்க வாயெடுத்தான். அதற்குள், அந்த உருவம்—இல்லை ருத்ரசேனன், "தரங்கிணியின் உயிரை நான் குடிப்பதா? இறைவனே!' அதைவிட என் உயிரை நானே

திருக்கலாம்"
க்கச் சொன்

இந்தப் பதில்,
ஆச்சரியத்தில்
தரங்கிணியின்
ுக்கேன் இத்
ன்ற கேள்வி
ழுந்தது. தரங்கிணியின் உயிருக்கு ஆபத்துவரும் என்று தெரிந்து, இவன் ஏன் மெய்க் காப்பாளன் போல் இருந்து வரவேண்டும்? அப்படியென்றால், இவன் ஈஸ்வர சிவ உடையாரின் வைப்புமகன் காணாமல் போய்விட்டான் என்று கேள்விப் பட்டோமே; அவன் இவன்தானோ?" என்ற கேள்வி சூர்யகாந்தன் மனத்தில் எழுந்தாலும், தரங்கிணிக்கு மட்டும், இவன் ஏதோ சூது செய்யத்தான் தன்னைக் காப்பாற்றினனோ?" என்ற ஐயம் இலேசாகத் தலைநீட்டச் செய்தது.

மூவரும் தன்னைச் சந்தேகக் கண்களோடு கவனிக்கின்றனர் என்பதை ருத்ரசேனன் புரிந்து கொண்டான். அவன் உதடுகள் இலேசாக விரிந்தன. அந்தப் புன்னகை 'சந்தேகம் எவர் மனத்திலும் எளிதில் புகுந்து கொள்ளக்கூடிய உருவமற்ற பயங்கர நடமாட்டம்! அது காற்றுக்கு உடன் பிறப்பானாலும், காற்றைப்போல் பரந்த நோக்கமுடையதல்ல; எனவே, காற்றை நாம் எந்தநேரத்திலும் வரவேற்க உத்தரவளித் திருப்பதுபோல், சந்தேகத்திற்கு இடமளிக்கக் கூடாது நண்பர்களே! அதைப் பலமாக நுழைத்துக்கொண்டால், கற்பூரக் கோட்டையுள், தீப்பொறிக்கு இடமளித்தது போல் தான்" என்ற தத்துவத்தைக் கூறுவதுபோல் தெரிந்தது.

"வீரனே நீயார் என்பதை நாங்கள் தெரிந்து கொள்ளலாமா? உனக்கு தரங்கணியின் விஷயத்தில் ஏன் அத்தனை அக்கறை? அவளுக்கு இந்த ஆபத்து நேரிடும் என்று உனக்கு எப்படித் தெரியும்?" சூர்யகாந்தன் நட்புப்பாராட்டுமுறையிலே இதனைக் கூறினான். அவர் சாந்தமான வார்த்தைகள் ருத்ரசேனனின் இதயத்தைத் தொட்டாலும், 'உண்மையைக்கூற இதுவல்ல சமயம்' என்றெண்ணி, "இதைப் பற்றிய விளக்கம் இன்னும் எனக்கே சரியாகப்புரிபடவில்லை நண்பர்களே! கொஞ்சம் நாளையில் எல்லாம் உங்களுக்குப் புரிய வைக்கும் நிலைமை ஏற்படுத்துகிறேன். முதலில் என்னை நம்புங்கள். நம்பிக்கை அப்படி என் வரை தன் நாவை அசைக்க மறுக்கின்றது என்றால், இதோ இந்த வாளேந்தி எதுவேண்டுமானாலும் என்னை செய்து கொள்ளலாம்" என்றான் வாளை உருவியவனாய்.

சூர்யகாந்தன், அவனை உண்மையிலேயே நம்பினான். அவன்மீது அகலாத ஒரு பற்றும் இயற்கையிலே அரும்பத்தான் செய்தது. அவனை மீண்டும் எதையும் கேட்க மனமில்லாதவனாய், யோசனையில் மூழ்கினான்.

"ஆமாம்,---எனக்கொரு உதவி செய்வீர்களா?" என்றான் ருத்ரசேனன்.

தரங்கிணி சாரங்கனை நோக்கினாள். சாரங்கன் சூர்யகாந்தனை நோக்கினான். சூர்யகாந்தனும்,

ருத்ரசேனனை நோக்கி, "என்ன உதவி வேண்டும் வீரனே? கேள்! முடிந்தால் கட்டாயம்செய்வோம்" என்றான்.

ருத்ரசேனன், ஒருமுறை சூர்யகாந்தனை நன்றிக்கண்களோடு நோக்கினான். "தங்களால் செய்ய முடியும்என்றுநினைக்கறேன். நீர், பாண்டியநாட்டு வீரர்தானே?"

"ஆம்"—இது ருத்ரசேனன் கேள்விக்கு சூர்யகாந்தன் தந்த சுருக்கமான பதில்.

"அப்படியென்றால், பாண்டிய நாட்டு இளவரசர் குலசேர பாண்டியனை நான் சந்திக்க முடியுமா?"

மூவரும் வியப்பில் மூழ்கினாலும், சாரங்கனும் தரங்கிணியும், சூர்யகாந்தனை நோக்கினார்கள். சூர்யகாந்தன் உதடுகளில் இலேசாக புன்னகை மிதந்தோடியது.

"வீரனே! நீ சொன்னயே ஏதோ ஒரு விஷயத்தை விளக்க நிலைமை ஏற்படுமென்று, அப்போது, நீயும் இளவரசர் குலசேகரனைக் காணலாம். அதுவரை நீர் என் நண்பனாக இருக்கலாம்தானே? நானும் உம்மைப் போல், இளவரசரைக்காணவந்த அயல்நாட்டு வீரன்தான். கண்ட பிறகு இப்போது மெய்க்காப்பாளனாகப் பணியாற்று கிறேன், நீ தரங்கிணி ஏற்படுத்திக் கொள்ளாமலே, மெய்க்காப்பாளனாகப் பணியாற்றுவதுபோல! என்றான் சூர்யகாந்தன்.

"தப்பாக பொருள் கொண்டிருக்கிறீர். இவ்வம்மையின் பெயர் தரங்கிணி என்பதே, இப்போது தான் தெரியும்என்றால்,மற்றவை நான் சொல்லத் தேவையில்லை. ஆனால்..., அதற்கு ஒரு காரணமிருக்கத்தான் செய்கிறது"

என்று கூறிவிட்டு, சாரங்கனை நோக்கினான், ருத்ரசேனன்.

"நல்ல வீர நண்பனே! உன்னை நான் நன்கு புரிந்து கொண்ட பிறகு இளவரசரைக் காண ஏற்பாடு செய்கிறேன். முதலில், தரங்கிணியைக் கவனமாக அவள் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போய் விட்டபிறகு, விரைவில் இதே இடத்திற்குத் திரும்பிவா" என்றான் சூர்யகாந்தன். அப்போது தரங்கிணியின் மிரட்சியையும் அவன் கண்கள் காணத்தான் செய்தன. அவன் கண்கள் மட்டுமல்ல, சாரங்கனின் கண்களும் சூர்யகாந்தனை கூர்மையாக நோக்கின.

சூர்யகாந்தன், 'பரவாயில்லை' என்று கூறுவதுபோல் தலையசைத்தான்.

### ரஸ்கின் பேசுகிறார்!

அறிவற்றன் இடத்தையும் காலத்தையும் குறைக்க விரும்புகின்றான். ஆனால் அறிவுள்ளவனோ அவற்றை நீட்டி வளர்க்கவே விரும்புகின்றான்.

கல்வி என்பது தெரியாததைத் தெரியச் செய்வதல்ல, ஒழுக்கத்தை ஒழுகச் செய்தது.

*

மரத்தை மிருதுவாக இழைக்க சோடு நேராகக கிழிக்க, சுவர் கோடால் எழுப்பக் கற்றுக் கொள்ள வேண்டும். அப்படியானால் எந்த மனிதனும் எந்தக் காலத்திலும் கற்பிக்க இயலாத அத்தனை விஷயங்களைக் கற்றுக்கொள்ள முடியும்.

*

எந்த மனிதனும் யோக்கியமான முறையில் வாழ்வதற்கு வேண்டிய பணத்தைத் தேட முடியுமே யன்றி ஏராளமான பணத்தைக் குவித்து விட முடியாது.



சாரங்கன் மனம் அதற்கு இசைவதாகக்காணேம். "என்ன சூர்யா......" என்று சாரங்கன் ஆரம்பித்துக் கூறுவதற்குள், விஷயத்தை எங்கே கெடுத்து விடப் போகிறுன் என்று பயந்த சூர்யகாந்தன் குறுக்கிட்டு, "தரங்கிணியின் உயிரைக் குடிக்கவந்த அந்த உருவம் யார் என்று தானே கேட்க நினைத்தாய்? இது யாருக்குமே தெரியாது" என்று சொல்லிமுடித்து கண்களால் சைகைக்காட்டினுன்.

சூர்யகாந்தனின் இந்தப் பதில் ருத்ரசேனனை அதிகமாகத் தூண்டிவிடவே, "நண்பா! நான் சொல்லுகிறேன், அவனை எனக்கு நன்ருகத்தெரியும். ஏன் என்னையும் அவனுக்கு நன்ருகத் தெரியும். அவன்தான் சேன நாட்டின் வருங்கால மன்னன் கேசவசேனன். அவன் ஒரு பெண் பித்தன். கண்ட பெண்களைச் சுவைப்பதே தொழிலாகக் கொண்டவன். பாண்டிய நாட்டின் நிலைமையைக் காண வந்த அவன், அழகி தரங்கிணியைப் பார்க்கவே, களவாட திட்டமிட்டான். அவன் பகைவன் நானிங்கு இருப்பது அற்பனுக்கு எப்படித் தெரியும்?" என்று பற்களை நெறித்த வண்ணமாகக்கூறுனன்.

எல்லோருக்கும் ஒன்றுமே புரியவில்லை. எல்லாவற்றையும் சாவதானமாகக் கேட்டுக்கொள்ளலாம் என்று நினைத்த சூர்யகாந்தன், ருத்ரசேனனை நோக்கி,

"நண்பா! நல்ல சமயத்திற்கு நல்ல துணைவனாகக் கிடைத்தாய். முதலில் தரங்கிணியைக் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டுவா, பிறகு பேசிக்கொள்ளலாம்" என்றான்.

ருத்ரசேனனும் தன் குதிரையை அவிழ்த்துக்கொண்டு வந்து, தரங்கிணியுடன் நடந்தே சென்றான். தரங்கிணிக்கு என்னமோ உள்ளூர கொஞ்சம்பயம்




இருக்கத்தான் செய்தது. அவர்கள் சென்றதும், சாரங்கன் சூர்யகாந்தனை நம்பிக்கையற்ற கண்களோடு கவனித்தான். இசைப் பயின்றவர்கள் சாந்த சொரூபிகளென்றால், முரட்டுத்தன்மை வாய்ந்த அவநம்பிக்கை ஆட்கொள்வது சாதாரணம். அப்படித்தான் சாரங்கனை அவநம்பிக்கை ஆட்கொண்டது. இதைச் சூர்யகாந்தனும் உணராமலில்லை!

"சாரங்கா! பயப்படாதே. இதோ நான் பின் தொடர ஆயத்மாக இருக்கிறேன். உண்மையில் இந்தவீரனை சோதிக்கத் தான் இப்படிச் செய்திருக்கிறேனே யொழிய வேறொன்று மில்லை மேலும், உங்களை எதிரே வைத்துக் கொண்டு எதையும் விசாரிக்க மனமில்லாமல்தான் இப்படி செய்தேன். நீ ஆசிரமத்தில் இருஉடனே திரும்பிவருகிறேன்'

என்று கூறிய சூர்யகாந்தன், சாரங்கனை வழியனுப்பி விட்டு, ருத்ரசேனனைப் பின் தொடர்ந்தான்.

(தொடரும்)

அடுத்த தொடர்கதை...

★

விருதை வீரர்

ஏ. வி. பி. ஆசைத்தம்பி எழுதும்

★

# காதலும் - கண்ணீரும்

★

விரைவில் ஆரம்பமாகிறது!

சென்ற வாரத் தொடர்ச்சி—

# சரியான பரீட்சை

டி.சின்னத்தம்பி




சே! சே! என்ன அற்ப புத்தி எனக்கு! அப்போது நான்டாக்டர் மனம் பெற்றுல் பின் அது எந்த நிலையில் கொண்டு போய் விட்டிருக்குமோ? பின் அவர் வந்து என்னைப பார்த்தால் என்ன நினைப்பார் அந்த நிகழ்ச்சிகள் ஒரு விதத்தில் ந-ல-ல-து. தான்—என்ன இருப்பினும் அவர் என அறிந்தபின் அதை நல்லது என்று என் மனம் ஏற்கத் தயங்கத்தான் செய்கிறது. எப்படி இருந்தாலும் வழக்கு விபரம் முழுவதும் என் பெரிய அத்தானிடமும் அண்ணனிடமும் இருப்பதால் எல்லாம் நன்றாகவே முடியும், என்று நம்பினேன். அவரைக் கட்டித் தழுவிக கொள்ள என் உடலே துடிதுடித்தது. அந்த நேரத்தில் தோட்டத்தில் வீசிய மென் காற்று என் மனதில் இளம் தென்றலாகவும் புயலாகவும் பிரதிபலித்தது.

அத்தானின் கடமையை நிந்தித்தபடியே நீதிமன்றம் சென்றேன். அண்ணன் நீதி பெரிய அத்தானுக்கு நல்ல பெயர் கொடுக்க வைத்து விட்டது. துக்கத்தால் எரிகின்ற கந்தமலையாகியுள்ள நான் அண்ணனையும், பெரிய அத்தானையும் தீயணைக்கும் படையினர் என்று தான் எண்ணினேன். ஆனால் அவர்கள் எரிகின்ற கந்தக மலையில் "பெட்ரோல் கிடங்கை" திறந்து விட்டு விட்டார்கள். பின்பு என்ன? அவருக்கு ஒரு வாரம் சிறை! இது தான் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு. அதற்குப் பின்னும் அவர் என்னை விரும்புவார் என்று நான் எப்படி எதிர்பார்க்க இயலும்?

நான் நீதி மன்றத்தில் நுழைந்தேன். அவரை பார்க்கக் கூடாது என்று தான் முடிவு செய்திருந்தேன். என் திருட்டுக் கண்கள் என்னையறியாமல் அவரைச் சந்தித்துவிட்டன. அதைவிடப்பெரிய ஆசசரியம்! அத்தனைக் கட்டுக்காவலிலும் இரண்டு கருவண்டுகள் என்னிரு அரவிந்த மலருள் வட்டமிட்டன. அந்த நயனமொழியை, "கற்பகம்! உன்னைக் கைவிட மாட்டேன்," என உரைப்பதாகக் கற்பனை செய்து கொண்டேன். எனினும், "அத்தான்! என்னைக் கைவிட்டு விடாதீர்கள்!" என்று அவர் காலில் விழுந்து கதறவேண்டும் போல் இருந்தது. நான் சுய நினைவால் இருந்தால் தானே! எத்தனை நேரம் சென்றதோ! கண் திறந்தேன. டாக்டர் என் இதய நோய்க்கு மருந்தளித்துத் தோல்வியை ஒப்புக் கொள்ளாது மீண்டும் முயற்சிப்பதைக் கண்டேன். ஒருவாரம் வரை சாகாமல் இருக்க வேண்டும். பிறகு அத்தான் அளித்தால் வாழ்வு. இல்லையேல் சாவு. எங்கள் இன்பப் படகை ஓடவிடுவதும் கடலில் கவிழ்ப்பதும் அத்தான் கையில் இருக்கிறது. ஆகையால் நான் இனிப்பேசவில்லை. பேசினால் உலகில் பைத்தியமாய் விடுவேன்.

**விமலன்:**

கதவைத் திறந்து கொண்டு வந்த அவளைப் பார்த்தேன்; திகைத்து விட்டேன், அவளும் தீயை மிதித்துவிட்டவளாகத்தான் தென்பட்டாள்; விரைவில் தீக்குளிக்கக் கூடத் தீர்மானிப்பாள் என்பதைத் தெளிவு படுத்தி விட்டாள். அந்த இக்கட்டான நிலையிலும் நான் ஒரு பெண்ணைக் கௌரவிக்க மறக்கவில்லை. அவளுக்காக என் நலத்தைத் தியாகம் செய்தேன். என்றாலும் அதில் தமிழரின் தனி ஆனந்தத்தைக் கண்டேன். என் கற்பனைக் காதலி கண்முன் காட்சியளித்தாள் என, என் இளமை உவமைப் படுத்தியதற்கு நான் எப்படிப் பொறுப்பேற்க முடியும்?

முகிலைக் கிழித்து வெளிக்கிளம்பும் முழுமதி போன்றது அவள் கோஷா உடைக்குள் மறைந்திருந்த முகம். எல்லோரும் பார்த்துப் 'பேஷனு'க்கிக் கொள்ள வேண்டிய என்னை அடிமைப் படுத்திக் கொள்ளாதே என்று தன் சுதந்திரத்தை வெளிப்படுத்தின அவள் வைர லோலக்குகள். இடையிடையே மேலாக்கைச் சரிப்படுத்திக் கொண்ட கைகள் வாழைத்தண்டில் தங்கப்பூண் கட்டியிருப்பதை ஞாபக மூட்டின. வாயினைத் திறந்தால் சிரிப்பு ஊற்றுகினதைத் தவிர வேறு எந்த உவமையும் வரவில்லை. ஏறெடுத்துப் பார்த்த போது வில்லையொத்த புருவம் இதுதான் என்று என்னைக் காட்சி முறைக்கு அழைத்துச் செல்லும் ஆசிரியராக இருந்தது. தனித் தமிழ் இனிமையே அவள் பேச்சில் ருசித்தது. கோஷாவாக இருப்பினும் அவள் குமரிப் பருவக் குறுகுறுப்பை என்னால் அறிந்து கொள்ள முடிந்தது. வேல் விழி என்ற கவிஞன் கற்பனையை நான் அன்றுதான் பூரணமாக அனுபவித்தேன். என் கற்பகம் இன்று இப்படித்தான் இருப்பாள் என்று ஒப்பிட்டேன். நான் கற்பகத்திற்கு மற்றவளை அவளோடு ஒப்பிட்டேனே தவிர அவள் மற்றவள்

தானே! ஆனால் அவள் கற்பகமாக என் பக்கத்தில் இருந்தால் என நினைத்தேன். அதன் பின் என் கன்னம் வீங்கிய பிறகுதான் நான் என்ன செய்தேன் என்பது எனக்குத் தெரியும். என் கற்பகம் எனும் நினைவில் ஏதோ சிறு தவறு நிகழ்ந்திருக்க வேண்டும்.

பெண்கள் கையில்தான் எவ்வளவு பலம்! அன்று இரவு இரண்டு மணிக்குப் பதிந்த முத்திரை மறுநாள் பகல் 12 மணிவரை இளக்காமல் இருந்து கோர்ட்டில் சாட்சி கூறின்து என்றால் நீங்களே அந்த பலத்தை மதிப்பிட்டுக் கொள்ளலாம். பெண்கள் கற்புக்காகப் போராடும் நிலையில் பார்த்த எவனோ ஒரு கவிஞன்தான் பெண்களைக் காளி, சூலி, நீலி என்று வர்ணித்திருக்கிறான் போலும்! என்று நான் முடிவு கட்டும் அளவுக்கு சாந்தமே உருவானவள் என்று நான் 'சாடிபிகேட்' அளிக்கத் தயாராக இருந்த அவள் மாறி விட்டாள். நான் கப்பற்படை வீரன்தான் எனினும், அக்கணம் குற்றம் என் மீதே என்பதை உணர்ந்த பிறகு என் ஆண்மையும் வீரமும் எங்கோ ஓடி ஒளிந்து கொண்டன. ஏதோ ஓர் மிருக உணர்ச்சியில் அவள் கன்னத்தில் அறைந்து விட்டேன். என்னால் ஒன்றுமே செய்யத் திராணி இல்லை. தலை குனிந்து உட்கார்ந்து விட்டேன். என் மனம் 'ஸ்பிரிங்' ஆகிக் குதித்தது.

கண்சிமிட்டில் காரிகை யொருத்தியை அடைந்து விட்டேன், கையைப் பிடித்தேன் அக்கன்னி என் கட்டிலறைக்கே வந்து விட்டாள். விகடமாகப் பேசினேன். ஒரு யுவதி என் வீடு தேடியே




வந்து விட்டாள். பாடினேன், ஒரே பாட்டு மறுகணம் ஒரு பாவை என் பஞ்சணையில் நான் கொஞ்சும் கிளியாகி விட்டாள். என் அலங்கார உடையில் ஆசை வைத்த அணங்கொருத்தி என் ஆசைக்கிழத்தியாகி விட்டாள். ஒரு இக்கட்டான நிலையில் வேண்டுமென்றே தான் ஒத்தாசை செய்தேன் ஒரு இளம் பெண்ணுக்கு. அன்றுமுதல் அவள் என் இன்பபுரி ராணிதான். இப்படி என் நண்பர்கள் தீட்டிய காதல் லீலைகள் அனைத்தும் வெறும் கப்சாதான் என்பது இப்போதுதான் எனக்கு விளங்கிற்று. பெண்களை எத்தனை கிள்ளுக்கீரையாக அவர்கள் எனக்கு அறிமுகப்படுத்தி வைத்திருக்கிறார்கள். 'வைரம்', என்பதை அறிய அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை போலும், என்று நினைத்தேன், முடிக்கவில்லை போலீசார் என்னை முற்றுகையிட்டனர்.

இந்த அருவருக்கத்தக்க நிலையிலும் எனக்கு எத்தனை அனுகூலங்கள்! ஆறு ஆண்டுகளுக்கு முன் திருச்சியிலே 'ஹெட் கான்ஸ்டபி

வாக', விட்டுச் சென்ற என் அண்ணன் 'இன்ஸ்பெக்டராக' சென்னையிலே! சர்க்கார் வக்கீலாக இருந்த மாப்பிள்ளையும் அதே மதராசிலே நீதிபதி! அன்புத் தங்கை கமலாவும், ஆருயிர்க் காதலியும் அங்கேயே இருப்பதை அறிந்ததும் நான் ஆனந்த நடனம் ஆடாமலிருந்தது ஒரு புதிர் தான்!

கற்பகம்! ஆஹா!! அவள் பெயருக்கேற்ற அற்புதச் சாதனையைச் செய்து காட்டிவிட்டாள்! ஒரு வாரச் சிறை தண்டனை என்ன? ஒரு யுகம் சிறை என்றாலும் இனி எனக்குக் கவலையில்லை. கேவலம் 1,000 ரூபாய் சம்பளத்திற்காக அந்நிய நாட்டில் ஐந்தாண்டுச் சிறைவாசம் செய்த நான், விலை மதிப்பற்ற கற்பின் களஞ்சியத்திற்காக, அன்புக் காதலிக்காக, சொந்த நாட்டில் ஒரு வாரச் சிறைவாசத்திற்கா தயங்குவேன்?

சிறைக் கதவுத் திறந்தது. என் காதற்சிட்டை நோக்கிப் பறந்து வந்தேன். அவள் 'அத்தான்' என்று என்னை அணைத்துக் கொண்டாள். நான் அன்பாக அவள் கேசத்தை வருடினேன். "முத்துப் பல்லால் என் அண்ணன் இரத்தத்தை ருசிபார்க்க எத்தனை நாள் காத்திருந்தாய் கற்பகம்?" என்றாள் என் கைப்புண்ணைத தடவியபடி என் தங்கை கமலா. 'இல்லை கமலா! முல்லைப்பல்' என்றேன். 'மாப்பிள்ளை கன்னத்தைக் கடிக்கவில்லையே என்று ஏங்குகிறார்! பாவம்! நீ என்னமோ கையைக் கடித்து விட்டதற்காகக் கரிசனப் படுகிறாய்!' என்றார் எங்கிருந்தோ வந்த எங்கள் மைத்துனர் அவருக்கே உரித்தான நீதி கோரும் தோரணையில். கன்னத்தைக் கடிக்கும் நாளில் எங்களுக்கெல்லாம் விருந்தை மறந்து விடாதீர்கள் என்றார்கள் அங்கிருந்த நண்பர் குழாம். 'கற்பகம் எங்கு கடித்தாலும் அவள் அத்தான் கவலைப்பட மாட்டான். அவள்தான் 'ஜூனியர்' லேடி டாக்டராச்சே! ஒரு 'இஞ்சக்ஷனில்' குணப்படுத்தி விட மாட்டாளா!' என்று சொல்லிக் கொண்டே 'மோட்டார் பைக்'கிலிருந்து இறங்கினார் என் அண்ணன். 'இனி மைத்துனனை யாரும் சாதாரணமாகப் பார்க்கக் கூட முடியாது! ஏனென்றால் கற்பகம் தான் அவனை நிரந்தரக் கைதியாகத் தன் மனச் சிறையில் பிடித்து அடைத்து விட்டாளே!' என்றாள் என் மதனி, அண்ணன் வந்த பிறகு தான் வாய் திறக்க வேண்டும் எனக் காத்திருந்தவளைப் போல!

எல்லோரும் சேர்ந்து சிரித்தோம். அவள் மட்டும் சும்மாயிருப்பாளோ! நான் பத்திரிகைக்கு ஒரு விளம்பரம் தரப்போகிறேன் என்றாள். "என்ன என்ன" என்றோம் எல்லோரும் ஏகோபித்து.

பெரிய அத்தானும் அண்ணனும் தாங்கள் நேர்மையானவர்கள் என்று உலகத்திற்குப் பறை சாற்றி உத்தியோகத்தில் நல்ல பெயரும் பதவி உயர்வும் பெற என்னையும் அத்தானையும் இப்படி நடிக்கச் செய்தார்கள். இதை நம்பாதீர்கள் என்று பொது மக்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம். இப்படிக்கு, கற்பகம் & விமலன் என்றாள்.

கேட்கவா வேண்டும்! அந்தப் பங்களா எங்கள் சிரிப்பை எதிரொலி செய்தது! அது உருவம் பெற்றதுபோல சிரித்துக்கொண்டே அப்போதுதான் ஒரு பத்திரி

கையாசிரியர் பரக்கப் பரக்க ஓடி வந்தார். 'நீங்கள் சற்றுத் தாமதித்து வந்தது நல்லதாகப் போய் விட்டது. கற்பகம் சொன்னதை உண்மை என்று நம்பி கண், காது, மூக்கு எல்லாம் வைத்துக் கொட்டை எழுத்தில் பிரசுரித்து விடுவீர்கள்' என்றான் எங்கள் வேலைக்காரன். வந்தவர் பேந்தப் பேந்த விழித்தார்! 'நீங்கள் ஏன் விழிக்கிறீர்கள்? விமலன் கற்பகம் மண விழா நிகச்சியை நாளை உங்கள் பத்திரிகையில் பிரசுரித்துவிடுங்கள்' என்றாள் எங்கள் கமலா.

மறு இரவு தஞ்சை போகும் மெயிலில், ஒரு முதல் வகுப்புப் பெட்டியில் நானும் கற்பகமும் எங்கள் வாழ்க்கை ஒப்பந்தப் பிரயாணத்தை மேற்கொண்டோம். கற்பகம் வெளிக் காட்சிகளை ரசித்தவள் போல் சற்றுத் தள்ளியே அமர்ந்து மௌனம் சாதித்தாள். 'என்ன கற்பகம்! 'கல்கத்தா' மெயிலில் ஒரு மகமதிய வாலிபனுடன் தனிமையில் பிரயாணம் செய்த துணிவுகூட இன்று இல்லையே உனக்கு' என்றேன் வேண்டுமென்றே! 'ஆமாம்! போங்களத்தான்! உங்களுக்கு! பரிகாசம் தான்! நினைக்கவே பயமாக இருக்கிறது அந்த நாளை! அது ஒரு பெரிய சோதனை' என்னுள் கண்களை மூடிக்கொண்டே.

'ஆம் கற்பகம்! நம் காதலுக்கும், என் அண்ணன் கடமைக்கும், உன் அண்ணன் நீதிக்கும், முக்கியமாக உன் கற்புக்கும், சுருங்கக் கூறின் நம் குடும்பத்திற்கே அது ஓர் சரியான பரீட்சைதான்,' என்றேன். நாங்கள் இருவருமே சிரித்தோம்.

தென்னாட்டின் தென்றலும், வெண்மதியும் எங்கள் தனிமையைக் கண்டு சிரித்ததுபோல் எங்கள் கவனத்தைக் கவர்ந்தன. நாங்கள் என்ன இன்னும் மணம் ஆகாதவர்களா, தென்றலுக்கும் பூரண சந்திரனுக்கும் எதிர் சவால் விடாமலிருக்க! எங்கள் நிலை கண்டு அவை வெட்கப்பட்டு எங்கோ சென்று விட்டன. சற்றுமுன் இருந்த குளிர்ச்சி மாறி எங்கள் உடல் சூடேறி விட்டதால் இதை உணர முடிந்தது என்றால் நீங்களும் சிரிக்காமலா இருக்கப் போகிறீர்கள்?

## குண்டு

[உலகப்பிரன்]

குண்டு குண்டு என்கிறார்
குண்டும் செய்யும் செயலினை

எண்ணிப் பார்க்கும் போதினில்
எரியும் நெஞ்சும் அதிகமே!

காவில் வாழும்மிருகம் போல்
கதறி மாள மக்களும்

வான வழியில், கப்பலில்
வந்து குண்டு போடுறார்!

ஏதும் அறியா மக்களை
எதிரி என்று சொல்லியே

சூது மிக்க வழியினுல்
செத் தொழியச் செய்கிறார்!

போட்டி போடும் அரசுகள்
புத்தி யற்ற தன்மையால்

மூட்டி விட்ட வேதனை
முடக்கு கின்ற துலகினை!

# குறளின்பம்

**வி. கரு. இராமநாதன்**

காதல்! காதல்! எதை நோக்கினும், எங்கு தேடினும், அங்கெல்லாம் கிடைப்பது காதலாகவே இருக்கின்ற இந்தக் காலத்தில், காதலைப்பற்றி—இன்பத்தைப் பற்றிக் கூறப் போந்தால் அதுவே ஒரு பெரிய விந்தையாகும். நான் கூறினால் நிச்சயம் "சூள்" கொட்டுவீர்கள். ஆனால் வள்ளுவப் பெருந்தகையார் கூறியிருக்கிறார் என்றால் நிச்சயம் கேட்கத்தான் செய்வீர்கள்.

குழாயடியிலே காதல், ரிக்ஷாவிலே காதல், மோட்டாரிலே காதல், பிளாட்பாரத்திலே காதல், இரயிலிலே காதல், சாலையிலே காதல், பள்ளியிலே காதல், அலுவலகங்களிலே காதல். இப்படியாகக் காதல் முன்னேறி இருக்கின்ற இக்காலத்தில், சாலைவெளி, மாலை நேரம், கதிரவன் தன் பவனி முடிக்கும் வேளை, காற்று வாங்கச் சென்றேனங்கே, கண்டேனொரு காரிகையை, கடைக்கண் பார்வைதான், கவர்ந்து விட்டாள் என்னையவள், கட்டித்தழுவினோம், இறுகப் பிணைத்தோம், காலம் மறந்தோம், கண்விழித்தோம், திகில் கொண்டோம். இப்படியாக வளர்ந்தது காதல் என்று வருணிக்கிறோம்—பேசுகிறோம். அப்படியே எழுதவும் செய்கிறோம். ஆனால் நமக்கெல்லாம் முதல்வராக—நம்மையெல்லாம் மிஞ்சியவராக அமைந்து விடுகிறார் பெருந்தகையார்.

அவர் நல்லனகல். நயமாக நட. காணயமாக வாழ். தருமம் செய். அதையும் தக்கபடி செய். சீராக இரு. சீற்றத்தோடும்வாழ். உலகம் வெகுளி. ஆனால் அதுவே ஒரு கால் உன்னையும் ஏமாற்றும். என்று இப்படியெல்லாம் கூறிய வள்ளுவனார், தனது குறளை அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால்—காமத்துப்பால், என மூவகையாக்கி, போதனையோடு நின்றால் போதாது என்று பொழுது போக்கிற்கோ, அல்லது தான் பாடிய மற்ற இரு பகுதிகளும் நிலைபெறுவதற்கோ, தனது மூன்றாவது பாலில் இன்பத்தைப் புகட்டி இருக்கிறார்.

இன்பம் எப்படி? நானும் கண்டேன், அவளும் கண்டாள், கண்ணோடு கண்ணோக்கின, காதல் கொண்டோம், இன்பம் கண்டோம், என்கின்ற வரிசையிலா?

இல்லை! இல்லை! காதலை-உணர்ச்சியை—இன்பத்தை எவ்வளவு தூரத்திற்கு வளர்க்க முடியுமோ அவ்வளவு தூரத்திற்கு வளர்த்திருக்கிறார்.

காதல் பகுதிகள் ஒவ்வொன்றையும்! ‘அக்கு வேறு ஆணிவேருக’ எடுத்து எடுத்துத் தருகிறுர்.

மாதருடைய கொங்கைகளை—நகில்களை வருணிக்க ஒவ்வொரு கவிஞனும் ஒவ்வொரு முறையைக் கையாண்டிருக்கிறுன். கம்பன் ஒரு இடத்திலே ஆற்றின் இடையே அகப்பட்ட திடல் போன்றது சீதையின் கொங்கை என்றும், மற்ருெரு கவிஞன் விளாம்பழம் போன்றது காதலியின் நகில்கள் என்றும், மற்ருெருவன் கொப்பரை போன்றது கொங்கைமுகம் என்றும், வருணிக்கிறுன். இதிலே இன்னும் எத்துணேயோ வகைகள். ஆனுல் வள்ளுவனுர் அதை மிகமிக நாசுக்காகச் சாயாத கொங்கை என்று ஒரே சொல்லில் சுட்டிக் காட்டிவிடுகிறுர். மற்றவர்கள் சாயாத கொங்கை என்று சொல்வதற்குத்தான் எங்கெல்லாமோ சுற்றிக் கடைசியில் மூக்கைத் தொடுகிறுர்கள்.

அந்த மாதரின் சாயாத கொங்கைகளின்மேல் அணியப்பட்ட ஆடையானது அப்படியே அணிந்தபடி இருப்பதில்லேயாம். காரணம் அவைகள் சாயாத தனங்களாம்! அதற்கு உவமானமாக ஆண் யானேயின் மீது இடப்பட்ட முகபடாம் (முகத்திலிடும் அலங்காரத்துணி) போன்றது என்கிறுர். சாதாரண யானேக்கு இடப்படும் முகபடாமே ஒழுங்காக இருப்பதில்லே. அதிலும் மதயானேக்கு இடப்பட்ட முகபடாம் போன்றது என்கிறுர். அதைத்தான்

“கடாஅக் களிற்றின்மேல்
கட்படாம் மாதர்
படாஅ முலேமேல் துகில்”

என்று நயமாகக் கூறுகிறுர்.

“சற்றே பெருத்துவிட்ட கொங்கை” எனக்கூறிய ஒரு கவிஞருடைய கருத்துக் கொப்ப மங்கையரின் சாயாத தனங்களுக்கு விளக்கமும் தேவையான அடமானமும் கொடுத்த பெருந்தகையார் மங்கையரின் நெற்றிக்கு வருகிறுர்.

அவனே, வீரன். புஜபலபராக்கிரமம் பொருந்தியவன். கண்டோர் பயப்படும் திறம் கொண்டவன்.

போருக்கு மலேக்காதவன். போர் வெறியன். ஆயிரம் படையினராயினும் அழித்தொழிக்கும் வன்மையன் அவன் கூறுகிறுன்

“ஒண்ணுதற் கோஒ
உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணூரும் உட்குமென் பீடு”

“மாமேரெனப் படை கொண்டு தாக்கினுலும் மலேயாத எனது வீரம் கேவலம் இந்த மானிடபிம்பத்துக்கு—ஒளிபொருந்திய இவளது நெற்றிக்குத் தோல்வியுற்றதே” என அவன் வருந்துகிறுன். அவ்வளவில் திறம் கொண்ட ஒரு ஆடவனேயும் தன்பால் ஈர்க்கக்கூடிய திறம் கொண்டது கொடியிடைப் பெண்டிரின்நெற்றி என்று கூருமல் கூறுகிறுர்.

* *

அடுத்துக் குறிப்பறிதல் என்ற அதிகாரத்திற்கு வருகிறுர். இந்தப் பகுதிக்கு வரும்போது வள்ளுவனுர் மனேதத்துவ நிபுணராகவும் மாறிவிடுகிறுர். மங்கையரின் கண்களிலே காணப்படுவது இருவகை நோக்கமாம். அதிலே ஒன்று நோய் செய்யும் நோக்கமாம். அதாவது துன்பந்தரும் நோக்கமாம். மற்ருென்று அதற்கு ஆறுதல் தரும் நோக்கமாம்.

காதலன் காதலியை முதன் முறையாகப் பார்க்கிறுன். அவளும்

அவனைப் பார்க்கிறாள். ஆனால் ஒருவரை யொருவர் நெருங்க முடியவில்லை. முதன் முறைதானே! இருவரும் கண்களாலேயே பேசிக் கொள்கிறார்கள். அதிலே கவர்ச்சியும் ஏற்பட்டு விடுகிறது. காதலி காதலனைத் தன்பால் ஈர்ந்து விடுகிறாள். காதலன் தன்னிலை மறந்து விடுகிறான். இந்நிலையில் காதலி தன் பார்வையைத் திருப்பி ஏனோ காதலனைப் பிரிந்து போய் விடுகிறாள். காதலன் அதே ஏக்கத்தில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வாடி வதங்குகிறான். இதைத்தான் அவளுடைய மைதீட்டப்பட்ட கண்களில் காணப்படும் இருவகை நோக்கங்களில் முதலாவதாகக் கொள்கிறார்.

பின்னர் தூண்டில் பட்ட சின்ன மீன் துள்ளாமலும் இருக்க முடியவில்லை என்பது போன்று அவளாலும் காதலன் இல்லாத தனிமையை ரசிக்க முடியவில்லை. மீண்டும் காதலனைக் காணுகிறாள். முன்பு கொடுத்த துன்பத்தை மாற்ற மறு மருந்தாக—வள்ளுவர் கூறுகின்ற இரண்டாவது நோக்கமாக, மீண்டும் காதல் பார்வையைச் செலுத்துகிறாள். இப்படியாக இரு நோக்கம் கொண்ட கண்களை உடைய மங்கையரை,

"இருநோக்கு இவளுண்கண்
உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய்
மருந்து" என்று கூறிகிறார்.

இத்தோடு பார்வையை நிறுத்தாமல் மேலும் செல்கிறார். தலைவன் தலைவியை நோக்குகிறான்—அதே நேரத்தில் தலைவி தலைவனை நோக்காது தலைகுனிகிறாள். பின் தலைவி தலைவனை நோக்குகிறாள்—தலைவன் நிமிராது குனிகிறான். இப்படியே சிறிது நேரம். பின்னர் ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்கிறார்கள்—எப்படிப் பதினைந்து டிகிரி கோணத்தில். அதுதான் கடைக்கண்ணால் — அவ்வளவு நேரத்திற்குப் பிறகும் ஒருவரை யொருவர் நேரடியாகப் பார்த்துக் கொள்ளவில்லை. அப்பொழுதும் கடைக்கண் பார்வைதான். ஏன் அவர்கள் நேரடியாக ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்ளவில்லை? அவர்களால பார்க்கவும் முடியும்—பார்த்தும் இருக்கலாம். எனப்படி அவர்கள் செய்ய வில்லை! இந்த இடத்தில் தான் அவர் கூறுகின்ற,

"யான் நோக்குங்காலை
நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்"

என்ற பாடலுக்கே பொருள் இருக்கிறது.

நேரடியாகப் பார்த்தால் அதிலே காதல் தவழாதாம், இன்பம் பொங்காதாம், உணர்ச்சி உண்டாகாதாம், அந்தக் கடைக்கண் பார்வையில் தான் அவ்வளவும் அடக்கம் பெறுகிறதாம். பார்த்தீர்களா இன்பச் சுவையை!

இப்படியாகப் பதினைந்து டிகிரிப் பார்வையிலிருந்து பதினைந்து இருபதாக மாறி, இருபது முப்பதாகி, முப்பது அறுபதாகி, அறுபது தொண்ணூறாகி, கண்களோடு கண்கள் நேரடியாகப் பேசிக்கொள்ள ஆரம்பித்து விட்டால் என்னதான் வாய்ச் சொற்களாக இருந்தாலும் அவை பயன்படாதாம் அதைத்தான்,

"கண்ணொடு கண்ணினை
நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனுமில" என்று கூறுகிறார்.

அதை அங்கு அத்தோடுவிட்டு அடுத்த அதிகாரத்திற்கு வருகிறார்.

இங்குதான் அவர் உண்மையிலேயே அனுபவித்துக் கூறி இருக்கிறார். எப்பொழுதும் இன்பமாகவோ அல்லது துன்பமாகவோ இருந்தால் அது பயன்படாதாம்.

காதலர்கள் சந்திக்கிறார்கள். காதலும் ஏற்படுகிறது. புணர்ச்சியும் கொள்கிறார்கள். இன்பமும் நிலவுகிறது. ஆனால் அப்படியே இன்பக் கடலில் இருந்து விட்டாலும் பயனில்லையாம். அத்தோடு ஊடலும் வேண்டுமாம். ஊடல் ஏற்பட்டு அது அப்படியே இருந்து விட்டால் காதல் பரிபூரணத் தன்மை அடையாதாம், ஆதலால் ஊடலை உணரவும் வேண்டுமாம் அப்படி உணர்ந்தால் மட்டும் போதாதாம், மீண்டும் கூடவும் வேண்டுமாம். அப்பொழுது தான் காதல் வாழ்வு நிறைவேறுமாம் —அதன் பயன்களைக் குறைவின்றிப் பெறவும் முடியுமாம். அதைத் தான்,

"ஊடல் உணர்தல்
புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன்"

எனக் கூறுகிறார்.

அப்படி அவர்களுக்குள் ஊடல் ஏற்படா விட்டால் வாழ்வு 'சப்' பென்று போய் விடுமாம. அப்படியே ஊடலோடு இருந்து விட்டால் வாழ்க்கையே பாழ்பட்டு விடுமாம். ஆகவே ஊடவும் வேண்டும், அதை உணரவும் வேண்டும், உணர்ந்து கூடவும் வேண்டும், என்கிறார்.

அவ்வாறு ஊடலேற்பட்டு அதை உணர்ந்து கூடலேற்படும் பொழுது முன்னைய இன்பம் பன்மடங்கு பெருகுமாம்.


வாழ்க்கைக்கு வழிகாட்டி!
இல்லறத்திற்குத் திறவுகோல்!
எஸ். எஸ். வாஸன்
எழுதிய
தம்பதிகள்
சுகமாய் வாழ்வதெப்படி?
குடும்பத்தினர் யாவரும் படிக்கவேண்டிய புத்தகம்
பரிசளிப்பதற்கேற்ற அழகிய கிளேஸ் பதிப்பு
விலை 3-12-0
ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தெரிந்திருக்கவேண்டிய பல அபூர்வ விஷயங்கள் அடங்கியது
ஸ்ரீமகள் கம்பெனி
சென்னை-1


பெண்களுடைய முகத்தை மற்றையோர் தாமரையோடு, திங்களோடு, ஒப்பிடுவர், ஒப்பிட்டு அத்தோடு நின்று விடுவர். ஆனால் இவரோடு அதற்கும் ஒருபடிமேல் சென்று விடுகிறார்.

"மதியும் மடந்தை
முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன்"

வானத்து விண்மீன்கள் வட்டநிலாச்சிட்டு நங்கையரின் முகத்தைக் கண்டு இது மதியோ நங்கை முகமோ என ஐயற்று முடிவு காணமுடியாது திணறு கின்றனவாம். இங்கு வள்ளுவரின் கற்பனை மேம்பட்டு விடுகிறது. தனக்கருகில் உள்ள திங்களுக்கும் நங்கை முகத்திற்கும் வேற்றுமை காணமுடியாத அளவுக்கு அவ்வளவு அழகானமுகம் கொண்டோர் ஆரணங்குகள் எனக்கூறுதல் உண்மையிலேயே வள்ளுவரின் கற்பனைத்திறத்திற்குக் கலங்கரை விளக்காகத் தான் அமைகிறது.

இத்தோடு விட்டாரா? இல்லை! மங்கையரின் பாதத்தைப் பற்றிக் கூறப்புகுங்கால் கற்பனையிலே இன்னும் ஒருபடி அப்பாற் சென்று

விடுகிறார். மாதரின் பாதங்கள் மென்மையானவை என்றால் போதாதா? அதிலே அவ்வளவு சுவை தென்படவில்லையாம். அதை மிக நயம்படக் கூறுகிறார் எப்படி? அனிச்ச மலரும் அன்னப் பறவையின் இறகும் மிகமிக மெல்லியன. அவை தன் பாதத்திலே பட நடந்தாலே நடப்பதாகத் தெரியாது. அப்படிப் பட்டவையே மாதரின் பாதங்களுக்கு நோவு தரக்கூடிய நெருஞ்சிப் பழம் போன்றது என்று வருணிக்கிறார். இதிலிருந்து 'சொல்லித் தெரிவதுண்டோ மன்மதக் கலை' என்பது போல அத்துணை மென்மையினை உடையது என்கிறார் மாதரின் பாதங்களை. அதைத்தான் கீழ்க்கண்டவாறு பாட்டாக உதிர்த்திருக்கிறார்.

"அனிச்சமும் அன்னத்தின்
தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்"

இந்த இடத்தில் தமிழ் மறையார் கற்பனையின் உச்சிக்கே போய் விட்டார் என்றுதான் சொல்ல வேண்டும்.

* *

கணவன் பெயரைச் சொல்ல வெட்கும் காரிகையரைப் போற்றும் நாம், வள்ளுவனார் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்திருந்தால் இக்காலப் பெண்களும் பெண்களோ என ஐயுறநேரும்.

| கலைஞர் கருணாநிதி எழுதியவை | | | | |
|---|---|---|---|---|
| தூக்கு மேடை | ரூ. | 1 | 8 | 0 |
| இரத்தச் சுவடு | | 1 | 0 | 0 |
| புராண போதை | | 1 | 0 | 0 |
| நச்சுக்கோப்பை | | 0 | 12 | 0 |
| கொலைக் களம் | | 0 | 8 | 0 |

கலைமன்றம்—சென்னை-1

இக்காலப் பெண்கள் தன் கணவனுக்குப் 'பெயர'ளவில் தான் மதிப்புக் கொடுக்கிறார்கள். இன்னும் சிலர் கணவன் மீந்த உணவை உண்ணும் வகையிலும் மதிப்புக் கொடுக்கிறார்கள். ஆனால் வள்ளுவனார் காலத்துப் பெண்களோ இக்காலப்பெண்களைவிடச் சொல்லியும் பெருக்கிக் காட்ட முடியாத அளவுக்கு உயர்ந்து விடுகிறார்கள்.

தலைவி தனிமையில் இருக்கிறாள். தோழி ஆகாரத்தோடு வருகிறாள். அப்பொழுது செய்த ஆகாரமாதலால் அவையெல்லாம் நன்றாகச் சுடுகின்றன. தலைவியை அவற்றை உண்ண வேண்டுகிறாள் தோழி. ஆனால் தலைவி மறுக்கிறாள் தோழி வற்புறுத்துகிறாள். அப்படி இருந்தும் தலைவி சூடான பொருள்களை உண்ண மறுக்கிறாள். என்ன தான் காரணமென்று தோழி வினவுகிறாள். அதற்குத் தலைவி இவ்வளவு சூடான பொருள்கள் வேண்டாம், ஆறியனவே கொண்டு வா என்கிறாள்.

அப்படியே ஆறிய உணவுப் பண்டங்களைக் கொண்டுவருகிறாள் அவற்றை உண்டு விட்டுத் தலைவி கூறுகிறாள், "அப்படியே என் காதலர் என் நெஞ்சத்தே உறைந்திருக்கிறார். நான் சூடான பொருள்களைச் சாப்பிட்டால் அவருக்குத் துன்பம் விளையும். அதற்காகத் தான் உண்ண மறுத்தேன்" என்கிறாள். பார்த்தீர்களா என்ன பதி பக்தி என்று. இதையே தான் பெருந்தகையார்

"நெஞ்சத்தார் காத
லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து"

எனக் கூறுகிறார்.

(வளரும்)

CONNEMARA
7 - A 1958



# அத்தைமகள், B.A.

MPS

"இதயன்"

## 1

பணம் படைத்தோர் சிலரில் ஸ்ரீமான் ஐ. பி. நாயுடுகாரு ஓர் அபூர்வம். முதலில், ஐ. பி. யிடமிருந்தது—மூளை திறமைதான். இரண்டினாலும் சற்று பணம் குவிந்தது. வாய்ப்பாக முதல் உலக யுத்தமும் வந்தமைந்தது. 'வார் குவாலிடி' பணக்காரர் ஆகி விட்டார். மூளைக்கும் திறமைக்கும் இப்போது வேலை இல்லை. அவைகள் 'சொல்லாமலே செய்வர் பெரியோர்' என்றபடி, அவரிடமிருந்து சொல்லாமலே விடை பெற்றுக் கொண்டன. ஏனென்றால் இனி, பணம் பணத்தைக் குட்டி போடும் அல்லவா?

பட்டம், பதவி, கவுரவம் என்பவைகள ஐ. பி.யின் நேசமிக்க காதலிகள். காதலிகளுக்குச் செலவு கணக்கிலடங்காது. ஊதாரித் தனந்தான்! ஊதாரிக்கு உதார உள்ளம் ரொம்ப தூரம்.

இன்றைக்கு எல்லாம் கூட்டி, 30 லாகரத்துக்கு செல்வம் தேரும் என்றால், அது திருமதி ஐ. பி. அவர்களாலே தான்! உலகிலே ஒருவனின் பெருங்குறை—ஊதாரிக்கு ஊதாரியான உத்தமி வந்து வாய்த்து விடுவதுதான். இதிலும் நாயுடு கொடுத்து வைத்தவர்தான். செட்டும் சிககனமுமே அம்மாவின் 'பாலிஸி!'

இன்றைய இந்தியாவின் பழ வியாபாரமே ஐ. பியின் காலடியில்! மேற்படி வியாபார உலகிலே அவர் முடி சூடா மன்னர்.

இவர்களிடையே சுமார் 17 ஆண்டுகளுக்கு முன், நல்ல வெயில் நேரத்தில், அதிகப்படியாக ஒரு பையன் வந்து சேர்ந்தான்—ஒரு எட்டு வயசு பாலகன்!

பரட்டைத் தலை. தலைமீது அழுக்கேறிய ஒரு சிறு மூட்டை. அதிலே அவனுடைய பட்டு பீதாம்பரங்கள்! வாடி வதங்கி வேர்த்த முகம். கண்களிலே ஏக மிரட்சி—புது இடம் என்ற காரணத்தால்! வட வட வென்று உடல்! அழுக்கேறிய ஒரு குடுத் துணி, ஒரு சராய் அணிந்திருந் தான். முழங்கால் அளவு புழுதி.

முழங்காலுக்குக் கீழே இரண்டு இடங்களிலே, புண்ணுக்குக் காகித 'பாட்ச்!'

பையனைப் பார்த்தால் ஐயோ பாவம் என்று சுரந்தது. சமீபத்திலேதான் தன் தாய் தந்தையரை இழந்து விட்டவன் அவன்.

·மாளிகை போன்ற' பங்களா முன், கீட்டி முடக்கி படுத்திருந்த 'ரூபிக்கும்' இரக்க சித்தம் இருந்தது. ஏனென்றால் அது பையன் மீது வள்ளென்று விழ வில்லை!

எசமானியம்மாளுக்கு அந்த இரக்க சித்தம் கூட காணோம்.

“பாம்புக்கு பால் வாக்கணுமோ! தன் வீட்டுக் கொள்ளிக் கட்டை என்று கூரைமேலே போட்டுக்கிறதோ?” என்றாள்.

பையனை கூட்டி வந்தவர், 'லோகம்' தெரிந்த கிழம். அன்ன பூரணி, தயாநிதி, மகாலட்சுமி என்று வார்த்தைகளை கொட்டி பேசினார்.

முகஸ்துதிக்கு, வினயம் இன்சொல்லைக் காட்டிலும் 'பவர்' அதிகம்! நாயுடுகாரு அம்மாளை கிழவருடைய முகஸ்துதிமசிய வைத்து விட்டது. அவள் பையனை ஏற்றுக் கொண்டாள்!

கிழவர் செலவு பெற்று சென்றார். செல்லும் போது, “இது உனக்கு அத்தையம்மாடா, அத்தையம்மா! அத்தையம்மா கிட்டே சிரா, ஒழுங்கா இருக்கிக்கோ! படிக்கப் போடுவாங்க! 'தண்டியா' திங்கக் கொடுப்பாங்க! நல்லபடியா இரு!” என்று வாழ்த்தினார்.

அந்தச் சிறுவன்தான் நான்! என்னுடைய அத்தைதான் அவள்! அவளுடைய உடன் பிறந்தவனுடைய ஒரே மகன்தான் நான்! எனினும்—

அனாதையை ஆதரிக்க அவள் தயங்கினாள். மனித உள்ளம் பகை பாராட்டினால் அப்படித்தான்!

அத்தைக்கும் என் தந்தைக்கும் கடும் குடும்பப் பகை. காரணம்: 'எல்லாம் இந்தப் பெண்களால் தான்!' மற்ற எதுவும் எனக்கு இதுவரை தெரியாது.

அனாதை வந்த அன்றே ஒரு வேலையாள் நிறுத்தப் பட்டான். அத்தையின் சிக்கனமும், பகை மனப்பான்மையும் அவனை வாட்டி வதைத்தன! விரோதி மகன் விரோதிதான் என்று அத்தைச் சொல்லிக் காட்டினாள். தண்டச் சோறு... என்றே எனக்கு திருநாமம் வழங்கி விட்டாள்.

அப்படி ஒன்றும் நான் தண்டச் சோறு அல்ல! எனக்கு, 'குருவித் தலை மீது பனங்காயாக' பல வேலைகள்! அவ்வளவையும் நான் செய்தேன். அவ்வளவுக்கும் உதையும் வாங்கினேன். சம்பளம் அதுதான்!

ஆனால் அத்தையை 'சும்மா' சொல்லக் கூடாது! அவள் எனக்கு 'தண்டியாக' 'தீனி' போட்டாள். உழைப்பு, உணவு—இரண்டும் என்னை 'குட்டி தாராசிங்காகவே' வளர்த்தன. ஆடு கொழுத்தால் கசாப்புக் காரனுக்குத்தானே லாபம்!

## 2

புலிக் குகையில் மான்! சிலந்தி வலையில் ஈ! பாம்பு வாயில் தவளை—சிக்கி பத்து ஆண்டுகள் பறந்து விட்டன.

பத்து ஆண்டுகளில் என்னென்ன மாற்றம்! எல்லோருடைய உருவங்களிலே மாற்றம்! தன்மை

யிலே மாற்றம்! வீட்டிலே மா
றம்! மேலும் ஒரு மாடி, பங்கள
மீது கட்டப்பட்டது. அத்தைக்
மேலும் 4 குழந்தைகள்—மூந்
இருந்த இரண்டோடு! நான் மாப
வின் வலக்காம்!—பழவியாபார
தில்! எனக்கிருந்த 'தண்ட
சோறு' என்ன பெயர் மறைந்து
விட்டது. அத்தை மரியாதை த
தாள். மாமா மதித்தார். பிள்ளைகள்
என்னை 'பாவா...பாவா' (மாமா...
மாமா) என்று அழைத்தனர்!

ஆனல், உழைப் பென்னவோ
—பழைய கருப்பன் கருப்பன்
தான்!

அத்தையின் மூத்த குமாரி
இப்போது 16 வயசு வாலைக் குமரி
அவள் மீதே எனக்கொரு கண்—
எப்போதும்!

அந்த அடிநாளில் என் இம்சை
கென்றே பிறவி எடுத்து வந்தவ
அவள். அவளுக்கு ஆறு வய
எனக்கு எட்டு வயசு அப்போது.

'நர்ஸரி ஹோமுக்கு' நா
அவளை அழைத்துச் செல
வேண்டும். நடுச்சாலையிலே தா
போவாள்! என்னோடு ஒத்
ழைத்து வரமாட்டாள். அட
சாதிப்பாள். கோள் கூறுவாள்
வம்புக்கு வருவாள். வேலை வாங்கு
வாள். அடி உதை கொடுப்பாள்—
வீட்டிலேயும் கொடுக்க வைப்பாள்
'தண்டச் சோறு.........தண்டச்
சோறு' என்று என்னை அதிகம்
கூப்பிட்டவள் இவள்தான்!

தும்பிக்கு இம்சை! அதன்
வாயில் குச்சை நுழைத்து விளை
யாடுபவர்களுக்கு வேடிக்கை,
விநோதம்!

இன்றைய அத்தை மகளுடைய
நடத்தைக்கும் அன்றைய சிறுவ
யசு அத்தை மகளுடைய நடத்தைக்
கும் எவ்வளவு வேறுபாடு? ஏன்?

ஞானசேகரி இப்படி என்றாவது ஒரு நாள் திருவாய் மலர்வாள். அன்றைக்கு எனக்கு புனித நாள் தான்.

குனிந்து, புத்தகக் குவியலுடன் காரில் வந்து ஏறிக் கொண்டாள் ஞானசேகரி. காரைக் கல்லூரி நோக்கி விட்டேன். வழியில் ரோஜா மலர்கள் விற்றன. ஞான சேகரியின் இரட்டைப் பின்னலில் ஒரு மலரையும் காணவில்லை! காரை நிறுத்தி விட்டு "இரு ஒன்னு வாங்கிவரேன்" என்று கிளம்பினேன்.

வாங்கி வந்த மலர்களை அவளி டம் நீட்டினேன். கரம் நீட்டி அவை களை அவள் பெற்றுக் கொண்டாள். கணத்தில் சிரம் தாழ்ந்து சிவந்து விட்டாள். என் கண்கள் அவள் கண்களோடு சந்தித்து விட்டன போலும்!

3

பணம் இருக்கிற வரையில்தான் பெயர் பெருமை மகிமை மகத்து வம் எல்லாம். பணம் போய் விட் டால்—? வெறும் பெருங்காய டப் பிக்காவது வாசனை நிற்கிறது. மனிதனுக்கு அது கூட இல்லை. இதே போலத்தான், என்னைப் போல ஏது மற்றதுகளும்! உழைக்க கைகால் வலுவாக உள்ள வரையில் தான் அவர்கள் மனிதர் கள். நோய் நொடியோடு படுத்து விட்டால், அவர்களைச் சீண்டு வாரேது?

20 நாட்களாக நான் படுத்த படுக்கையாகி விட்டேன். வைத்தி யர் வந்து வந்து சென்றார். "இப் போது எப்படி இருக்குது?...சாப் பிட்டாயா: மருந்து?" இவ்வளவு



தான் அத்தை, மாமாவின் அன்பான விசாரிப்பு!

என் மனம் இதைவிட மேலானதொன்றுக்கு ஏங்கி தவிக்கலானது. என் தவிப்பு அடங்கிற்று—பரிபூரணமாக. ஞான சேகரியால் தான அது. அவள் மட்டும் இல்லாமல் போயிருந்தால்......

"பாவா தலையை வலிக்குதா?" என்ன இதம்! ஞானசேகரி தலையைப் பிடித்து விடுவாள். கால்களைக் கூட அமுகதுவாள்.

அவள் கரங்களைப் பற்றிக் கண்ணில் ஒற்றிக் கொண்டேன்.

"ஏன் பாவா அழறீங்க?...... மனசை அலட்டிக் காதிங்க பாவா?"

ஞான சேகரியா? எனக்காக யாரும் ஏற்காத துன்பம் ஏற்கிறாளே? ஏன்?

என் காய்ச்சல், வேகத்தோடு மனப் போராட்டமும் போட்டிப் போடடது.

நல்ல நிசி! நான் உபாதையால் முணகியபடி கிடந்தேன்.

என் நெஞ்சைத் தண்மை மயமான கரங்கள் வருடி விட்டன!

"சின்னி! (ஞான சேகரியின் செல்ல பெயர்) நீயா?" என்றேன்.

:"மருந்து சாப்பிடுங்க பாவா"

மருந்தை வாயில் கொட்டினாள்.

"ஓரே இனிப்பு!" நான் எழ முயற்சித்தேன்.

எனக்கு உதவி செய்து தூக்கி விட்டாள் சின்னி. "வெளியே போவனமா பாவா?"

"ஆமாம்" என்று அவள் மீது துவண்டேன்.

வெளியிலிருந்து அழைத்து வந்து என்னைப் படுக்கையில்விட்டு, படுக்க வைத்தாள்.

"சின்னி அத்தைப் பார்த்தா திட்டுவாங்க"

"அத்தைத் தூங்கறாங்க"

"என்ன மணி, சின்னி?" என்னால் பேசக் கூடமுடியலே, திணறினேன்.

"விடியறது பாவா?"

"பொய் சொல்றே! விடியறது—நோயாளிக்கு அவஸ்தை குறையும்! ஆனல் என் வாழ்வில் விடிவேது சின்னி!"

சின்னி விக்கி விக்கி அழத் தொடங்கி விட்டாள். "ஏன் அழற சின்னி?...ம்...ம்...நா...நான் இப்படியேச் செத்து விட்டால்..."

"பாவா......!" கதறி, நெஞ்சம் பதறியச் சின்னி என்னைக் கட்டி அணைத்துக் கொண்டாள்." பாவா ...பாவா..." என்று அழுதாள்!

நான் அவளை நீக்கி விட்டேன். என கண்கள் கணம் அவள் முகத்தை எறிட்டு நோக்கின. அவ்வளவுதான்! அப்படியே அவளைக் கட்டித் தழுவிக் கொண்டேன் நானும்!

"சினனி! நான் சாக முடியாது... சாக முடியாது" என்று கதறி விட்டேன்.

அந்த அரவணைப்பில் எங்களுக்கு ஒன்று விளங்கி விட்டது—இத்தனை நாள் விளங்காது நின்றது விளங்கி விட்டது. அதுதான்: ஒருவரின் சுகதுக்கங்கள்! ஒருவரை பிரிந்து ஒருவர் வாழ்வது—நீரை நீங்கி மீன் வாழ்வது போல!

1920 மேயில் மாமா பம்பாயில் ஒரு பழமண்டித் திறந்தார். அதன் நிர்வாகம், பொறுப்பு யாவும் என்னிடம் விடப்பட்டது. எனக்கு ஆங்கிலம் படித்த குமாஸ்தா ஒருவன் நியமிக்கப் பட்டான்.

பம்பாயிக்கு வந்து ஓர் ஆண்டு ஓடிவிட்டது. எப்படி ஓடியது? எப்படி ஓட்டினேன்? என்பது எனக்கு விளங்கவே இல்லே. ஏனென்றால், ஞான சேகரியை விட்டு பிரிந்து—ஓர் ஆண்டு கிடந்தது எனக்கு ஆச்சர்யமாகத்தான் இருக்கிறது. என்னால் அவளை மறக்கவே முடியவில்லே. என்னமோ சொல்லுவார்களே—'கனவிலும் நனவிலும், உயிரிலும் உள்ளத்திலும்' என்று! அது போல் ஆகி விட்டாள் ஞான சேகரி.

நான் ஞான சேகரிக்கு தகுதி தானா? அவள் எங்கே, நான் எங்கே? அவன் பி. ஏ. நானோ தற்குறிக்குச் சமம்! அவள் செல்வந்தன் மகள்! நானோ அவள் வீட்டு வேலேயாள். ஒரு ஐ. சி. எஸ்.க்கு வாழ்க்கைப்பட வேண்டியவள்—எனக்கு வாழ்க்கைப் படுவதா? எனக்கு அவளை கொடுக்க பெரியவர்கள் விரும்புவார்களா? வெறும் உரிமை, முறை மட்டும் இருந்து விட்டால் போதுமா? அவள் ஒருத்தி விரும்பி விட்டால் போதுமா?

இந்தக் கேள்விகளெல்லாம் என் மனதில் அணு அளவு கூட எழவில்லே. காதல், ஜாதி, மதம், குருட்டு நம்பிக்கையால் மட்டுமா தடைபடுத்தப் படுகிறது? காதலர்களுக்குள் **தாழ்வு மனப்பான்மை** தோன்றிவிட்டால—அந்த தாழ்வு

மனப்பான்மை செய்து வைகக்கும் தடையைச் சாதி, மதத்தால் கூட செய்து வைக்க முடியாது!

நான் ஞானசேகரியை அடைய தகுதியுடையவன் என்றே உள்ளம் சொல்லிற்று! அவள் படிப்பைப் பற்றி யாராவது கூற வருவார்களானால், "படிப்பு! தூக்கிக் குப்பையில் எறியுங்கள். எனக்கு அனுபவம் உண்டு! அவள் படித்து விட்டாலும் குழந்தைதான்" என்பேன்.

"நீ கஷ்ட நஷ்டம் பட்டவன்! உன்னோடு சேர்ந்த வாழ்க்கை அவளுக்கு சொகுசாக இராதே?" என்று கேள்வி எழுந்திடுமானால், "அவளும் படட்டும்" என்பதே என் விடையாக வருமே ஒழிய, "ஆமாம், ஆமாம்! அவள் சுகப்படுவதைக் கெடுப்பானேன்?" என்று கோழை மனப்பான்மைக் கொண்டு பதில் கூறமாட்டேன்.

என்னதான் என்னிடம் தாழ்வு மனப்பான்மை இல்லா விட்டாலும், அவளை அடைவது எப்படி என்கிற போராட்டம் என்னுள் எழுந்து விடும். இரவில் தூக்கம் வராது. பகலில் நினைவு சுழலும்!

மாமா எனக்கு அவளைக் கொடுக்க ஒருக்காலும் சம்மதிக்க மாட்டார். கொடுக்கிற எண்ணமிருந்தால் அவர் என்னை ஐ. சி. எஸ். வரை படிக்கப் போட்டிருப்பார்.

அப்படியானால் அவளை அடைவது எப்படி? இதுவே என் மனப் போராட்டம்!

நான் இனியும் என் மாமாவுடன் இருக்க வேண்டும்? அவருக்கு உழைக்க வேண்டும்? எனக்குள்ள வியாபார அனுபவம், அறிவு, சிலர் பலருடைய நம்பிக்கையான நட்பு

## அறிவிப்பு

**மே தினச் சிறு கதைப் போட்டியில் கலந்து கொள்ளும் எழுத்தாளர்கள், கையெழுத்தைத் தெளிவாக எழுத மறந்து விடுகின்றனர். மேலும், உரையின்மேல், 'சிறுகதைப் போட்டிக்காக' என்பதையும் எழுத மறந்து விடுகின்றனர். நமக்கு நாளொன்றுக்கு ஏராளமான கதைகள் வந்து குவிவதால், நிபந்தனைகளைப் பின்பற்றி யனுப்பாத கதைகளைப் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ள முடியாது.**

**—போட்டி ஆசிரியர்**

—இவைகளைக் கொண்டு தனியாக நான் ஏன் முன்னேறக் கூடாது?

இப்படிப்பட்ட எண்ணங்கள் வேறு என் உள்ளத்தை வந்து கப்பிக் கொண்டன.

என் போராட்டங்கள் முடிவு காணும் வகையில் எனக்கொரு கடிதம் சின்னியிடமிருந்து கிடைத்தது.

அதிலிருந்து என்னைப் போலவே—என்னையடைய அவளும் போராடியிருக்கிறாள் என்பது தெரிந்தது. உண்மையான காதல் கொண்டுள்ளவர்கள் ஒருவரை ஒருவர் கைசோர விடுவார்களா?

தேவரீர் பாவா அவர்களுக்குச் சின்னி பணிவுடன் வணக்கம் புரிந்து எழுதிக் கொள்வது.

கடிதம் முத்து முத்தான தமிழில் ஓடியது:

உங்களுக்குக் கடிதம் எழுதவே கூட வில்லை. மனம் உணர்ச்சிப் பாரத்தால் தவிக்கிறது. நாணம், வெட்கம் வேறு! 1000 கடிதம் எழுதிக் கிழித்துப் போட்டு விட்டேன். எழுதவே முடியவில்லை.

விருதை ந. இராமசாமி

| | | |
|---|---|---|
| இன்ப நிலா | 1 | 0 |
| வழுக்கி விழுந்தவள் | 1 | 0 |
| மலர்புரி ராணி | 1 | 0 |
| தளபதி | 1 | 0 |
| தாமஸ் மசாரிக் | 1 | 0 |
| இலட்சியப் பெண் | 1 | 0 |
| என் மகள் | 0 | 8 |

கலைமன்றம் — சென்னை-1

உள்ளத்தைத் திறந்து காட்ட முடிய வில்லை.

இறுதியில் நேரடியாக சொல்லி விடுவது என்று வந்து விட்டேன் —துணிந்து.

நான் சிறுவயசில் உங்களுக்கு எத்தனையோ இம்சை கொடுமை புரிந்து விட்டவள். ஆனால், எனக்கு அறிவு தெரிந்த நாள் முதல், நான் யார், நீங்கள் யார் என்பதைத் தெரிந்து கொண்டது முதல், அந்த முறை, உரிமை ஆண் பெண்ணைச் சம்மந்தப் படுத்தும் தொடர் பென்ன என்பதை உணர்ந்து கொண்ட முதல்—உங்களையே என் பிஞ்சு உள்ளம் கணவனாக ஏற்றுக் கொண்டு விட்டது. நான் வளர்ந்தேன்—பெரியவளானேன். அந்த எண்ணமும் வளர்ந்து விட்டது.

உங்களை வீட்டில் வேலை வாங்குவார்கள்! நீங்கள் சளைக்காமல் உழைத்தீர்கள்! என் மனம் கனிவு நிரம்பி வழிந்தது. பரிவு சுரந்தது. நாமாவது கஷ்டம் தராமல் இருப்போம் என்று எனக்கு உண்டாகி விட்டது.

எனக்குச் சிறியவர்கள் எல்லாம் சேர்ந்து கொண்டு உங்களை நச்சரிப்பது, உங்களோடு கண்டபடி அரட்டை அடிப்பது எனக்குப் பொறுக்காது! மரியாதை தெரியாத பன்றிக் குட்டிகள் என்று திட்டத் தோன்றும். என்னுள் தங்களுக்கு அரிய மரியாதை, மதிப்புத் தரவேண்டும் என்று ஏற்பட்டு விட்டது. இப்படியே ஒவ்வொன்றும்—என்னை தங்கள் பால் அடிமைப் படுத்தி விட்டன.

உங்களை ஐ. சி. எஸ். வரை அத்தைப் படிக்க வைத்திருக்கலாம். செய்யவில்லை. மனம் அல்பமானது — பகை பாராட்டினால் அப்படித்தான்.

எனக்கும் உங்களுக்கு மிடையில் பாதாளம் ஒன்று இருக்கிறது என்பது நான் கண்டறிந்து கொள்ளாத ஒன்று! எனக்கு அது புரியவே புரிய வில்லை. நமக்குள் பெரியவர்கள் பேதம் கற்பிக்கிறார்கள். படிப்பில்லை, பவிஷில்லை என்கிறார்கள்.

"உங்களுக்கு முன்யோசனை, பின் யோசனை எதுவுமில்லை!" என்றேன் நான்.

அப்பா என்னைக் கன்னத்தில் அறைந்து விட்டார். "காற்றையும் தீயையும் ஒன்றாக வைத்து விட்டோம்? என் கவுரவம் என்ன ஆவது? கண்ணியம் என்ன ஆவது? ஒரு 'சாதாரணம்' எனக்கு மாப்பிள்ளையாக வருவதா? ஊரில் எனக்கு என்ன மதிப்பு ஏற்படும்?" என்று வெந்து மாய்கிறார்.

அவர் ஒரு ஐ. சி. எஸ். மாப்பிள்ளையை எனக்கு முடித்துக் கொண்டு வந்து விட்டார். நான் மறுத்து விட்டேன். உங்கள் பெயரையும் இழுத்து விட்டேன்! ரகளைக்குக் காரணம் இதுதான்.

வீடே அமர்க்களமாகி விட்டது.

"அவனுக்கு உன்னைத் தரவேண்டும் என்று எங்களுக்கு எண்ணமிருந்தால்—அவனை ஐ. சி. எஸ். ஆக்கி இருப்போம்" என்றாள் அம்மா.

நான் அழுதபடியே "அதற்காக நீங்க வருத்தப்படுங்க" என்று கூறினேன்.

பாம்புக்கு பால் வார்த்து விட்டார்களாம்! விரோதி மகன் விரோதம் செய்து விட்டானும்! எனக்குச் சொக்குப் பொடி போட்டு விட்டார்களாம்...என்னென்ன அர்ச்சனைகள்!

நான் உங்கள் உடமை! உங்களுடன் இருக்க வேண்டியவள்! நீங்கள் எனக்குதான்; நான் உங்களுக்குதான் என்பதை மனமாரக் கண்டு கொண்டவர்கள் நாம்! நீங்கள் நோயுற்ற அந்த இரவுகளை மறந்து விட்டிருக்க மாட்டீர்களே?

பாவா! நான் உங்களுடன் இருக்க; உங்களை அடைய துணிந்து புறப்பட்டு விட்டேன்.

"நில்" என்றார் மாமா.

நான் இப்படி துணிவேன் என்று அவர் அறிந்துதான் செய்திருக்கிறார். திருமண இதழை நீட்டினார். எனக்கு உயிர் வந்தது. ஆனாலும் நம்பிக்கை ஏற்படவில்லை.

"உன்னைப் போல உன் தகப்பன் சதிகாரன் அல்ல" என்று அப்பா கூறினார்.

"என் கவுரவம் நிற்க வேண்டும். கலியாணம் செய்து கொண்டு வீட்டை விட்டுக் கிளம்புங்கள்" என்றார்.

அம்மா என்னை வெறுத்து விட்டாள்.

திருமண நாள் வைத்தாகி விட்டது. இத்துடன் பத்திரிகையும் உள்ளது. புறப்பட்டு வந்து சேருங்கள். பெரியவர்கள் கவுரவத்தை நாம் காப்பாற்றுவோம்.

கடமைக்காக, கவுரவத்துக்காக அவர்கள் திருமணம் நடத்துகிறார்கள்! நமமுள் உண்மையான திருமணம் என்றோ நடந்தேறி விட்டது. அதை அவர்கள் அறியார்கள்.

உங்கள் வரவை ஆவலோடு எதிர்பார்க்கும் என்று தானே தன் திருமணத்துக்கு மாப்பிள்ளையை அழைக்கும்

தங்கள் அத்தைமகள்

**சின்னி.**

மாமாவிடமிருந்து எனக்கு ஒரு எழுத்து வரவில்லை. அவ்வளவு வீம்பு—வெறுப்பு—அலட்சியம்!

## 4

திருமணம் நடந்தேறி விட்டது. 25,000 ரூபாய் செலவு செய்து மாமா ஆடம்பரமாக அதைச் செய்து, ஊரில் தன் கவுரவத்தை நிலை நாட்டிக் கொண்டார். அவர் எவ்வளவு பெரிய ஊதாரி என்னை நான் அப்போது மிக நன்றாகக் கண்டுகொண்டேன்.

"சாந்தி எப்போது?" என்று ஒரு கிழம் கிண்டியது.

மாமாவுக்கு எங்கிருந்தோ கோபம் வந்து விட்டது!


ஒப்பற்றகளஞ்சியங்கள்!

உடனே படியுங்கள் !!

கோவி. மணிசேகரன் எழுதிய

புரட்சிப் புலவன்

**அம்பிகாபதி**

**ஜூலியஸ் ஸீஸர்**

**ஹாம்லெட்** (அச்சில்)

கலைமன்றம்—சென்னை-1

"சாந்தியா?—ஓடுகாலிகளுக்கு!" என்று கூச்சலிட்டார். மணவீடு, மணவீடாக எல்லாரும் நிறைந்து காணப்பட்டது. அவர்கள் சூழ மாமா கத்தி கூச்சலிட்டார்.

மகளை அவமானப் படுத்தவேண்டும், பழிவாங்க வேண்டும் என்றே அவர் நடந்து கொண்டார்.

அவ்வளவு பேர் மத்தியிலும் "புழு சாக்கடைக்குத்தான் நெளியும். நான் எடுத்து வெளியே விட்டது. பிசகுதான்" என்றார் மகளைச் சுட்டி.

மகள் என்றால்—அவருக்குப் பிறந்தவளல்லவா? அவளுக்கும் தீவிரம் வந்து விட்டது. "நான் ஏன் புழுவாகிறேன்? அப்படியானால் இந்த வீடு சாக்கடையா? இரண்டுமில்லை. மாணிக்கம் மகுடத்தில்தங்கப்போகிறது" என்றாள்.

உடனே "வீட்டை விட்டு நட! கிளம்பு! ஒரு கணம் நிற்காதே! நீ எனக்கு இனி மகளும் அல்ல; நான் உனக்கு தந்தையும் அல்ல' என்று கையை நீட்டி வெளி வாசலைச் சுட்டினார்.

என்னிடம் சின்னி அழுது வீங்கிய முகத்தோடு வந்து சேர்ந்தாள். அவளிடம் ஆற்றாமைத் துடிதுடித்தது.

"டாக்ஸி தயாராக இருக்கிறது" என்றேன் நான்.

கதவை இழுத்து தாளைப் போட்டுக் கொண்டாள் அத்தை! அன்னை மகளுக்கு வைரி!

"அவமானம்!" என்று விசித்தாள் சின்னி!

"சின்னி, அந்த நகை நட்டை எல்லாம் கழட்டு! விசி எறிந்து விட்டு வா!" என்று நான் மொழிந்து விட்டு முன் நடந்தேன்.

நான் சொன்னபடியே சின்னி செய்து விட்டு—கணம் கூட அங்கே நிற்க வில்லை—என்னை பின் தொடர்ந்தாள், நிழலென.





# தளபதி

தளபதி தன் சேனையினை எவ்விதம் தலைமைதாங்கி வெற்றி பெற்று வீறுகொண்டு விளங்குகிறான் என்பதை இதில் விளக்குகிறார் பக்கத்துக்குப் பக்கம் பகுத்தறிவு மணம் பதத்திற்குப் பதம் புரட்சிக் கனல் இவைகள் நிரம்பிய மறுமலர்ச்சி ஏடு. வாங்குங்கள்! படியுங்கள்!

விலை ரூ. 1—0—0

முன் பணம் அனுப்பினால் தபால் செலவு இனம்.

விபரங்களுக்கு:

கலைமன்றம் — சென்னை-1

# ஆதிக்க அலை

துரை அரசன்

ஆதிக்க அலை! இந்தியாவின் சரித்திரத்தில் இடைவேளை சிறிதுமின்றி பேரிரைச்சலுடன் எவ்விப் பாய்ந்த அந்த அலை, முதன் முதலாக முகம்மதியர்கள் உருவில்தான் எழுந்தது. இந்தப் பரந்த உபகண்டத்திலே, தேசிய அன்பர்கள் சொல்வது போல் இந்தப் பாரத நாட்டிலே, ஏறத்தாழ எழு நூற்றுண்டுகள் அதிகாரம் செலுத்தி கடைசியில் இருந்த இடம் தெரியாமல் அழிந்து போனது தான் முகம்மதிய சாம்ராஜ்யம்! கஜனி முகம்மதுவின் காலத்தில் தோன்றி, அக்பரின் காலத்தில் அதிகாரத்தின் உச்சியில் அமர்ந்து அரசோச்சி, கடைசியில் ஒளரங்கசீப்பிற்குப் பின்பு கல்லறை பார்த்து கண்ணீர் விட்ட வண்ணம் சென்ற முகம்மதிய சக்தி உலக சரித்திரத்தின் முதல் பக்கத்தில் இடம் பெற்று விட்ட ஒன்று! சிந்து நதியாயும் சிங்கார பூமியும், வண்டல்மண் படிந்து நிற்கும் வளம் நிறை கங்கை பிரதேசமும் தான் அந்த முகம்மதிய வரலாற்றுக்கு முன்னுரை எழுதிக் கொடுத்தன! ஆம்! வட இந்தியாதான் முகம்மதியர்களை வரவேற்றும், அவர்களுக்கு வாழ்த்துப்பா பாடியும் கிடந்தது. ஆனால் அந்த இனத்தின்—முகம்மதியர்களின்—வளர்ச்சியும், வாழ்வும் காட்டாற்றின் கரையில் எழுப்பப்பட்ட கறையான் புற்றாகிவிடும் என்று கனவு கூட கண்டிருக்காது அன்றைய உலகம்!

மூகலாயர்களின் — முகம்மதியர்களின்—தோள் வலியின் முன்னால் எதிர்த்து நிற்க முடியாமல் முதுகெலும்பு ஒடிந்துபோன சிற்றரசுகள் ஏராளம்! பொருளையும், போகத்தையும் கொட்டிக் கொடுத்து முகம்மதிய மன்னர்களின் அருளையும், அன்பையும் பெற்று வாழ்ந்த சமஸ்தானதிபதிகள் ஆயிரமாயிரம்! ஆனால் அத்தகைய முகம்மதிய இனம்தான் சரிந்தது. புகழ் ஏணியின் உச்சியில் அமர்ந்திருந்த அந்தப் புலி நிகர் வீரர்களின் சாம்ராஜ்யம் தான் சாம்பல் மேடாகப் போய்விட்டது. சரித்திரத்தில் இடம் பெற்ற ஒன்றாகி விட்டது. எழு நூற்றுண்டுகள் எது செய்தாலும் 'ஏன்' என்று கேட்க, எதிர்ப்புக் குரல் எழுப்ப எவருமில்லாமல் புயல் போல் வளர்ந்த அந்த முகம்மதியச் சக்தி முடிவில் புயலால் சூறையாடப்பட்ட கூரை வீடாகி விட்டது! உலக அதிசயத்தில் இதைத் தான் முதலிடம் பெற்றதாகக் கருத வேண்டும்! கடலை அடக்கி, எதிரிகளின் உடலைப் போர்க்களத்தில் குவித்து, கடாரத்தை வென்று, சாவகத்தைத் தங்களுக்குக் கட்டி

யம் கூறவைத்து வாழ்ந்த தமிழர் இனத்தின் வாழ்வும், வளமும் மண்ணோடுமண்ணானதைப் போல் தான் முகம்மதிய சக்தியும், முதலில் வளர்ந்து, முடிவில் வாடிவிட்டது. சரித்திரப் போராசிரியர்களுக்கு இது ஒரு சுவையான சிறுகதை! ஆனால் சாதாரண மக்களுக்குப் புரியாத ஒரு புதிர்! ஆம்—உண்மையிலேயே முகம்மதியர்களின் ஆதிக்கம் இந்தியாவில் பரவி, வளர்ந்து, முடிவில் பாழாகப் போனதே ஒரு சுவையான நிகழ்ச்சிக் கோவைதான்!

* * *

பத்தாம் நூற்றாண்டின் தொடக்கம்!

பண்பட்ட தமிழகத்தில் மக்களது உள்ளத்தைப் புண்பட்ட முகமாக்கி, மதமும், மதவெறியர்களும் கோலாகலமாய்க் கோலோச்சிக் கொண்டிருந்த நேரம்! அறிவுக்கும், அறிவின் தூதுவர்களுக்கும் அழிவு சூழ்ந்து கொண்டிருந்த அபாயகரமான வேளை! அப்போது தான் வட இந்தியாவில் கஜனி முகம்மது காலடி எடுத்து வைத்தான். எதற்காக? ஆட்சி புரியவா? அதிகாரம் செலுத்தவா? அரசர்கள் பலரைவென்று அகண்ட சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தவா? இவைகளில் எதுவுமே கிடையாது. இந்தியாவின் செல்வத்தைச் சுரண்டிச் செல்ல—கொள்ளையடித்துக் கொண்டு போக! 'நாவலந்தீவு' என்று நாவலர்கள் கூறும் இந்த நாட்டிற்கு நானாவித இனத்தவரால் நலிவு ஏற்பட்டது என்றால், அது இந்த நாட்டின் வளத்தால் தான்! இந்தியாவின் வளத்தைக் கண்டு, உளத்திலே பேராசை கொண்டு வந்தது கஜினி முகம்மது மட்டுமல்ல! எத்தனையோ இனங்கள், எத்தனையோ நாடுகள் அப்படி வந்திருக்கின்றன. இந்தியாவின் வளம் தான், மத்திய ஆசியாவில் மாடுகளை மேய்த்துத் திரிந்த ஆரியர்களின் கண்ணையும், கவர்ந்தது. அதன் மூலம் ஆரியத்திற்கு நிரந்தரமான அடிமையாகி விட்டது; ஆங்கிலேயர்களும், டச்சுக்காரர்களும், போர்ச்சுகீஸியர்களும் அந்த நாளில் இந்தியாவைக் கடைக் கண்ணால் பார்த்து, நாவினை சுழற்றினார்கள் என்றால் அதற்குக் காரணம் இந்தியாவின் வளம்தான்! அதைக் கொள்ளையடித்துச் செலலத்தான், முகம்மதியச் செல்வன் கஜினி முகம்மது பதினேழு முறை படையெடுத்தான் இங்கு! கொள்ளையடித்தான். கொண்டு சென்றான் தன் ஆசை தீரும்மட்டும்! கோவில்கள் பலவற்றைத் தகர்த்துத் தரை மட்டமாக்கினான். அங்கேயிருந்த செல்வத்தையும் அள்ளிக்கொண்டு திரும்பினான். அதன் மூலம் 'கஜினி' என்ற நகரத்தையே உருவாக்கி, அதை உல்லாஸ புரியாக்கினான். அங்கே இல்லாத வளம் இல்லை. காணாத சுகம் இல்லை. சிங்காரமான அரண்மனைகள், அந்த மனைகளிலே அலங்காரமான மண்டபங்கள்—இவைகள் மட்டுமா? இந்தியாவிலிருந்து அவன் கடத்திச் சென்ற எண்ணற்ற இந்துப் பெண்கள் அந்த அரண்மனைகளிலே அடிமைகளாக்கப் பட்டனர். அப்போது எந்த இறைவனும் இந்தியாவுக்கு உதவ வில்லை! தங்களுக்கிருந்த கோயில்களை உடைத்துத் தகாத செயல் புரிந்த கஜினியை எந்தத் தயாபரனும் தண்டிக்கவில்லை!

இந்தியா விம்மியது. ஆனால் முகம்மதியச் சக்தி வளர்ந்தது!

கஜினி முகம்மது சென்ற வெற்றிப் பாதையில், அவனுக்கடுத்து வீர உலா போட்டு வந்தான் கோரி முகம்மது. இரண்டு ரஜபுத்திர சிற்றரசுகளுக் கிடையில் இருந்த பனை நிழலில் பதுங்கிக் கொண்டு, சமயம் பார்த்துப் பாய்ந்து அரியாசனம் ஏறிவிட்ட சாமர்த்திய சாலி தான் கோரி முகம்மது. அவன் வளர்ந்தான்! அவனோடு முகம்மதிய சக்தியும் வளர்ந்தது!

கோரி முகம்மதுவுக்குப் பின்பு எத்தனையோ முகம்மதிய மன்னர்கள், இந்தியாவில் தங்களது அதிகாரத்தை, செல்வாக்கை வளர்த்துக் கொண்டனர். அவர்களை எதிர்த்து நிற்க அப்போது எவருமே இல்லை வட இந்தியாவில்! எந்த நாடு வீரத் தமிழர்களை இகழ்ந்து பேசிய காரணத்தால் வெற்றி கொள்ளப் பட்டதோ, அதே நாடு முகம்மதியர்களின் கைக்குள் நிரந்தரமாக வீழ்ந்து விட்டது. சாம்ராஜ்யாதிபதியாவதற்காக போட்டிகளுக் கிடையில் கிடந்த வட இந்திய மன்னர்களையெல்லாம் ஒரே கணத்தில் வெற்றி கொண்டு வீரவாகை சூடி விட்டது முகம்மதியச் சக்தி!

அந்தச் சக்தியின் ஒரேநோக்கம் இந்தியாவின் வளத்தைக் கொள்ளையடிக்க வேண்டும் என்பது தான். நிலையான அரசை நிர்மாணிக்க வேண்டும் என்ற நினைவு, பதினோந்தாம் நூற்றுண்டு வரையிலும் இருந்துவந்த எந்த முகம்மதிய மன்னனுக்கும் ஏற்படவில்லை. செல்வம் தான் அவர்களின் லட்சியமேதவிர, செங்கோலல்ல! பணத்தில் புரளும் மன்னர்களாகத்தான் அவர்கள் இருக்க விரும்பினர்களே தவிர, பாராளும் மன்னர்களாக பவனி வர அதிகமாக விரும்பவில்லை! 'கட்டியங் கூறினை தனக்கு அந்தச் சிறு நில மன்னன்' என்பதல்ல முகம்மதியத் தலைவர்களின் கேள்வி—'கப்பம் கட்டி விட்டானு' என்பதுதான்! அந்தக் கப்பம் வாங்குவதை முகம்மதிய மன்னர்கள் விழாவாகக் கொண்டாடினர். அந்த விழாவுக்குத் தான் 'ஜமாபந்தி' என்று பெயர். செல்வத்திலே புரண்டனர்! சிங்காரிகள் பலரோடு தங்கள் வாழ்வைக் கழித்தனர்! செம்மையான அரசு முறையை அவர்கள் நிறுவினர்களில்லை! ஆனல் அதற்குப் பிறகு தான் பாபர் தோன்றினர்! 'பர்கானு' என்னும் பிரதேசம்தான் பாபரைப் பெற்றெடுத்தது!

பாபர்—முகம்மதியச் சக்தியின் முத்து! முகலாயச் சக்கரவர்த்திகளில் முதன்மையானவன்! அவன் தான் முகலாய சாம்ராஜ்யத்தை பதினறும் நூற்றுண்டின் முதல் பாதியில் உருவாக்கினன். இளம் வயதிலே அரியணை ஏறியபோது இருந்த எதிர்ப்புகளை வென்று, முகலாய சாம்ராஜ்யத்திற்கு விதை ஊன்றியவன் பாபர் தான். அது மட்டு மல்ல! நெற்றிவியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டு, உரமிட்டு, நீர்ப்பாய்ச்சி, உலுத்தர்களால் அழிக்கப்படாமல் வேலிகட்டி, அந்த விதை மரமான கோலாகலக் காட்சியைக் கண்டு குதூகலித்தவனும் பாபர் தான்! இந்தியாவை அவன் கொள்ளையடிக்கவில்லை. செல்வத்தைக் கொண்டு செல்லவுமில்லை! செல்வம் இங்கேயே இருந்தது. அதன் அதிபர்களாக முகம்மதியர்களும் இங்கேயே இருந்தனர்.

பாபருக்குப் பின்னல் வந்த அவருடைய பரம்பரையின் ஈடு இணை

யற்ற எழில் விளக்கு தான் அக்பர்! எழுதப் படிக்கத் தெரியாத வித்தை வேந்தன்! ஆனால், "விண்ணும் மண்ணும் அதிர வெறியாட்டம் ஆடிய" சீசரின் காலத்து ரோம் சாம்ராஜ்யமும், வீரமும் தீரமும் விளையாடிய அலெக்ஸாண்டரின் கிரீஸ் சாம்ராஜ்யமும், அக்பரின் முகலாயச் சாம்ராஜ்யத்தின் முன் னல் நிற்க முடியாதவை! உலக வரலாற்றில் எந்த சாம்ராஜ்யமும் அக்பரின் சாம்ராஜ்யத்தை சிறப்பில் ஒத்திருக்க வில்லை! நமது திராவிடத்தைத் தவிர இந்த இந்தியாவே அக்பரின் ஆணைகேட்டு நின்றது! களத்திலே! விளையாடும் வீரர்கள் பட்டாளம் அவர் விரல் அசைந்தால் அசையும்! முகம்மதிய மதத்தை அழித்தால் அதன் பின் முகலாய சாம்ராஜ்யத்தையே, அழித்து விடலாம் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்த எத்தனையோ இந்து மதத் தூண்களை யெல்லாம், இஸ்லாமியத்தின் தூதுவர்களாக மாற்றிய பெருமையும் கூட அக்பருடையது தான்! மத வெறி அவர் காலத்தில் நிலவ வில்லை-! மதவெறியும்—மதத்தால் வாழும் வஞ்சகமும் நிலைத்ததில்லை! ஆனால் முகலாய சாம்ராஜ்யத்தின் கொடி அவருக்குப் பின்னல் தான் கொஞ்சம் கொஞ்சமாகக் கீழ் நோக்கி வந்தது! ஒளரங்கசீப் காலம்வரை அரை மூச்சும், குறை மூச்சுமாக விட்டுக் கொண்டிருந்த முகம்மதிய சாம்ராஜ்யம், அவனுக்குப் பின்னல் மண்ணோடு மண்ணாகி விட்டது. காரணம்? ஒளரங்கசீப் பின் குறுகிய மனப்பான்மையும், குள்ள நரிபுத்தியும், மதவெறியும் கோலோச்சிய முகம்மதிய சக்தி யின் மார்பில் வேல் பாய்ச்சி விட்டது. அவன் காலத்துக்குப் பின் முகம்மதிய சக்தி வளரவில்லை! முறிந்தது—அதனுடைய முதுகெலும்பு ஒடிந்து போனது! ஆம். பதினேழாம் நூற்றாண்டின் இறுதியோடு, முகலாய சாம்ராஜ்யமும் தனது இறுதி மூச்சை வெளியிட்டு விட்டது. இடையிலே ஏழுநூற்றாண்டுகள்! எந்தச் சக்தியும், எந்த நாட்டிலும் இதுவரையிலும் நிலைத்திராத ஒரு விந்தை! ஆனால் முகம்மதியச் சக்தி இந்தியாவில் நிலைத்திருக்கிறது! அரசோச்சி யிருக்கிறது! அதிகாரத்தால் இந்த நாட்டை ஆட்டி வைத்திருக்கிறது!

இந்த ஏழு நூற்றாண்டுகளில் முகம்மதியர்கள் செய்தது என்ன? செல்வத்தைக் கொள்ளையடிப்பதோடு—இந்தியாவின் மன்னர்களாக இறுமாந்து கிடந்ததோடு இருந்து விட்டார்களா?—என்றால் இல்லை! தன் வாழ்நாள் முழுதும் போர்க்களத்தில் செலவழித்து விட்ட அலெக்ஸாண்டரைப் போல், போகக் களத்திலும், போர்க்களத்திலும் மாறி மாறிக் குதித்து முடிவில் சோக முடிவை அடைந்து விட்ட சீசரைப் போல் எந்த முகலாய மன்னனும் இருக்க வில்லை! இருக்க விரும்பியதுமில்லை! முகம்மதியச் சக்தி முன்பிருந்தே முடிவுவரை அழிவுப் பாதையிலேயே சென்றிருந்தால் ஒரு பாபரையும், பாரோர் பார்த்து வியக்கும் ஒரு அக்பரையும் அதனால் கொடுத்திருக்க முடியாது! செல்வத்தைக் கொள்ளையடிப்பதோடு அவர்கள் நின்றுவிட்டிருந்தால், அவர்களது வளர்ச்சிச் சரித்திரத்தை என்றே செல்லரித்து இருக்கும். ஆனால் நிலைமை அப்படி யிருக்க வில்லை! முகலாயர்களுக்கு

இந்தியா எவ்வளவு செல்வத்தைப் பறி கொடுத்ததோ, அதை விடப் பன்மடங்கு பண்பட்ட கலைகளை அது முகலாயச் சக்தியிடமிருந்து —முகம்மதியர் களிடமிருந்து—கற்றுக் கொண்டது.

ஆரியக் கலையைப் போல் அந்த முகலாயர்களின் கலை அனுச்சாரமானதல்ல. "ஒன்றே குலம், ஒருவனே தேவன், என்றே கூறிடுவோம்" என்று பறை சாற்றிய தமிழர் வாழ்வில் நஞ்சு கலக்கி விட்ட ஆரியர்கள் கலையைப் போல், முகம்மதியர்களின் கலை நாடோடிகளின் கலையுமல்ல! சிறந்தது—உயர்ந்தது! உலகமே கண்டு வியக்கத் தக்கது! அந்தக் கலையின் ஒரு அம்சம் தான் இன்று நாம் காணும் உன்னதமான, உயர்ந்தமாளிகைகள் கலைஞரின் வார்த்தைப்படி சொல்லப் போனல் 'வானத்தை முட்டும் கோபுரங்கள்!' ஆம். கட்டிடக் கலைக்கு உயிர் தந்த சக்தி முகம்மதிய சக்தி! சென்னைமா நகரத்தின் 'ரிப்பன்கட்டிடங்கள்', 'சென்ட்ரல் ஸ்டேஷன்', மருத்துவச்சாலை ஆகிய அனைத்தும் ஆங்கிலேயன் கட்டியவைதான்! ஆனல் அந்த கட்டிடக்கலை முகம்மதியர்களுடையது என்பதை நாம் அறிய வேண்டும். அவ்வளவு ஏன்? முகம்மதியர்களின் கட்டிடக்கலைக்கு விளக்கம் சொல்ல, அதோ! யமுனை நதிக் கரையில் ஒரு தாஜ்மஹால்! சலவைக்கல்லால் எழுப்பப்பட்ட சல்லாப மாளிகை! உல்லாஸ புரியின் பளிங்கு மண்டபம்—அது உலக அதிசயங்களில் ஒன்று. கட்டிடக் கலையின் திலகமாம் அந்தத் தாஜ்மஹாலைக் கட்டியவர்கள் முகம்மதியர்கள்! ஷாஜஹான் காலத்தில் எழுப்பப்பட்டது. அது மட்டு


# ஆங்கில ஏடுகள்

ஆசிரியர்: A. S. வேணு அவர்கள் எழுதியவை.

**Dravidasthan**

[வடக்கு, தெற்கின் வரலாற்று உண்மையை வகையாக எடுத்துக் காட்டும் ஆராய்ச்சி ஏடு.]

**Life of Annadurai**

[அறிஞர் அண்ணுவின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் வரலாற்று ஏடு.]

**Verdict on Verdict**

[தென்னட்டு தி.மு.க.வின் ஜூலைப் போராட்டத்தின் விளக்க ஏடு.]

வியாபாரிகளுக்குக் கழிவு உண்டு

கலைமன்றம்
சென்னை-1

மல்ல! டில்லியில் உள்ள ஒரு பெரிய கோபுரம்...'குதுப்மினர்', இந்த இரண்டும் இன்றைய வரையிலும் அழியாத எழிற்குன்றுகள்! அவைகள் முகம்மதியர்களுடையது!

அது மட்டுமெல்ல! விஞ்ஞானத்துக்கு வித்தூன்றியவர்களும் முகம்மதியர்களும் அவர்களுடைய சந்ததியும் தான்! கணித சாஸ்திரத்தை, தர்க்க சாஸ்திரத்தை மேற்கத்திய நாடுகளுக்குக் கடன் கொடுத்தவர்களும் முகமம்தியர்கள் தான்! அவர்களது ஆட்சிக்கு உட்பட்ட "கார் போவா" என்ற இடத்தில் ஒரு சர்வகலாசாலை நிறுவப்பட்டு அங்கே கணிதம் முதற்கொண்டு, விஞ்ஞானமும் மற்ற கலைகளும் ஈறாக அனைத்தும் கற்பிக்கப்பட்டன. அதைத்தான் மேற்கத்திய நாடுகள்கூட கற்றுக் கொண்டன! இத்தகைய அரிய கணித, விஞ்ஞான சாஸ்திரங்களெல்லாம் முகம்மதியர்களுடையது தான். ஆனல் அது வழிதவறிப் போய் ஐரோப்பிய நாடுகளின்—ஆங்கிலேயர்களின் கையில் சிக்கி விட்டது. எனவே அந்த சாஸ்திரங்களில் ஐரோப்பிய நாடுகளின் முத்திரைகள் படிந்து விட்டன.

அதில் மட்டுமா ஐரோப்பிய நாடுகளின் முத்திரை? இல்லை! கண்ணைக் கவரும் ரோஜா—கன்னியர்களின் கன்னத்துக்கு உவமையாகக் கூறுகிறர்களே கலைஞர்கள்—அந்தச்சிவப்பு நிற சிங்காரமலர்—அதை உற்பத்தி செய்தவர்கள் முகம்மதியர்கள்! ஆனல் அந்தப் பெருமையை மற்றவர்களது அறிவைத் திருடி மாநிலத்தில் உயர்ந்து விட்ட ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று விட்டது! இன்றுகூட, முகலாயச் சக்கரவர்த்திகளின் உருவப் படங்களைப் பார்த்தால் ஒவ்வொருவர் கையிலும் ஒவ்வொரு ரோஜா இருப்பதைக் காணலாம். இருந்தாலும் அந்த மலரை உற்பத்தி செய்த பெருமையை இஸ்லாமியம் அடையவில்லை. இங்கிலாந்தும் இன்ன பிறநாடுகளும் அடைந்து விட்டன. உலகமும் அதைத்தான் நம்புகிறது. மேனாட்டு வெறி பிடித்த ஒரு சில ஆராய்ச்சியாளர்கள் அந்த உயர்வை மேனாடுகளுக்கே கொடுத்து விட்டார்கள். திராவிடக் கலையின் வயிற்றிலே தீயவர்கள் சிலர் மண்ணடித்தது போல், முகம்மதியக் கலையின் உயர்வும் மற்றவர்களால் திருடப்பட்டு விட்டது. அவ்வளவு ஏன்?" 'விஞ்ஞான அடிப்படைகள் கொண்ட நூல்கள் சமஸ்கிருதத்தில் நிறைய உண்டு! அவைகள் எல்லாம் உண்டா உங்கள் தமிழில்?" என்று வீம்பு பேசும் வீணர்கள் கூட்டம், மற்றவர்களால் வாழும் அந்த மதோன்மத்தரின் கும்பல், அந்த விஞ்ஞான அஸ்திவாரங்களை முகம்மதியர்களிடமிருந்து தான் துணிந்து திருடியது. அந்தத் திருட்டை ஆரியத்தின்—சமஸ்கிருதத்தின் பெருமைக்கு அஸ்திவாரமாகச் சேர்த்து விட்டது. அது மட்டுமல்ல! பலதிராவிட நாகரீகத்தையும் ஆரியர்கள் திருடினர்கள்! நம்வாழ்வுக்குத் தீ வைத்தார்கள். "உற்ற வயது வந்தபின் தான் பெண்ணுக்குத் திருமணம் நடக்க வேண்டும் என்பது நம்மவர் நாகரீகம். ஆனல் ஆரியம் இந்தியாவுக்கு வருவதற்கு முன், சாரதா விவாகத்தை பால்ய விவாகத்தைத் தான் மேற்கொண்டிருந்தது.

—அடுத்த இதழில் முடியும்

# திரை அரங்கம்

## ஒன்றேகுலம்

திரிவேணி பிக்சர்ஸாரின் முதல் படத்திற்கு முதலமைச்சர் **கனம் காமராஜர்** 'ஒன்றேகுலம்' என்ற பெயரைச் சூட்டினார்.

தென்னாட்டுத் திரைப்பட வரலாற்றிலே ஒரு முதன் மந்திரி, திரைப்படத்திற்குப் பெயர் வைத்தது இதுதான் முதல் தடவை. பிலிம்ஸெண்டரில் நடந்த இந்த ஆரம்பவிழாவிற்குச்சென்னை சட்டசபை சபாநாயகர் ஜே. சிவசண்முகம் பிள்ளை தலைமை தாங்கினார் முதலமைச்சர், 'ஒன்றே குலம்' என்ற பெயரைச் சூட்டியதற்குக் காரணம் நாட்டின் தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும் என்ற ஒரே நோக்குதலில் தான் அப்பெயரைச் சூட்டியதாகக் குறிப்பிட்டார்.

'ஒன்றே குலம்' என்ற அளவிற்குவந்த நமது முதல் அமைச்சர் விரைவில் 'ஒருவனே தேவன்' என்ற முடிவுற்கு வருவார் என்று எவர்தாம் எதிர் பார்க்காமலிருக்க முடியும்? ஒருவேளைமற்றொருபடத்திற்குப் பெயர் சூட்டினாலும், சூட்டுவார்.

## ஆசை

நடேஷ் ஆர்ட் புரொடக்ஷன் ஸார், தமது அடுத்த தயாரிப்பு 'ஆசை' என்ற படம். படத்திற்கான வசனங்களை இளங்கோவன் எழுதிவருகிறார். எம். நடேசன் அவர்களே படத்தை டைரக்ட் செய்வார்.

## மஹாசக்தி

நண்பனைத் தயாரித்து வெளியிட்ட எம். டி. வி. புரொடக்ஷன் ஸார் தற்போது மஹாசக்தி என்ற பெயரில் ஒரு படத்தை உருவாக்க முற்பட்டுள்ளனர். சிவாஜி கணேசன், லலிதா, பத்மினி, என். எஸ். கிருஷ்ணன், மதுரம் ஆகியோர்கள் நடிக்கப் போகும் இப்படத்திற்கான கதையை எம். லட்சுமணன் எழுதியிருக்கிறாராம். வசனங்களை பி. ஏ. குமார் எழுதுவார் என தெரிவிக்கப்படுகிறது.

## மாதலங்

எஸ். எம். என். புரொடக்ஷன் ஸார் மாதலங் என்ற தமிழ் படத்தை வாஹினியில் உருவாக்கி வருகிறார்களாம். ஏ. எஸ். நாகராஜன் இப்படத்தை டைரக்ட் செய்கிறார்.

## சதி பகுளா

ஸ்ரீ. ராஜராஜேஸ்வரி பிலிம் ஸார் ஜெமினியில் சதி பகுளா என்ற படத்தைத் தயாரித்து வருகின்றனர். இப் படம் தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் தயாரிக்கப்படும[illegible]கே. பி. நாகபூஷணம் டைரக்ஷனி[illegible] கண்ணாம்ப[illegible]ஞ்சலிதேவி ஆகியோர் நடி[illegible]ின்றனர்.

# கிளைக் கழகத் தேர்தல்கள்

27-3-55-ஞாயிறு மாலை 5-மணிக்கு சிதம்பரம் வ. உ. சி. தெரு, 57-ம் எண்ணுள்ள இல்லத்தில் பொது உறுப்பினர்கள் முன்னிலையில், மே. வன்னியூர் சொக்கலிங்கம் தலைமையில் தேர்தல் கூட்டம் துவங்கியது.

செயலாளர்: இரா. சக்ரவர்த்தி. துணைச் செயலாளர்: திருவேங்கடம். பொருளாளர்: G. V. கோபால். மா. பிரதிநிதிகள்: தில்லை - வில்லாளன், பா. வை. தெட்சிணமூர்த்தி.

**செயற்குழு உறுப்பினர்கள்:—**

1. பெ. கணபதி, 2. இராம. முத்துக்குமரன், 3. ப. நடேசன், 4. M. கோவிந்தராசு, 5. R. ராமகிருட்டினன், 6. சு. பழமலை, 7. R. தங்கையன், 8. R. நயினா, 9. K. P. சபாபதி, 10. ந. இராமலிங்கம், 11. மு. கண்ணன், 12. C. V. துரைராசன், 13. ப. தெட்சிணமூர்த்தி, 14. க. அறிவழகன், 15. கோ. தட்சிணமூர்த்தி, 16. நா. ரெத்தினம் ஆகியோர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு, செயலாளர் நன்றி நவில இரவு 9-மணிக்கு கூட்டம் இனிது நிறைவேறியது.

* * *

27-3-55 ல நகர தி. மு. கழக தேர்தல் நடைபெற்று, கீழ்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

M. கிட்டு-செயலாளர். A. கண்ணன்-துணைச் செயல[illegible] A. மஜீத்-பொருளாளர், வி. சண்முகநாதன், மே. அ. கந்தசாமி மாவட்டபிரதிநிதிகள், மற்றும் எட்டு செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

* * *

தலைமை நிலைய அறிவிப்புப்படி 27-3-55 மாலை 6 மணிக்கு குணியமுத்தூர் கிளையின் தேர்தல் நடைபெற்ற விபரம்:—

செயலாளர் திரு தங்கமாணிக்கம் துணைச் செயலாளர் திரு சி.அய்யாசாமி, பொருளாளர் திரு. கிருஷ்ணன், மா. பிரதிநிதி கே. எ. பி. முத்து, செயற்குழுவினர் 11 பேர்.

* * *

27-3-55 ல் **சிருமதுரை** தி.மு.க. கிளைக் கழக கூட்டம் கூடி வை. நா. கோபால்சாமி தலைமையில் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளர்கள் பின் வருமாறு:—

செயலாளர் — தீ. அ. பழனி, துணைச் செயலாளர் — N. தனிகாசலம், பொருளாளர் — K. தங்கவேல், மாவட்ட பிரதிநிதி — M. A. தாண்டவராயன்.

* * *

மார்ச் 27உ மானூர் தி.மு.க. செயற்குழு கூட்டம் தோழர் இ. சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது.

அது சமயம் கீழ் கண்டவர்களை நிர்வாக உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டது.

1. சு. இளமாறன்—செயலாளர். 2; அ. இராமசாமி — துணைச்செய

லாளர், 3. அ. கருப்புச்சாமி—நிதிக் காப்பாளர், 4. ப. கருப்பணன்—விளம்பர உறுப்பினர், 5. பெ. தங்கவேல், 6. மா. போ. சண்டாளன் 7. க. நாச்சிமுத்து, 8. இரு. சுப்பிரமணியன், 9. முகமது அனிபா, 10. சு. முத்துகுமார், 11. இ. சுப்பிரமணியன் முதலியோர் நிர்வாக உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

**வடஆற்காடு மாவட்ட தி.மு. க.தேர்தல்**

பொதுச் செயலாளர் அண்ணு அவர்களின் ஆணைப்படி 10-4-55 தேதி 2 மணிக்கு வ. ஆ. மாவட்ட தி. மு. க. தேர்தல் ஆம்பூர் கழக கட்டட மாடியில் திரு. N. V. நடராசன் அவர்கள் தலைமையில் நடைபெறும். எல்லா **மாவட்ட பிரதிநிதிகளும்** கலந்துக் கொள்ள வேண்டுகிறோம்.

குறிப்பு:— அன்று மாலை 6 மணிக்கு தோழர் **A. L. C.** கிருட்ணசாமி தலைமையில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெறும். திரு. **N. V.** நடராசன், **C.P.** சிற்றரசு, **N. A.** ரசித், **V. A.** பசூல், க. நெடுஞ்சோழன், ப. உ. சண்முகம், பேசுவார்கள்.

* * *

27-3-55 துவரங்குரிச்சி, திராவிடமுன்னேற்ற கிளைக் கழகத் தேர்தல் தோழர் அரங்க. இராவணன் அவர்கள் தலைமையின் கீழ் தேர்தல் நடைபெற்றது.

அவ்வமயம், க. கணபதி:—செயலாளராகவும், வீ. ந. இராமச்சந்திரன்:—உதவி செயலாளராகவும், லெ. பெருமாள்:—பொருளாளராகவும், வீ. சதாசிவம்:— மாவட்ட பிரதிநிதியாகவும், கீழ்கண்டவர்கள் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

வி. பி. சபாபதி, நா. சிவலிங்கம், நா. கோ. கந்தசாமி, அ. மாரிமுத்து, தியாக. வெங்கடாசலம், செ. காத்தலிங்கம், கோ. தருமராசு, சா. ஞா. மரியானந்தம், இரா.வீரப்பன், அரங்க-இராவணன், ரா. சின்னத்தம்பி.

* * *

27-3-55 பகல் 2-30 மணிக்கு கழக இல்லத்தில் செயலாளர் **M.** கிருட்ணன் தலைமையில் ஏ. டி. பிரான்சிஸ் **S. V.** பதி முன்னிலையில் கழக தேர்தல் நடைபெற்றது. ஆர். முனுசாமி செயலாளர் பதவிக்காக பிரேரணை. **S. K.** கண்ணன், மு. அ. அரங்கசாமி முன் மொழிதல். **G. S.** அண்ணியப்பன், செயலாளர் பதவிக்காக மா. மன்னர் பிரேரணை. எம். தாண்டவம் முன்மொழிதல். **G. S.** அண்ணியப்பனை செயலாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டது. பொறுப்பாளர் **K.** ரேணு, துணைச் செயலாளர் **J.** ராசுரத்தினத்தை தேர்ந்தெடுக்கப் பட்டது.

**மாவட்டபிரதிநிதிகள்:**

1. மா. மன்னர், 2. **M.** கிருட்ணான், மாவட்டப் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப் பட்டது.

**செயற்குழு அங்கத்தினர்:**

1. **R.** முனுசாமி.2. **M.** கிருட்ணன் 3. **M.** ராமு. 4. **R.** மன்னர். 5. மா. மன்னர் 6. **S. K.** கண்ணன் 7. **M.** தாண்டவம் 8. மு. க. தமிழ்ச் செல்வம் 9. **T.** கிருட்ணன் 10. **C.** தம்பி 11. **V.** அண்ணுமலை 12. **M.** கண்ணன் இவர்களைச் செயற்குழு அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டது. துணைச் செயலாளர் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

# உலக அரங்கம்

## மதுரைக்கும்-சென்னைக்குமிடையே விமானப் போக்குவரத்து

மதுரைக்கும்-சென்னைக்குமிடையே விமானப் போக்குவரத்தை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கிலாந்திலிருந்து ஹெரான் என்ற புது விமானம் கிடைப்பதைப் பொறுத்து அது ஆரம்பிக்கப்படும் தேதி நிர்ணயிக்கப்படும் என்று செய்திப் போக்குவரத்து உதவி மந்திரி ராஜ்பகதூர் மக்கள் சபையில் கே. எஸ். கௌண்டரின் கேள்விக்கு எழுத்து மூலமாகப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

இவ்விமானப் போக்குவரத்து சர்வீஸ் கீழ்க்கண்ட வகையில் நடக்கும். சென்னையிலிருந்து காலை 7-45 மணிக்கு விமானம் புறப்பட்டு பெங்களூர், கோயமுத்தூர், கொச்சி, திருவனந்தபுரம், மதுரை, திருச்சி மார்க்கமாகத் திரும்பவும் சென்னைக்கு மாலை 3-45 மணிக்கு வந்து சேரும். மற்றொரு விமானம் சென்னையிலிருந்து காலை 7-30 மணிக்குப் புறப்பட்டு திருச்சி, மதுரை, திருவனந்தபுரம், கொச்சி, கோயமுத்தூர், பெங்களூர் மார்க்கமாகத் திரும்பவும் மாலை 3-55 மணிக்குச் சென்னைக்கு வந்து சேரும்.

## மாமல்லபுரத்திற்குப் புதுவாழ்வு

மகாபலிபுரம் என வழங்கப்படும் மாமல்லபுரத்தில், ரூ. 1,90,000 செலவில் பிரயாணிகள் தங்குமிடமொன்று அடுத்த நிதியாண்டில் கட்டப்படுமென்றும், இந்தச் செலவை மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் ஏற்றுக் கொள்ளுமென்றும் தெரிகிறது.

மத்திய சர்க்கார் தனது பங்காக இதற்கு ஒரு லட்சம் ரூபாய் அளிக்குமாம்.

மாமல்லபுரத்திற்கு வருகை தருவோருக்கும், அயல் நாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்கும் தங்கும் வசதியும், உணவு வசதிகளும் தருவதே இதன் நோக்கமெனக் கூறப்படுகிறது.

## சர்ச்சில் ராஜினாமா

லண்டன், மார்ச்: 22—

தாம் ராஜினாமா செய்து விடப் போவதாகப் பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகளை நம்பிவிட வேண்டாம் என்று காமன்ஸ் சபையில் பிரிட்டிஷ் பிரதமர். சர். வின்ஸ்டன் சர்ச்சில் இன்று சொன்னார். ஆனாலும், தற்போதைய பார்லிமெண்ட் கூட்டத் தொடர் ஏப்ரல் 5-ந் தேதியுடன் முடிவடைவதுடன் சர்ச்சில் ராஜினாமா செய்தே தீருவார் என்ற கருத்து நிலவுகிறது.

# கேள்விகள்

கே: இவ்வுலகில் உண்மை வாழ்வைக கடைபிடித்து அதன் பயனுல் உயிரிழந்தவர் தொகை அதிகமா? பொய்யைத் தங்கள் வாழ்வின் லட்சியமாகக் கொண்டு அதன் பயனுல் புகழும் செல்வமும் அடைந்தவர் தொகை அதிகமா? தற்கால உலகில் சிறந்த மனிதனுக வாழ எதனை கைக்கொள்ள வேண்டும்?

பழ. சடையப்பன்
உளுந்தூர்பேட்டை

ப: உண்மை என்றும் அலங்காரத்தோடும் ஆணவத்தோடும் பவனி வந்ததில்லை. பொய் தான் உலகில் ஆடம்பரத்துடன் உலவி வருகிறது. இதனை இலட்சியமாகக் கொண்டவர்கள் சில பயன்களை அடைந்தபின் அழிவர். ஆனுல் உண்மையைக் கடைபிடிப்பவர்கள் அழியாமல் என்றும் வெற்றியுடன் வாழ்வர். சிறந்த மனிதனுக இருக்க உண்மையாளனுக இருக்கவேண்டும்.

கே: தான் பிறந்த நாட்டிற்குச் சேவை செய்வதற்கோ தொண்டு செய்வதற்கோ திறமை அற்றவனுக ஆகிவிட்டேனே என்பதற்கு வருந்தாது, தான் நடிகைகளின் பாவடை, ஜாக்கெட்டாக ஆகாமல் மனிதனுகப் பிறந்து விட்டேனே என்று ஏங்கி தவிக்கும் சில இளைஞர்களை என்னென்று அழைப்பது?

டி. லிங்கராஜன்
காரமடை.

ப: தெளிந்த நீருள்ள குளங்களை விரும்பாமல் சேற்றையே நோக்கியே ஓடும் எருமைகளை நாம் என்னவென்று அழைப்போமோ, அப்படியே அழைக்கலாம்.

கே: சுவற்றை வைத்துத்தானே சித்திரம் எழுதவேண்டும். அது போல, வறுமை ஒழிந்தால் தானே மானத்தோடு வாழமுடியும். அப்படியிருக்க மானம் தான் பெரிது என்று வாதாடுவதற்கு (தான்) கருத்து என்ன?

ஆர். ஐயம்பெருமாள்
பட்டுக்கோட்டை

ப: வறியவர்கள் எல்லோரும் மானத்தை இழந்துவிட வேண்டும் என்பது உங்கள் கருத்தா?

கே: வசீகர வனப்புடன் வானத்தில் வட்டமிடும் "வான்மதி"யைக் கண்டு வைவோரையும்! "மல்லிகையின்" மணம் [illegible]ரகமானது என்று மா[illegible] மனதுடன் கூறும் மனிதனையும்,

சிற்பியால் சிரமப்பட்டு சிருஷ்டிக்கப்பட்ட "சிங்காரச் சிலை" யைக் கண்டு இச்சிலையிலே சிறிதும் சிங்காரத்தின் சாயலில்லை என்று சிற்பியின் சிரமத்தை சிறிதும் சிந்திக்காது சிரித்திடும் சிமானையும் எதற்கு ஒப்பிடலாம்?

கே. மஹபூப்கான்
ஓமலூர்.

ப: பைத்தியக் காரனுக்கு ஒப்பிடலாம்.

கே: பச்சைக் குழந்தையின் பசிக்கு பால் இல்லாத இன்னளில் மனிதனுல் உருவாக்கப்பட்ட கல்லுக்கு கடவுளின் பெயரைச் சொல்லி கயவர்கள் பாலை வீணுக இன்னும் ஊற்றிக் கொண்டு யிருக்கிருர்கள். இது மாறும் காலம் எப்போது?

கே. பி. பிச்சைதாஸ்
பெங்களூர்.

ப: இந்தக் கேள்வி மக்கள் அனைவரின் உள்ளத்தில் எழும் நேரத்தில் அந்த நிலைமாறி உண்மை நிலைபெறும்.

| சந்தா விபரம் | |
|---|---|
| உள்நாடு | |
| வருடச் சந்தா | 12—0 |
| ஆறு மாதச் சந்தா | 6—0 |
| வெளிநாடு | |
| வருடச் சந்தா | 13—0 |
| ஆறு மாதச் சந்தா | 6—8 |

...னைப் ... நேசிக்கின்... மணம் செய்துகொள் விரும்புகின்ருள் இப்படி மணம் செய்வது முறையா? தங்கள் அபிப்பிராயம் என்ன?

'கலைமன்றப்' பிரியன்
பொடையூர்.

ப: அந்தப் பெண்ணின் கணவன் சம்மதம் தந்தால் மறுமணம் செய்துகொள்வதில் தவறில்லை.

கே: ஐந்தாண்டு திட்டத்தினுல் தென்னுட்டிற்கு ஏற்பட்டுள்ள நன்மைகள் யாவை?

சுப்பிரமணியன்
தேவகோட்டை

ப: கேள்வியே தவறு! ஐந்தாண்டு திட்டத்தினுல் தென்னுட்டி... ஏற்பட்டுள்ள தீமைகள் ய... என்று கேட்டிருக்கவேண்டும்.

கே: கிருஸ்தவர்கள் தங்க... மதத்தை மட்டும் போற்றி பே... மற்ற மதங்களை இகழ்ச்சியா... பேசுவதின் காரணம் என்ன? அடுத்த மதங்களைப்பற்றி அற... யாத காரணமா? அல்லது தம் மதத்தைப் பரப்பவேண்டும் என்ற கொள்கையா?

P. T. M. தென்மலைச்செல்வன்
பைம்பொழில்

ப: காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சாக இருக்கலாம். ஆனுல் பஞ்சவர்ணக் கிளியையும், காக்கைக் குஞ்சையும் கண்ட கட்டழகி காக்கைக் குஞ்சை வாங்கமாட்டாள். அது போலத்தான் அறிவியக்கம் மதங்களை ஏற்பதில்லை. ஏனென்ருல் மதங்கள் மக்களுக்கு நன்மைகள் செய்ததில்லை.

# ஷேக்ஸ்பியர் -
# சிறப்பு மலர்

உலகப் பெருங்கவி வில்லியம் ஷேக்ஸ்பியரின் பிறந்த தினமாகிய 23-4-55 அன்று, 'கலைமன்றம்' சிறப்பு மலராகப் பவனி வருகிறது!

மலரில் பல பேரறிஞர்கள் நாடகத் தந்தையைப் பற்றிய நல்ல கருத்துக்களை வழங்குகிறார்கள். இன்னும் ஷேக்ஸ்பியரின் படையல்களில் சிலவற்றை நீங்கள் சந்திக்கலாம். அவரைப் பற்றிய புதுப்புது அம்சங்கள் உங்களை மகிழ்விக்கும்.

அதிகப் பிரதிகள் வேண்டும் ஏஜெண்டுத் தோழர்கள், முன் கூட்டியே அறிவிக்கவும்.

**100-பக்கங்கள் விலை : 6 அணா**

**கலைமன்றம்**

த. பெ. எண். 275 — சென்னை-1

Printed and Published by S. Francis at Srimagal Press, 122, Varada-